

# மன்னிக்க மாட்டாயா?



-அருணா நந்தினி



# மன்னிக்க மாட்டாயா?

1



**வா**னம் கறுத்துக் கொண்டு இருந்தது. இப்பவோ எப்பவோ என்று வரக் காத்துக் கொண்டிருந்தது மழை.

மழைக்குறிக் கண்டு பறவைகள் தம் தம் மர இல்லங்களை நாடிக் கொண்டிருந்தன.

மக்கள் நடமாட்டம் குறைந்துகொண்டு வந்தது. மழையில் நனைந்துவிட்டால்...

முன்னெச்சரிக்கையாய் குடையைக் கையுடன் கொண்டு வந்தவர்களுக்கும் அவசரம்தான். உடல் நனையாமல் வீடு சேர வேண்டும்.

சிந்துஜாவும் நல்ல வேளையாய் மழை வரும் முன்னமே வீடு சேர்ந்து விட்டாள்.

வேலையிலிருந்து நேரே குழந்தை கவனிப்பு இல்லத்திற்குச் சென்று சரணை அழைத்துக்கொண்டு, காய்கறி சந்தையில் இரண்டு நாளைக்கு வேண்டிய காய்கறிகளை வாங்கிக் கொண்டு வருவதற்குள் மேகம் இருண்டு நின்றது.

குழந்தையை இறக்கிவிட்டுக் கதவைத் திறந்தாள். கடிதம் ஏதாவது கண்களால் ஆராய்ந்தாள். இரண்டு கடிதங்கள் கண்களில் பட்டன. ஆவலுடன் எடுத்துப் பார்த்தாள்.

ஒன்று, ஏதோ கடைத் திறப்பு விழா... அருகில்தான் என்பதால் அனைவருக்கும் கார்டு அனுப்பப்பட்டு இருந்தது. விற்பனையுத்திதான்.

இன்னொன்று கிரிஜாவிடமிருந்து... மனதில் பரபரப்புடன் கடிதத்தைப் பிரித்தாள், சிந்து.

படிக்கப் படிக்க அவளுள் துடிப்பு ஏறியது. அந்தக் கடிதத்தில் வந்திருந்த செய்தி அவளை பதைக்கச் செய்தது.

**'எந்த நிமிடத்திலும் உதய் வந்து இறங்கலாம். இந்த முறை உறுதியாக இருக்கிறான். அவனுக்கும் ஜெயந்திக்கும் கல்யாணப் பேச்சு நடந்துகொண்டு இருக்கிறது. எல்லாம் என் அக்காவின் வற்புறுத்தலில்தான். இதிலிருந்து தப்பிக்கும் வழி உனக்குத்தான் தெரிய வேண்டும்.**

**அன்புடன்,**

**கிரிஜா.**

கடிதத்தைப் படித்துவிட்டு அப்படியே அமர்ந்து விட்டாள் சிந்து.

எங்கு ஓடுவது?

எங்கே புகலிடம்...?

'அம்மா... பா' குழந்தையின் மழலை அவளை முடுக்கியது.

இயந்திர கதியில் சென்று, வாங்கி வந்த பாலை எடுத்துக் காய்ச்சி குழந்தைக்குப் புகட்டினாள்.



பசுமையான காய்கறியைச் சமைக்க வேண்டும் என்று இருந்த ஆர்வம் அடங்கிப் போனது. வயிற்றில் கிள்ளிக் கொண்டிருந்த பசியும் மாயமாகி அந்த இடத்தை ஏதோ ஒரு பயம் ஆட்கொண்டது.

குழந்தைக்குத் தயாராக இருந்த... காலையில் சமைத்த சாதத்தைப் புகட்டிவிட்டுப் புறப்பட்டுவிட வேண்டும். சமைத்துக் கொண்டிருந்தால் நேரம் ஓடிவிடும். அவன் வந்து குதித்தாலும் குதிக்கலாம்... அதற்குள் இங்கிருந்து ஓடிவிட வேண்டும். அவளுள் ஏதோ அசுரத்தன்மை எழுந்து பயத்தையும் சோர்வையும் ஓட்டிவிட... துரிதமாய் செயல்பட்டாள்.

ஒரு தோள்பையில் குழந்தையின் துணிமணிகளையும் தன் துணிகளையும் துருத்திக் கொண்டு, குழந்தையின் பால் பாட்டில்... மருந்து வகைகளை ஒரு கைப்பையில் அடுக்கிக் கொண்டு... ஏதோ ஒரு சேலையில் உடலைத் திணித்துக் கொண்டு...

அவசரமாய் குழந்தைக்கு உணவை ஊட்டிவிட்டு... ஆயிற்று... புறப்பட்டாயிற்று.

சரி.. எங்கே..? எந்த இடத்திற்கு...?

ஒரு நிமிட விழிப்பு...

அக்கா இடத்திற்கு. ஊகூம்... அங்கு போகவே முடியாது.

சித்தி வீட்டிற்கும் மாமா வீட்டிற்கும் ஏற்கனவே சென்று ஒளிந்தாயிற்று.

முதல் தடவை அவனைச் சந்திக்கவும் பயந்து ஓடி ஒளிந்தது சித்தியின் வீட்டுக்குத்தான்.

இரண்டாவது தடவை மாமாவின் வீட்டுக்குத் திடீர் விருந்தாளியாய் போய் நின்றாள்.

uploaded by Naghu

உறவில் வேறு யாரும் இல்லையே... இருந்தால் இந்த முறை அங்கு போகலாம்.

தோழி வீட்டுக்கு... தனக்கு இருப்பது ஒரே ஒரு தோழி... நெருங்கியவள் என்று சொல்ல முடியா விட்டாலும் போனால் தங்கலாம். முகம் சுளிக்க மாட்டாள்.

அதுதான் சரி. ரமாவின் ஊருக்கு... மதுரைக்குச் செல்ல வேண்டும்.

கிரிஜா உடன் தகவல் அனுப்பி இருந்தால்... இந்த அவசரம் இருந்திருக்காது.

செய்தியைத் தாமதமாய் அனுப்பியிருக்கிறாளே... மனதினுள் அங்கலாய்ப்பு எழுந்தது.

அடுத்த கணமே... ஐயோ பாவம்... அந்த ஒரு ஜீவனாவது தனக்காக இறங்கி உதவுகிறதே என்று சமாதானம் அடைந்தாள்.

போன் இருந்தாலாவது உடன் தெரிவித்திருப்பாள். இல்லையே...

வருகிற சம்பளத்தில் ஒரு குழந்தையை வளர்த்து ஆளாக்குவதே உன்பாடு என்பாடாக இருக்கும்போது போன்ற வேறு கேடா?

ஈசுவரா... இன்னும் எத்தனை நாளைக்குத்தான் இந்த ஒளிந்து திரியும் விளையாட்டு... அலுத்துச் சலித்துப் போகிறதே.

குழந்தையை எடுத்துக் கொண்டு தன்னந்தனியாய் சுற்றுவதும் முடிகிற செயலா... நினைக்கவும் சகிக்க வில்லையே...

uploaded by Naghu



எல்லாவற்றையும் சரி பார்த்து விளக்கை அணைத்து விட்டுப் புறப்படும் நேரத்தில் சரண் 'பாத்ரூம்' காட்டி அழுதான்.

மறுபடியும் அவனது அரைக்கால் சட்டையை மாற்றி புறப்படும்போது மணி ஏழரை ஆகிவிட்டது.

வெளியே பெருமழை வேறு...

இன்னும் கதவைப் பூட்டி பக்கத்து மாமியிடம் சொல்லிவிட்டு, அவளது கேள்விக் கணைகளுக்கு பதில் சொல்லி... புறப்பட பதினைந்து நிமிடங்கள் பிடிக்கலாம்.

நான் புறப்பட்டுச் செல்லும் வரை 'உதய்' வரக்கூடாது.

'எப்படியாவது தடுத்து விடு முருகா... அவன் வருவதற்குள் இந்த ஊரை விட்டு நான் சென்றுவிட வேண்டும்' மனதினுள் வேண்டிக் கொண்டாள்.

இரண்டுமுறை தன்னைக் காப்பாற்றிய கடவுள் இந்த முறையும் காப்பாற்ற மாட்டாரா என்ன... நிச்சயம் செய்வார். அந்த நம்பிக்கையுடன் புறப்பட்டாள்.

தோளில் ஒரு பை... கையில் ஒரு பை... கையால் குழந்தையைப் பிடித்துக் கொண்டு கதவைத் திறந்தாள்.

'ஓ'வென்ற இரைச்சலுடன் மழை... வெளியே இருட்டு வேறு. வெளியே வந்து கதவைப் பூட்டிவிட்டு குடையை விரிக்க நினைத்தவளின் கண்களில் ஏதோ ஒரு அசைவு தெரிய... திரும்பினாள்... அதிர்ச்சியில் உறைந்து போய் நின்றாள்.

தன் வேண்டுதல் முருகனின் செவியில் போய் சேர வில்லையோ...

இல்லை... இந்த முறை இயலாமையால் தன்னைக் கைவிட்டு விட்டாரா?

கண்களையும் இமைக்க மறந்து வெறித்து நின்றாள், சிந்து.

வெளிச்சுவற்றில் சாய்ந்தவாறு நின்றிருந்த உதய்சங்கர்... அவளது கணவன்... அவளைப் பார்த்ததும் நிமிர்ந்து நின்று அவளை உறுத்துப் பார்த்தான்.

அவன் பார்வையில் கனல் வீசியது.

2



'எத்தனை வினாடிகளோ... எத்தனை நிமிடங்களோ தெரியாது.

தன் முன் உயர்ந்து நின்றவனையே விழித்துப் பார்த்தாள்.

வந்துவிட்டானே...

யாரிடம் இருந்து தப்பிக்க நினைத்தாளோ அவன் வந்தே விட்டான்.

விலாங்கு மீனாய் இரண்டு முறை அவன் பிடிக்கு கிடைக்காமல் நழுவிச் சென்றவள் இந்த தடவை வலை மீனாய் சிக்கி விட்டாள்.

ரொம்ப நேரமாய்க் காத்திருப்பான் போலும். கதவைத் தட்டினால் உஷாராகிவிடுவாள். திறக்க மாட்டாள். வெளி உலகத்தில் அது அசிங்கமாய் படும் என்ற எண்ணமாகவும் இருக்கலாம்.

அது மட்டும் இருக்காது. அவள் வேண்டும் என்றே தப்பித்துச் செல்கிறாளா என்று உளவு பார்க்கவும் இருக்கலாம். கையும் களவுமாய் பிடிக்க வேண்டும் என்று எண்ணிக் காத்திருக்கிறான்.

uploaded by Naghu



உறுமின் வருமளவு காத்திருக்கும் கொக்குபோல பொறுமையுடன்...

பொறுமை?

அதற்கும் அவனுக்கும் ரொம்ப இடைவெளி. பொறுமை யிழந்திருந்தால் இப்படிப் பிரிந்து வாழ்ந்திருக்கத் தேவை யில்லையே...

பொறுமையுடன் யோசித்துப் பார்த்திருந்தால்... மவுனத்தைக் கலைத்து அவனே பேசினான்.

''எங்கே ஓட நினைக்கிறாய்...? எவ்வளவு தூரம்... எத்தனை நாள் ஓடுவாய்...?'' அவனது குரலிலும் சினம் தெரிந்ததை உணர்ந்தாள்.

''ஓடி ஒளிந்து எதை சாதிக்க நினைக்கிறாய்... நீ தூய்மையானவள் என்றா... அது உன்னால் முடியவே முடியாது...'' அவனது குரலில் தெரிந்த எகத்தாளம் அவளை சிலுப்பியது. முகத்தை நிமிர்த்தி அவனைப் பார்த்தாள். அவனது உயரம் அவள் பார்வையை நிமிரச் செய்தது. ஆறடிக்கும் மேல் உயரம்... உயரத்திற்கு ஏற்ற உடல்கட்டு.

வானளந்த பெருமாள் முன் மாபலி நின்றது போல அவள் மனதில் பட்டது.

உள்ளுக்குள் ஏற்பட்ட சிறு நடுக்கத்தை மறைத்துக் கொண்டு அவனை உறுத்துப் பார்த்து, ''காமாலைக் கண்டதெல்லாம் மஞ்சள்தான்'' என்றாள்.

''அப்படியென்றால்...?''

''உங்கள் மனதைக் கேட்டுப் பாருங்கள்... புரியும்...''

அவன் பேச வாயெடுக்கும்போது, ''அம்மா...'' என்ற குரல் கேட்டு அவனது பார்வை திகைப்புடன் தாழ்ந்தது.

அந்த இருட்டினுள் ஒரு சின்ன உருவம் தன் மனைவியின் கால்களைக் கட்டிக்கொண்டு ''தூக்கு'' என்பதுபோல கை நீட்டிக் கொண்டிருப்பதைக் கண்டான்.

அவளுடைய மகனாகத்தான் இருக்கும். அவனுள் ஏதோ எரிந்தது.

அந்த குழந்தை யார் போல...

யார் போல இருப்பான்... அந்தக் குழந்தையின் தந்தை போல... அவன்... யார்...?

குழம்பிய மனதுடன் குழந்தை முகத்தை கூர்ந்து கவனித்தான்.

சிந்துஜா குழந்தையைத் தூக்கி கைவளைவில் அமர்த்திக் கொண்டாள்.

மழை கொஞ்சம் நின்று... தெருவிளக்கின் வெளிச்சம் உள்ளே விழுந்தது.

குழந்தையின் முகத்தைப் பார்த்தவன் அப்படியே திகைத்து நின்றான்.

குழந்தை அவனுடைய அச்சு... அவனின் மறுபதிப்பு...!

குழந்தை அவனுடையதுதான்... அவனுடைய ரத்தமும் சதையும்... அவனுள் அந்த உண்மை சில்லிட்டது.

தான் தாய்மையுற்றதை அவள் சொன்னபோது அரக்கத் தனமாய் பேசினது நினைவுக்கு வந்தது.

''யார் குழந்தை?'' என்று இரக்கமின்றி கேட்டு அவளது இதயத்தை வார்த்தை முள்ளால் குத்திக் கிளறியதும் நினைவுக்கு வந்தது.



தொண்டையைக் கனைத்துக் கொண்டான். ''என்னை உள்ளே அழைக்க மாட்டாயா சிந்துஜா?'' என்றான். அவள் வியப்புடன் பார்த்தாள்.

சிந்துஜா...

முழுப்பெயர் உச்சரிப்பு... அவன் ஒருநாளும் அப்படி அழைத்ததில்லை... முதல் சந்திப்பில்தான் சிந்துஜா...

'சிந்து... சிந்தும்மா...!' குழைவுடன் அவன் அழைக்கும்போது கேட்க இனிமையாய் இருக்குமே. வேதாளம் முருங்கைமரம் ஏறியது போல மறுபடியும் சிந்துஜா...?

மனதில் கனம் ஏற கதவைத் திறந்து உள்ளே சென்றாள்.

அவளைத் தொடர்ந்து உள்ளே வந்தவன் கண்களைச் சுழற்றி வீட்டை அளந்தான்.

சின்ன வீடு... கச்சிதமாய் இருந்தது. மேஜை நாற்காலிகளின் தரமும், திரைச்சீலைகளின் பழமையும் சிந்துவின் நிலைமையை பறைசாற்றின.

அவனது கண்கள் ஒவ்வொன்றையும் கூர்ந்து கவனிப்பதையும்... உதட்டோரம் லேசான சுழிப்பையும் கண்டு அவள் மனம் குன்றினாள்.

அடுத்த கணமே நிமிர்ந்தாள்.

ஏன் குனியணும்? ஏன் மனம் குன்றிப் போக வேண்டும்?

கணவன் சரியாக இருந்திருந்தால் தனக்கு இந்த நிலை வந்திருக்காதே.

இந்த ஏழ்மை நிலைக்கு இவன்தானே காரணம்... பார்க்கப் போனால் இந்த நிலைமைக்கு... மனைவியை கஷ்ட நிலைக்குத் தள்ளியதில் இவன்தான் குன்றிப் போக வேண்டும்.

'இது என் வீடு... அதில் எனக்குப் பெருமைதான்...' அவள் மனதினுள் முணுமுணுத்தாள். அதே எண்ணத்துடன் அவனைப் பார்த்தாள்.

தீப்பெட்டியைப் போன்ற சின்ன வீட்டில் அவன் உலகளந்த பெருமாள் போலத் தெரிந்தான்.

''இந்த சின்ன வீட்டிலா என் மகன் வளருவது...?''

எதிர்பாராமல் அவன் கேட்ட கேள்வி அவள் மனதை அதிரச் செய்தது.

'என் மகன்...?' இதுநாள்வரை இல்லாத உறவு... இன்று முளைத்து விட்டதோ.

''என்ன... பதிலைக் காணோம்...?''

''உங்கள் மகனா... யார் சொன்னது... அதற்கு என்ன ஆதாரம்...?''

அவனது வார்த்தைகளை அவனுக்கேத் திருப்பினாள்.

சிரித்தான் அவன்.

''வார்ப்பு போல என்னை ஒற்றிப் பிறந்திருக்கிறான். ஆதாரம் வேண்டுமா என்ன... ஓ... அன்றைக்கு நான் சொன்னதா... என்ன செய்வது... சூழ்நிலை அப்படி... என் நம்பிக்கையைக் கெடுத்து விட்டதே...''

தாயின் அருகில் நின்றிருந்த மகன் தன் தந்தையை புதிய மனிதனைப் போல விரிந்த கண்களால் பார்த்துக் கொண்டிருந்தான். அவனது கை தாயின் உடையை இறுகப் பற்றிக் கொண்டிருந்தது. அவன் பயந்திருந்தான் என்று தெரிந்தது.

''பெயர் என்ன?'' கண்களை மகன் மீது பதிய விட்டு கேட்டான்.



''சரண்...''

''சரண் கண்ணா... இங்கு வா...'' கை நீட்டி மகனை அழைத்தான்.

இன்னும் தாயுடன் ஒட்டிக்கொண்டு தலையைத் திருப்பிக் கொண்டான்.

''இப்போது எதற்கு இந்த திடீர் விஜயம்...? விவாகரத்துக்கு என்னுடைய ஒப்புதல் வேண்டும் அவ்வளவுதானே... விடுதலை பத்திரத்தைக் கொடுங்கள்... கையெழுத்துப் போட்டுத் தந்து விடுகிறேன்... எனக்கும் கண்ணாமூச்சி விளையாட்டு ஆடி அலுத்துப் போய்விட்டது...''

சரணடைவது போல ஒப்புக் கொள்வதில் அவமானமாகத்தான் இருந்தது. ஆனால், எத்தனை நாள் தாக்குப் பிடிக்க முடியும்... எத்தனை முறை அவன் கண்களிலிருந்து ஓடி ஒளிய முடியும்...?

அவன் மனம் மாறுவான் என்ற நப்பாசையும் போய் விட்டது. தன் மீது அவன் கொண்டிருக்கும் தவறான ஊகம் மாறும் என்ற நம்பிக்கையும் போயே விட்டது.

அவன் மணம் புரிந்து கொள்ளப் போகிறான்... அதற்கு தான் தடையாய் இருக்க வேண்டும்?

இது சுடும் மண்... இனி ஒட்டாது... எப்படியும் தனியாக இருக்கப் பழகிக் கொண்டாகிவிட்டது... இப்படியே வாழ்ந்து விடலாம்... துணைக்கு மகன் இருக்கிறானே...

சாண் பிள்ளையானாலும் ஆண் பிள்ளையாயிற்றே... அவன் துணை போதும்... காலத்தைக் கழித்து விடலாம். எங்கிருந்தாலும் வாழ்க என்று வாழ்த்திவிட்டுக் கணவனிடம் இருந்து ஒதுங்கி விடலாம்.

நிமிட நேரத்திற்குள் எண்ணங்களின் அலையோட்டம்...

உதய் பக்கம் கண்களைத் திருப்பினாள்... திருப்பினவள் திகைத்தாள்.

சோபாவில் மீது கால்மேல் கால் போட்டு... அமர்ந்தலாய் அமர்ந்திருந்தான் அவன். அதுகூட திகைப்பைத் தரவில்லை...

அவன் முகத்தில் தெரிந்த புன்னகையா... வெற்றி மதர்ப்பா... ஏதோ ஒன்று அவளுக்குள் புளியைக் கரைத்தது.

உள்ளே மனப்பட்சி முனங்கியது.

சரியில்லை... ஏதோ ஒன்றிற்கு இது அடித்தளம் என்று நினைத்தாள்.

அவளது கணவனைப் பற்றி அவளுக்கு நன்றாகத் தெரியும்.

''என்ன... என்ன... அமர்ந்து விட்டீர்கள்...?'' மெல்லிய குரலில் கேட்டாள்.

''ஏன் அமரக்கூடாதா...? வீட்டுக்கு வந்தவர்களை அமரச் சொல்லுவதுதானே சம்பிரதாயம்...'' அவன் குரலில் தெரிந்த பரிகாசம் அவளுக்குப் பிடிக்கவில்லை.

'சட்டுபுட்டு' என்று விசயத்தை முடித்துக்கொண்டு புறப்பட மாட்டானா என்று தவித்தாள், அவள்.

உதட்டைக் கடித்துக்கொண்டு உள்ளே சென்றாள். இருந்த பாலை சூடு பண்ணி மால்டோவா கலந்து அவனுக்கும் கொடுத்து, சரணுக்கும் தந்தாள். அவன் எதிரில் அமர்ந்தாள்.

''இப்போது சொல்லுங்கள்... எதில்... எங்கே கையெழுத்துப் போடணும்...?''



அவள் முகத்தில் சோர்வு தெரிந்தது. அவன் அவளை உற்றுப் பார்த்தான்.

''இப்போது அதற்கு அவசரமில்லை. சரண் என் குழந்தை என்று தெரிந்தபின்பு அவனை விட்டுச் செல்லுவதும் சரியில்லை... இனி அவன் என்னுடன்தான் இருக்க வேண்டும். ஒன்று செய்... அவனை அழைத்துக் கொண்டு என்னுடன் வந்துவிடு. அவன் என்னுடன் பழகிய பின்பு நீ வந்துவிடலாம்...''

''முடியாது... முடியவே முடியாது...'' கூவினாள், சிந்து. திடீர் என்று விசயம் இப்படி திரும்பும் என்று அவள் எதிர்பார்க்கவில்லை. உணர்ச்சியின் கொந்தளிப்பால் அவள் நெஞ்சம் அலறியது. உடம்பு நடுங்கியது.

''அது முடியாதா? சரி... நீ அங்கு வரவேண்டாம். நானே இங்கு வந்து சரணுடன் பழகி ஒட்டுதலை ஏற்படுத்துகிறேன்... ஒரு வாரம் போதும்... அவனை என்னுடன் ஒட்டச் செய்ய...''

தெரியாதா அவளுக்கு? இனிப்பான பேச்சிலும் குழைவான நடத்தையாலும்... கனிவானப் பார்வையாலும் ஒரு வாரம் என்ன... ஒரு நாளும் போதுமே... அப்படி மயங்கி விழுந்தவள்தானே அவள்.

''என்ன சம்மதம்தானே. மவுனம் சம்மதத்திற்கு... அப்படித்தானே...''

கண்களால் சுட்டாள், சிந்து.

''முடியாது என்றதற்கு முழு அர்த்தம் சரணை உங்களுக்குத் தர முடியாது என்பது... அவன் என் மகன்... உங்களால் ஒதுக்கப்பட்ட மகன். அவன் எனக்குத்தான் சொந்தம்...'' அழுத்தமாய் சொல்லி முடித்தாள்.

அவன் முகத்தில் புன்னகை அடியோடு மறைந்தது. முகம் இறுகிக் கொண்டது.

''நீ என்ன வாதாடினாலும் சரி... அவன் என் மகன்... என்னிடம்தான் வளருவான்... நடத்தைக் கெட்ட தாயிடம் வளர்ந்தால் அவனது எதிர்காலம் இருண்டுவிடும்... என்னிடம் வளர்வதை உன்னால் தடை செய்யவும் முடியாது. கோர்ட்டுக்கே போனாலும் உன்னால் ஜெயிக்க முடியாது... என்னிடம் பணம் இருக்கிறது... நாளை வருகிறேன்... குழந்தையுடன் தயாராக இரு...''

சரணின் கன்னத்தைச் செல்லமாய் தட்டி விட்டு வெளியேறினான்.

கதவை அறைந்து சாத்தித் தன் கோபத்தைக் காட்ட நினைத்துக் கதவை சாத்த முற்பட்டபோது அவன் உள்ளே தலை நீட்டினான்.

''குழந்தையுடன் எங்கேயாவது ஓடலாம் என்ற எண்ணம் இருந்தால் அதை உதிர்த்துவிடு... எங்கு போனாலும் உன்னைப் பிடித்து விடுவேன்... நினைவிருக்கட்டும். நாளை காலை பத்து மணிக்கு வருகிறேன்...'' தலையை இழுத்துக் கொண்டான்.

கதவை அறைந்து சாத்தினாள் சிந்து. கால்கள் துவள அப்படியே சரிந்தாள்.

''அம்மா...'' அருகில் வந்த குழந்தையை இழுத்து மார்போடு அணைத்துக்கொண்டாள்.

தனக்கு என்று இருந்த ஒரு துணை... ஒரே ஒரு பற்றுக் கோடு... ஒற்றை இன்பம்... அதையும் இழந்து விடும் நிலையோ... கண்களில் பொங்கிய நீர் கன்னத்தைச் சுட்டுக் கொண்டு இறங்க...

அவள் அழுதாள்.





3

குழந்தை சரண் அமைதியாய் உறங்குவதைப் பார்த்தவாறு அமர்ந்திருந்தாள் சிந்து.

குழந்தையாகவே இருந்து விட்டால் எத்தனை நிம்மதி... எந்தவித சலனமில்லாமல்... துன்பமில்லாமல் வாழ்ந்து விடலாம்.

நாளை என்ன நடக்குமோ என்ற பதைப்பு இல்லாமல் உறங்குகிறான்.

தாயா? தந்தையா என்ற குழப்பமில்லாமல்... கவலையில்லாத பருவம்... எங்கு எடுத்துச் சென்றாலும் புரிந்து கொள்ள முடியாத வயது... பாவம் குழந்தை... பெற்றவர்களில் ஒருவர் நிழல் கீழ்தான் வளர வேண்டும் என்ற தலையெழுத்தோ? தாயிருந்தும் தந்தை இல்லை... தந்தை என்றால் தாயின் நிழலும் இருக்காது.

நாளை அவன் குழந்தையை அழைத்துக் கொண்டு சென்று விட்டால்?

ஒரு வாரம் தானும் கூட இருக்க வேண்டும் என்கிறான்... அதற்கு பிறகு தான் தேவையில்லை.

அந்த நினைப்பில் நெஞ்சு அடைத்தது.

எங்கேயாவது ஓடிவிடலாமா என்றும் தோன்றியது. எங்கு சென்றாலும் பின் தொடர்ந்து அழைத்து வருவேன் என்று சவால் விட்டவனிடம் இருந்து எத்தனை தூரம்தான் ஓடுவது...

அவன் சிறுத்தை இனம்... இரையைப் பிடித்து இழுத்து வரும் வரை சளைக்க மாட்டான். நினைப்பதை சாதிக்கும் வரை ஓயவும் மாட்டான்.

அப்படித்தானே அவளை மனைவியாய் அடையும் வரை ஓயாமல் தொடர்ந்து வந்தான்.

'நான் ஒன்றை அடைய வேண்டும் என்று நினைத்தால் அதை எப்படியாவது அடைந்தே தீருவேன்' ஏதோ ஒரு சந்திப்பில் அவன் கூறியது இப்போதும் நினைவில் இருக்கிறது.

அவனுக்குக் கிடைக்காத பெண்களா? அவன் விரல் சொடுக்கி அழைத்தால் பெரிய இடத்துப் பெண்களும் வரிசையில் நிற்பார்களே... விளக்கைச் சுற்றும் விட்டில்களாய் வட்டமடிப்பார்களே...

தன்னை ஏன் தேர்ந்தெடுத்தான்...?

தானும் ஒரு விட்டில் பூச்சியாய் ஆகி இறக்கைகளைச் சுட்டுக் கொண்டதுதான் மிச்சம்.

பட்டாம் பூச்சியாய் மகிழ்ச்சியுடன் திரிந்த காலம் போய் இறக்கையிழந்த பூச்சியாய் ஒடுங்கியாகி விட்டது.

அதற்குத்தான் சொல்வார்கள் போலும்... ஏழைக்கேற்ற எள்ளு உருண்டையென்று.

தன் நிலைக்கு ஏற்றவனாய் பார்த்துக் கழுத்தை நீட்டாமல்... பெருமூச்சு விட்டாள்.

நாளைக்கு என்ன நடக்கும்? கைதியாய்... அடிமையாய் அவன் பின்னே போக வேண்டுமே... அதுவும் ஒரு வார கைதியாய்...

அவனது சொற்கள் அவளது செவிகளில் ரீங்காரம் செய்தன. 'நடத்தைக்கெட்ட தாயிடம் வளர்ந்தால் அவளது எதிர்காலம் இருண்டு விடும்.'



காதினுள் நெருப்பு சுட்டது.

நடத்தைகெட்டவளாம்... மனமார உளமாரக் காதலித்து அவனையே தேவனாய் நினைத்து மணந்த நான் நடத்தைக் கெட்டவள்...

கண்ணால் பார்ப்பதும் பொய்... காதால் கேட்பதும் பொய்... தீர விசாரித்து அறிவதே மெய் என்று அவன் அறியாமல் போனான்.

இவனா ஒரு காலத்தில் என்னை தேவதையாய் நினைத்து பூஜித்தவன்... இவனா நீ இல்லாமல் எனக்கு வாழ்க்கை இல்லை என்று முழங்கியவன்...

அத்தனையும் நாடகமாய்... வெறும் ஜால வார்த்தைகளாய் இப்போது தோன்றுகிறது.

எத்தனை நாட்கள்... அவனைச் சந்தித்தது... காதலித்தது... கைப்பிடித்தது வரை நினைத்து நினைத்து உருகினாள்.

அந்த வசந்த காலம் மறுபடியும் வரவே வராதோ என்று ஏங்கினாள்.

இனி வராது என்று தோன்றியதும் மனதில் விரக்தி குடி கொண்டது.

அவனை நினைக்கவே கூடாது என்று எண்ணினாலும் அவள் மனம் அவளையும் கேளாமல் கடந்த காலத்திற்குத் தாவியது.

அந்த பெரிய பல்பொருள் விற்பனை நிறுவனத்தில் சிந்துஜா பவுடர், சோப், பேஸ்ட், கிரீம், லோஷன் பிரிவில் வேலை பார்த்தாள்.

முதன் முறையாய் அந்த இடத்திற்கு நண்பனுடன் வந்தான் உதய்சங்கர்.

பிரமாண்டமான அந்த நிலையத்தைச் சுற்றி வந்தான்.

பெண்கள் வண்ணத்துப் பூச்சிகளாய் சுறுசுறுப்புடன் வியாபாரம் செய்தனர்.

நுனி நாக்கில் அழகாய் ஆங்கிலம் பேசி வியாபாரம் செய்தனர்.

அனைவரின் முகத்திலும் புன்னகைக் கோடு தீட்டியிருந்தது. அதுவும் வியாபார நியதிகளில் ஒன்றல்லவா? வருகிற வாடிக்கையாளர்களை புன்சிரிப்புடன் வரவேற்று இனிதாய் பேசி கவர்ந்து வாங்கச் செய்ய வேண்டும்.

ஒரு சில பெண்கள் உதய்சங்கரின் அழகியத் தோற்றத்தையும் அவனுடைய நண்பன் பாலாஜியின் வசீகரச் சிரிப்பையும் கண்டு வாய் இளித்துப் பேசினர்.

அலுத்துப் போனவன் கண்களில் அவள் பட்டாள். சிரிப்பே இல்லாத முகம்... ஊகூம்... மருந்துக்கும் சிரிப்பு இல்லை.

இரண்டு வாடிக்கையாளர்கள் அவளிடம் வியாபாரம் செய்து கொண்டு இருந்தனர்...

ஒரு முறையாவது இதழ்களைப் பிரிக்க வேண்டுமே... ஊகூம்...

அவள் சிரித்தால் எப்படி இருக்கும்... சிரிக்காமலே முகம் அழகாய் இருக்கிறது... சிரித்தால்...? ரோஜா பூத்தது போல் இருக்குமோ?

''உதய்... எங்கேப்பா கவனம் கொஞ்சம் 'ஆயில்' வாங்கணும். அந்த கோடிக்குப் போகலாம் வா.''

பாலாஜியைத் தொடர்ந்து நடந்தான்.



எல்லாப் பொருள்களையும் வாங்கியபின் திரும்பி நடக்கும்போது அவன் கண்கள் அவளிருந்த பக்கம் சென்றன.

தூரத்தில் இருந்து பார்க்கும்போது அவள் இன்னும் அழகாய்த் தெரிந்தாள்.

ஒரு பூஞ்செடி பூத்து நின்றது போல... இளம் மஞ்சள் நிற சுரிதாரில் சூரியகாந்தியாய் நின்றாள்.

அவள் சிரிக்க மாட்டாளா என்ற ஆர்வம் ஏக்கம் போல அவனுள் எழுந்தது.

எப்படியாவது அவள் புன்னகை செய்துதான் பார்க்க வேண்டும் என்ற உத்வேகத்தில் அவள் இருந்த இடம் நோக்கிச் சென்றான்.

''எங்கே செல்கிறாய் உதய்?'' வியப்புடன் கேட்டான் நண்பன்.

ஒரு விநாடி விழித்துவிட்டு பின் சமாளித்தான். ''இரு... 'ஷாம்பூ' பாட்டில் வாங்கி வருகிறேன்'' என்று சென்றான்.

தன்னை இரு விழிகள் கவனிப்பதை அறியாமல் சிந்துஜா மின்னல் வேகமாய் செயல்பட்டுக் கொண்டிருந்தாள்.

வந்தவர்களிடம் புன்னகை சிந்த முடியாமல் அவள் மனதில் ஏதோ ஒரு அழுத்தம்... வேதனை...

அவளது தாய்க்கு மருத்துவ பரிசோதனை செய்யப்பட்டு அன்றைக்கு அதன் முடிவைத் தருகிறார்கள்.

என்னவாக இருக்குமோ என்ற இறுக்கம் அவளை அழுத்திக் கொண்டிருக்கும்போது எப்படி சிரிப்பு தோன்றும்...

எதிரில் வந்து நின்றவனை நிமிர்ந்து பார்த்தாள். உயரமாய் - கம்பீரமாய் - எடுப்பான கவர்ச்சித் தோற்றத்

துடன் - அழகிய புன்னகையுடன் ஒரு ஆடவன் வந்து நின்றால் எந்தப் பெண்ணும் கவரப்பட்டுப் புன்னகைப் பாளே...

இவள்... ச்சே.. இதழோரத்தில் ஒரு சுழிப்பு... கீறலாய்... இல்லவே இல்லை... இவள் மனம் என்ன கல்லா...?

"என்ன வேண்டும்?" இயந்திரமாய் கேள்வி.

"ஷாம்ப்பூ... கிளினிக் வேண்டும்..." அவளை உற்றுப் பார்த்துக் கொண்டே கேட்டான்.

கைகள் இயந்திரமாய் தட்டிலிருந்து எடுத்து உறையில் போட்டு நீட்டியது.

அவள் முகத்திலிருந்து கண்களை எடுக்காமலே அதை வாங்கினான்.

கண்களாவது சிரிக்கிறதா...?

இவள் பெண்தானா? அவனைக் கண்டு கிறங்கி நிற்காத பெண் இவள் ஒருத்தியாகத்தான் இருக்கும்.

பாலாஜி பொறுமையிழந்து அவனை அழைப்பது கேட்டு அவன் திரும்பி நடந்தான்.

சிறிது தூரம் சென்று திரும்பி பார்த்தபோது அவள் எடுத்துக் காட்டிய பொருள்களை இடம் பார்த்து அடுக்கிக் கொண்டிருந்தாள்.

இப்போதும் சரி... சிந்துஜாவிற்கு அவன் வந்ததோ, பொருளை வாங்கியதோ நினைவில்லை... ஆயிரம் பேர்கள் வந்து போகும் இடம்... நினைவில் இருக்குமா?

அடுத்த நாள் அவன் வந்தான். நேரே அவளை நோக்கிச் சென்றான்.



"அலோ மிஸ்..."

அவள் தன் பெயரைச் சொல்லவில்லை.

"நேற்று நான் ஷாம்ப்பூ கேட்டேன்..."

"கொடுத்திருக்க வேண்டுமே..."

"கொடுத்தீர்கள்... ஷாம்ப்பூ இல்லை... ஆப்டர் ஷேவ் லோஷன்..." கூறிவிட்டுச் சிரித்தான்.

அவளிடம் எதிரொலி இல்லை. "வருந்துகிறேன்" என்று மட்டும் சொன்னாள்.

"அதுவும் எப்போது தெரிந்தது தெரியுமா? ஷாம்ப்பூ என்று நினைத்துத் தலைக்குத் தேய்க்கும்போதுதான்... நுரை வராமல் வழுக்கிச் சென்றது..."

"மறுபடியும் வருந்துகிறேன்... கொண்டு வந்திருக்கிறீர்களா? கொடுங்கள். மாற்றித் தருகிறேன்" வியாபாரத்தில் குறியாய் சொன்னாள்.

"பரவாயில்லை... ஒரு சின்ன புன்னகையுடன் 'சாரி' என்றாலே போதுமானது."

அவள் முறைப்பது தெரிந்தது.

"உங்களுக்கு இப்போது ஷாம்ப்பூ தேவை... அவ்வளவு தானே... இந்தாருங்கள்."

"ரூபாய்...?"

"தேவையில்லை... என் பிழை... என் கணக்கில் எழுதிக் கொள்கிறேன். உங்களுக்கு என்ன வேண்டும் மேடம்" அருகில் இருந்த நடுத்தர வயது அம்மாள் பக்கம் திரும்பினாள்.

அதாவது வழிந்தது போதும்... போய்த் தொலையுங்கள்... எனக்கு வேலை இருக்கிறது என்று சொல்லாமல் சொல்லி..

அந்த கணத்தில்தான் அவன் அதை சவாலாய் ஏற்றுக் கொண்டான்.

அவளை சிரிக்க வைக்க வேண்டும்...

இரண்டாவது - தன்னை ஆண்மகன் என்று பார்க்காமல் விரட்ட நினைக்கும் அவளை வசப்படுத்த வேண்டும். தன்னைக் காதலிக்கும்படிச் செய்ய வேண்டும்.

'அப்போதான்டா உண்மையான ஆண்மகன் நீ உதய்' மனதினுள் தன்னையே தட்டியெழுப்பிக் கொண்டான்.

அந்த நேரம் பார்த்து ஒரு பெண் "ஏய் சிந்து... உன் அம்மாவின் மருத்துவ பரிசோதனை விசயம் என்ன? ஏதும் இல்லைதானே?" என்று கேட்டாள்.

"தெரியவில்லையே பவி... டாக்டர் நேற்று இல்லை. இன்றைக்கு போய் பார்க்க வேண்டும். மனம் அடித்துக் கொள்கிறது, என்ன சொல்வாரோ என்று."

"அதுதான் இரண்டு நாளாய் என்னவோ போல இருக்கிறாயா? பைத்தியம்... ஒண்ணும் இருக்காது. தைரிய மாய் இரு. வரட்டுமா? பார்.. யாரோ வந்து காத்திருக் கிறார்கள்."

அந்தப் பெண் ஓடி விட்டாள்.

காதில் விழுந்த செய்தியை வைத்து உதய் ஊகித்துக் கொண்டான்.

அவளது தாயாரின் உடல்நிலையை நினைத்து வேதனை யால்தான் கலங்கி 'உம்'மென்று இருக்கிறாள். பாவம்... பெற்றவளாயிற்றே. இருக்க வேண்டியதுதான்.

மறுநாள் அங்கு வந்தான் உதய்.



அவள் இருக்க வேண்டிய இடத்தில் இல்லை... வேறு யாரோ ஒருத்தி இருந்தாள்.

'சை' என்று ஆனது. யாரிடம் விசாரிப்பது? ஏன் அந்தப் பெண்ணிடம் கேட்டு விட்டால்...

சரி... என்னவென்று கேட்பது...

யோசனை பளிச்சிட்டது.

அந்தப் பெண்ணிடம் சென்றான்.

"மிஸ்... இங்கு இருந்த பெண் வரவில்லையா?"

நிமிர்ந்து பார்த்த பெண் இமைகளைப் படபடத்தாள்.

குயிலாய் குரலை மாற்றி "யார்... சிந்துவா..? அவ ளுடைய அம்மாவிற்கு உடம்பு சரியில்லை. ஆஸ்பத் திரியில் சேர்த்திருக்கிறார்கள்... ஏன் என்ன விஷயம்?" என்று கேட்டாள்.

"ஒன்றும் இல்லை. நேற்று ஒரு சாமான் வாங்கும்போது மீதி பணமாய் அம்பது ரூபாய் அதிகம் சேர்த்து தந்து விட்டதை, வீட்டில் போய் பார்த்த பின்புதான் தெரிய வந்தது. திருப்பிக் கொடுக்க வேண்டும்..." கூசாமல் பொய் சொன்னான்.

திருவள்ளுவரும் சில நேரங்களில் பொய்யை மெய் யாக்கி பேசலாம் என்று அனுமதித்திருக்கிறாரே...

"அவள் என்றைக்கு வருவாள் என்று தெரியாது. லீவு போட்டிருக்கிறாள். உங்களுக்கு நம்பிக்கை இருந்தால் என்னிடம் கொடுங்கள். நான் அவளுக்குக் கொடுத்து விடுகிறேன்."

அம்பது ரூபாயைக் கொடுத்துவிட்டு நகர்ந்தான்.

தனக்கு வேண்டிய செய்தி கிடைத்ததற்கு இந்தப் பணம் ஒன்றும் பெரிதல்ல... இனாம் மாதிரிதான்...

அதற்குபின் இரண்டு நாட்களுக்கு ஒருமுறை வருகை தந்து கட்டிடத்தினுள் ஒரு சுற்று போட்டு சென்றான்.

அவள் கண்களில் படவேயில்லை.

பன்னிரண்டு நாட்களுக்குப் பின் அவன் அங்கு வந்தபோது அவள் இடத்தில் இல்லாதது ஏமாற்றம்தான்... பெருமூச்சு விட்டுத் திரும்பும் போது அவள் கண்களில் பட்டாள்.

எண்ணெய் பிரிவில்...

இலேசாய் இளைத்துக் காணப்பட்டாள்.

அவளைக் கண்ட கணமே உள்ளம் மலர்ந்து போய் முகம் பிரகாசம் பெற்று துள்ளலுடன் அவளை நோக்கிச் சென்றான்.

அவனைப் பார்த்துவிட்டு "என்ன தேவை சார்?" என்றாள்.

என்ன வேண்டும்... மலங்க விழித்தான்.

எண்ணெய் பிரிவில் என்ன வாங்க முடியும்?

இதுவரை வாங்கி பழக்கம் இல்லை. வீட்டுக்கு வேண் டிய அனைத்துப் பொருட்களும் வீடு தேடி வந்துவிடும்.

கண்களைச் சுழலவிட்டான்.

இதயம் நல்லெண்ணெய் பாட்டில்!

இதயம்!!

"இதயம் வேண்டுமே" உதட்டோரம் சிரிப்புடன் கேட்டான்.

வேறொரு பெண்ணாக இருந்தால் அந்த பேச்சில் அடிபட்ட பறவையாய் விழுந்திருப்பாள்.



"எத்தனை கிலோ?" அமைதியாய் கேட்டாள்.

'இதயம் எத்தனை கிலோ இருக்கும்...? கைப்பிடி அளவு இல்லையா... கிலோ கணக்கு தெரியாதே...'

ஒரு கணம் அவனது வார்த்தைகளின் அர்த்தத்தைப் புரிந்து கொள்ளாமல் நின்றவள் அவனது நகைச்சுவை உணர்வை புரிந்து கொண்ட பின்பு புன்னகைத்தாள்.

அப்பாடா... பிறவியின் நோக்கம் பூர்த்தியானதே என்று திருப்தி பட்டான் உதய்.

அவள் புன்னகைத்தபோது அவளது முகமே மாறியது.

உதட்டோரத்தில் சின்ன சுழி. அது அவளுக்கு அழ கூட்டியது.

தொட்டுப் பார்க்கலாமா அதை என்ற ஆசை எழுந்தது.

"ஏய், உதய்" பாலாஜியின் குரல்.

ச்சு... மனதினுள் அலுத்துக் கொண்டான். 'இப்போது தான் புன்னகைக்க ஆரம்பித்திருக்கிறாள்... அதற்குள் கரடியா...' சலிப்புடன் திரும்பினான்.

"ஆமாம் எப்போது வந்தாய்... ஒரு வார்த்தை சொல்லி இருந்தால் சேர்ந்து வந்திருக்கலாமே..."

அவனுடன் நடக்க ஆரம்பித்தான் உதய்.

எண்ணெய் வாங்காமல் செல்கிறானே என்று வியப்புடன் பார்த்தாள் சிந்து.

"ஆமாம் உதய்... அடிக்கடி இங்கு வர ஆரம்பித் திருக்கிறாயாமே... என்ன விஷயம்?"

பாலாஜி கேட்டவுடன் ஆச்சரியத்துடன் பார்த்தான் உதய்.

"உனக்கு எப்படித் தெரியும்?"

''பட்சி சொல்லியதுப்பா...''

''ச்சூ... விளையாட்டு வேண்டாம். சொல்...''

''உண்மையைச் சொல்லட்டுமா? இங்கு நான் சாமான் வாங்க வருவதே ஒரு பெண்ணைப் பார்க்கத்தான். அவள் என்னுடன் வந்த உன்னையும் கவனித்திருக்கிறாள். அவள் சொன்னதுதான் சரி... சொல்.. நான் கேள்விப்பட்டது உண்மையா?'' விடாப்பிடியாய் கேட்டான்.

''ஒருவன் கடைக்கு அடிக்கடி வருவதும் தப்பா? சரிதான் போ'' அலுத்தது போலச் சொன்னான் உதய்.

''அடிக்கடி வருவது தப்பில்லைதான்... ஒரே பெண்ணை விசாரித்து சுற்றி வருவதும் தப்பில்லை'' என்று குறும்பாய் பதில் சொன்னான் பாலாஜி.

''ஓகோ... அதுவும் உன் அன்னப் பட்சி சொன்ன தாக்கும்...''

''பூனைக் கண்களை மூடிக் கொண்டதாம்... பூலோகமே இருண்டு போனது என்று எண்ணிக் கொண்டதாம்...'' என்று சிரித்தான் அவன்.

அவ்வளவு தூரம் தான் கூர்ந்து கவனிக்கப்பட்டிருப்பதை உணர்ந்தபோது அவன் வெட்கிப் போனான்.

ஆசை வெட்கமறியாது என்று சொல்வது இதனால் தானோ...

''ஏய்... நான் கேட்டுக் கொண்டே இருக்கிறேன். நீ கனவுலகில் 'டூயட்' பாடிக் கொண்டு இருக்கிறாயா?'' அவனை தட்டிக் கேட்டான் பாலாஜி.

''யார் அந்த நிலவு?''



''நிலவு இல்லை... பூ.. பெயர் சிந்துஜா.''

''பரவாயில்லையே... பெயரும் தெரிந்தாயிற்றா... ஆமாம் ஒருதலைக் காதலா... இல்லை...''

''ஒரு பக்கம்தான் பாலு. அவள் இன்னிக்குத்தான் புன்னகைக்க ஆரம்பித்திருக்கிறாள். அவள் எப்போது சிரித்து... எப்போது முகம் மலர்ந்து... எப்போது...''

''ஏய்... நிறுத்து. என்ன... என்ன? என்று பாட்டுப் போல இது என்ன புலம்பல்... நானில்லை...? எத்தனை வருடமாய் நாயாய் அலைந்தேன்.

தெரியுமா? அவளது கண் பார்வை என் பக்கம் திரும்பாதா என்று எத்தனை நாள் ஏங்கினேன் தெரியுமா? இப்போது நான் என்றால் அவளுக்கு உயிர். திருமணத் திற்கும் சம்மதம் கிடைத்துவிட்டது. உனக்கும் நல்ல நேரம் வரும்டா மச்சி... பொறு'' உற்சாகம் ஊட்டினான் நல்ல நண்பன்.

மறுநாள் அவள் இடம் நோக்கிச் சென்றபோது அவள் புன்னகைக்க அவனுக்குத் துணிவு வந்தது.

''இன்றைக்கு என்ன?''

''ம்ம்... ஸ்வீட் ஹார்ட்ஸ் கிடைக்குமான்னு வந்தேன்...'' குறும்பாய் கேட்டான்.

''மிஸ்டர்...''

''உதய்சங்கர்... உதய்னு கூப்பிட உங்களுக்கு அனுமதி யுண்டு'' கண்கள் சிரிக்க அவன் கூறினான்.

''மிஸ்டர் உதய்... இது எண்ணெய் விற்பனை பகுதி... இங்கு நீங்கள் கேட்பது கிடைக்காது...''

"நான் எதைக் கேட்கிறேன் என்று நினைக்கிறீர்கள்?"

"பிஸ்கட்தானே... விட்டில் ஹார்ட்ஸ் தானே" சந்தேகமாய் கேட்டாள்.

"அடடா... நான் கேட்டது உங்களது ஹார்ட்டை. அது கிடைக்கப் பெற்றால் நான் அதிர்ஷ்டசாலி" குறுகுறுப்பு பார்வையுடன் சொன்னான்.

நேரடியாய் அவன் கேட்டது அவளுக்குத் திகைப்பைத் தந்தது.

'விளையாடுகிறானா? பார்ப்பதற்குப் பெரிய பணக்காரன் போல தெரிகின்றான்.'

'கண்களில் படும் இளம் பெண்களிடம் குறும்புப் பேச்சு பேசுவதுதான் பொழுது போக்கு போலிருக்கிறது.'

உதட்டைக் கடித்துக் கொண்டு நின்றாள்.

"கிடைக்குமா?" மறுபடியும் அவன் குரல்.

அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

"சாரி... இந்த ஹார்ட்டை என்னிடம் இருந்து கழற்றித் தர முடியாத நிலை... நெஞ்சினுள் ஒட்டிக் கொண்டு விட்டது. வேறு யாராவது தருகிறார்களா என்று போய் கேளுங்கள். ப்ளீஸ்... யாரோ வருகிறார்கள். சென்று விடுங்கள்" கெஞ்சும் குரலில் முடித்தாள்.

அவன் திரும்பிப் பார்த்தான். கணவன் - மனைவி இருவர் ஒரு பட்டியலுடன் அந்த இடத்திற்கு வந்து கொண்டிருப்பதைக் கண்டான்.

"நாளை வருகிறேன். இரவு முயற்சி செய்து பாருங்கள். இதயத்தைக் கழற்ற முடியுமா என்று. வரட்டுமா?"



அவன் செல்வதைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"சனோலா இருக்கிறதா?"

வந்தவர்களுக்கு பதில் சொல்லத் திரும்பினாள். வாயும் கையும் இயந்திரமாக மாறினாலும் மனதில் ஏதோ ஒரு படபடப்பு...

'இது நல்லதற்கு இல்லையோ' என்ற பயமும் வந்தது.

4



வேலை பளுவின் காரணமாய் உதய்சங்கரால் சிந்துஜாவின் பக்கம் எட்டிப் பார்க்கவும் முடியவில்லை.

இரண்டு நாளுக்குப் பின் மனம் பொறுக்காமல் அவள் வேலை செய்யும் இடத்திற்குச் சென்றான்.

அவள் இல்லை.

எல்லாப் பிரிவுகளையும் சுற்றி வந்தாயிற்று. ஏமாற்றம்தான்.

யாரிடம் கேட்பது...? போன தடவை ஒரு பொய்... இந்த தடவை...?

"யாரைத் தேடுகிறீர்கள்... சிந்துஜாவையா?" ஒரு கீச்சுக்குரல் அருகில் கேட்கத் திரும்பினான்.

"உங்களுக்கு எப்படித் தெரியும்?" - ஆச்சரியத்துடன் கேட்டான்.

"நீங்கள் பாலாஜியின் நண்பர் இல்லையா... நான்... அவர்..." முகம் சிவந்து நின்றாள், அவள்.

"ஓ... புரிந்தது. பாலாஜி சொன்னது உங்களைத்தானா? என்னைப் பற்றி பாலாஜியிடம் சொன்னதும் நீங்களாகத்தான் இருக்க முடியும்..."

"அய்யய்யோ... ஏதோ ஊகத்தினால்தான் சொன்னது. திரும்பத் திரும்ப ஒரே பெண்ணை நாடி வந்தால் அப்படித்தானே தோன்றும்."

"அனுபவம் பேசுகிறதோ..." பரிகாசமாய் கேட்டான், உதய்.

மறுபடியும் முகத்தில் சிவப்பு ஏறியது.

நாணத்திலும் பெண்கள் மிக அழகுதான்... அவன் நினைத்தான்.

"சரி... சிந்துவைப் பற்றி வேண்டாமா... அப்போ வருகிறேன்..." அவள் விளையாட்டாய் போகத் திரும்பினாள்.

"ப்ளீஸ்... சொல்லுங்கள்..."

"அவளது தாயாருக்கு மறுபடியும சீரியஸ்... ஆஸ்பத்திரியில் சேர்த்திருக்கிறார்கள். அதுதான் வரவில்லை. பிழைப்பது கஷ்டம் என்கிறார்கள் டாக்டர்.. வருவதற்கு நாளாகலாம்..."

மேலும் அவள் வாயிலாக அறிந்து கொண்டது இதுதான். அவள் ஒரே மகள். உடன் பிறந்தவர்கள் யாரும் இல்லை. அம்மாவுக்கு இவள்... இவளுக்கு அம்மா துணை.

இருக்கும் ஒரு துணையும் போகப் போகிறது என்றால்... பாவம் எத்தனை துடித்திருப்பாள்.

இந்நிலையிலும் இதயம்.. கழற்று... என்றெல்லாம் பிதற்றியிருக்கிறோம்... அதைக் கேட்கும் மனநிலையிலா அவள் இருந்தது.

அதுதான் முகத்தில் அறைந்தாற்போல் வந்தது பதில்.

பாவம் ஒண்டியாய் என்ன செய்கிறாளோ... எப்படித் தவிக்கிறாளோ...



அவனுள் ஏதோ உருகியது. கொஞ்ச காலத்தில் இத்தனை மாற்றமா? ஏதோ காலம் காலமாய் அவளுடன் பழகியது போல் பிரமை. அவள் துடிப்பது தன்னால் சகிக்க முடியாது போல ஒரு தவிப்பு...

கண்டதும் காதல் ரகமா?

அதற்கு பதில் தேடிக் கொண்டிருக்காமல் மருத்துவ மனையை கேட்டறிந்துகொண்டு விரைந்தான்.

அந்த நர்சிங்ஹோம் பெரியது. பிரசித்தமானது. அதில் நோயாளியை சேர்த்துவிட்டால் அவ்வளவுதான்.. நோயாளியைச் சேர்ந்தவர்களுக்கே இதயம் வேலை நிறுத்தம் செய்துவிடும். அவ்வளவு பணம் செலவு ஆகும். ஆனால் இதய நோயாளிக்கு அந்த இடம்தான் கடைசி புகலிடம்.

காரை நிறுத்தி விட்டு உள்ளே சென்றான். வரவேற்பு பெண் அவனைப் பார்த்து முகம் மலர்ந்ததை கவனிக்காமல் விசாரித்தான். சிறு விளக்கத்திற்குப் பின் விவரம் கிடைத்தது.

"இன்டென்சிவ் கேர் யூனிட்"டில் இருக்கின்றார்கள் என்று அறிந்துகொண்டு வழி கேட்டுச் சென்றான்.

அந்த இடத்தை நெருங்கும்போது சிந்துஜா கண்ணில் பட்டாள்.

ஒரு பெஞ்ச் மேல் தலை குனிந்து கொண்டு... தன்னந் தனியாளாய்...

"சிந்துஜா...!"

மெல்லிய குரலில் அழைத்தான் உதய். சட்டென்று நிமிர்ந்தாள்.

தனிமை எத்தனைக் கொடுமை என்று அந்த நேரத்தில் உணர்ந்தாள், அவள்.

இரண்டொருமுறை சந்தித்தது தான்... ஆனாலும் தெரிந்த முகம்... அவள் கண்களில் கண்ணீர் வழிய ஆரம்பித்தது.

''என்னம்மா சொன்னார்கள் டாக்டர்...'' இதமாய் கேட்டான், அவன்.

அவன் எப்படி அங்கு வந்தான்... ஏன் வந்தான் என்று நினைத்துப் பார்க்கும் நிலையில் இல்லை சிந்து.

''அவர்கள் சொன்ன கெடு தாண்டினால்தான் சொல்ல முடியும் என்கிறார்கள்... எனக்கு என்ன செய்வது என்று தெரியவில்லையே உதய்...''

துன்பப்படும் நேரத்தில் மனம் ஏதாவது ஒரு பற்றுக் கோட்டைத் தேடி அலைகிறது. அதனால் வேதனையும் குறைகிறது.

வேதனையின் பிடியில் ''உதய்'' என்று நெருங்கி வந்தாள். எனக்கு யாருமே இல்லையே என்ற ஏக்கத்தைத் தீர்க்க வந்தவன்... இதோ இருக்கிறானே என்று வந்தவன்.

அவள் ''உதய்'' என்று அழைத்தது கேட்டு அவன் மகிழ்ந்து போனாலும், தன் உணர்ச்சியை வெளிக்காட்டாமல் பேசினான்.

''நீயே ஒண்டியாய் காக்கிறாயே... உறவு என்று யாரும் இல்லையா சிந்து...''

உதய்சங்கர் அவளுக்கு 'உதய்' ஆனால், சிந்துஜா 'சிந்து' ஆனதில் வியப்பொன்றும் இல்லை.

பெயர் சுருக்கத்தை உணர முடியாத நேரம்... ''இருந்தும் இல்லாதவர்கள் வந்தால் எங்கே செலவு அவர்கள் மீது விழுந்து விடுமோ என்ற அச்சம்... எல்லாம் முடிந்த பின் வந்து விட்டுப் போவார்கள்... ச்சு...'' சலிப்பாய் கூறினாள்.



அவன் கைக்கடிகாரத்தைப் பார்த்தான். மணி இரண்டு.

''சாப்பிட்டாயா சிந்து?''

இல்லை என்று தலையசைத்தாள்.

அவளது முகவாட்டத்திலிருந்து அவள் சாப்பிட்டு உறங்கி எத்தனையோ நாளாகி இருக்க வேண்டும் என்று தோன்றியது.

''இரு வருகிறேன்'' என்று கூறி புறப்பட்ட அவனைத் தடுத்தாள், அவள்.

''வேண்டாம் உதய்... தொண்டையில் எதுவும் இப்போது இறங்காது. ப்ளீஸ்...''

''ஏதாவது சாப்பிட வேண்டுமா... உன் அம்மாவை கவனிக்கவாவது உனக்கு வலுவிருக்க வேண்டாமா... இதோ ஒரு நிமிடத்தில் வந்து விடுகிறேன்...'' என்று சொல்லிவிட்டு விரைந்தான்.

அப்போதுதான் அவன் தன்னை ஒருமையில் அழைக்க ஆரம்பித்திருக்கிறான் என்பதை நிதானமாக உணர்ந்தாள்.

சிறிது நேரத்தில் கையில் பொட்டலங்களுடன் வந்தான். புது பிளாஸ்க்கில் சுடச்சுட காபியும்தான்.

அவனது வற்புறுத்தலில் கொஞ்சம் சாப்பிட்டாள். சோர்வு குறைந்தது போலத் தோன்றியது.

கொண்டு வந்திருந்த தம்ளரில் காபியை ஊற்றி அவனுக்குத் தந்தாள். அவன் குடித்த பிறகு தானும் குடித்தாள்.

''இப்போது சொல் சிந்து... உன் தாய்க்கு என்ன ஆயிற்று...?'' என்று அக்கறையுடன் கேட்டான்.

நெஞ்சுவலி என்று வந்து இதயப் பரிசோதனையில் இதய வீக்கம் என்று தெரிந்தது. இந்த தடவை வலி அதிகம்.

சக்திக்கு மீறி வேலைகளை இழுத்துப் போட்டு செய்த உடம்பு பலவீனமாகிப் போனது... இதயமும்தான்.

எந்த நேரத்தில் இதயம் வேலை நிறுத்தம் செய்யுமோ தெரியாது.

''உதய்... என்னால் உங்களுக்கு ஏன் தொந்தரவு... உங்களுக்கு ஏதாவது முக்கியம் வேலை இருக்கலாம்...'' குற்ற உணர்வுடன் அவனைக் கேட்டாள்.

''அவசர வேலை ஏதுமில்லை...'' விரல் நகங்களையே சில நிமிடங்கள் பார்த்துக் கொண்டிருந்தாள்.

பக்கவாட்டில் அவளது முகத்தைப் பார்த்தான். பளிச்சென்று இருந்த முகத்திற்கும் கருநிற கூந்தல் எடுப்பாகத் தெரிந்தது. கன்னக்கதுப்பு அதிகம் இல்லாமல் அளவுடன் வழுவழுப்பாக இருந்தது. சின்ன அழகான மூக்கு... கண்களின் இரப்பை மூடும்போது கன்னத்தைத் தடவின.

சங்கு கழுத்தில் சின்னதாய் ஒரு தங்க செயின்... அழகுக்கு அழகு சேர்த்தது. இவளைப் போல எத்தனையோ அழகிய பெண்களை சந்தித்திருக்கிறான். ஏன் இவளைவிட அழகிகளைச் சந்தித்தும் இருக்கிறான்.

அவர்களிடம் இல்லாத ஈர்ப்பு இவளிடம் இருக்கிறதே. அவளது சோகத்தைத் துடைத்து சந்தோசத்தைத் தர வேண்டும் என்று மனம் துடிக்கிறது.

''உதய்...''

''என்னம்மா...''

''நான் ஒன்று கேட்கட்டுமா? எதற்காக என்னைத் தேடி வந்து உதவுகிறீர்கள்...? என்னுடன் அவ்வளவு பழக்கமும் இல்லையே...''



அவன் புன்னகைத்தான்.

''உன் இதயத்தைக் கேட்டதை மறந்து விட்டாயா?''

''அதான் ஏன்...? எத்தனையோ பெண்கள்.. வசதியுள்ள பெண்கள் இருக்கும்போது ஏழை அனாதையாய் என்னைத் தேர்ந்தெடுக்க வேண்டும்...?''

''யாரையும் கண்டு துடிக்காத என் இதயம் உன்னைப் பார்த்து... உனக்காகத் துடிக்க ஆரம்பித்து விட்டதே... அதைத்தான் கேட்க வேண்டும்...''

காதலைப் பற்றிப் பேச இது தகுந்த நேரமும் இல்லையே என்ற நினைவு வர, முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

தன்னை ஒருவன் தொடர்ந்து வந்து காதலிக்கிறான் என்பதில் கிளுகிளுப்பு ஏற்படத்தான் செய்தது.

ஆனால், அது நல்லதா... கெட்டதா என்றுதான் தெரியவில்லை.

அம்மா சொல்வாள்... பணக்கார வீட்டுப் பிள்ளைகளை நம்பக்கூடாது... அவர்களுக்குக் காதல் ஒரு பொழுது போக்கு என்று. இப்போது எதற்கு அந்த சிந்தனை... அம்மா பிழைக்க வேண்டும்... அதுவரைக்கும் எந்த நினைப்பும் கூடாது.

அம்மா பிழைப்பாளா...? டாக்டர் நல்ல செய்தியைச் சொல்வாரா? உள்ளம் படபடக்க அமர்ந்திருந்தாள்.

இரவில் மருத்துவமனையில் சிந்துஜா தங்கவேண்டி இருந்ததால் அவன் புறப்பட்டான். புறப்படுவதற்கு முன் மறக்காமல் அவளுக்கு டீயும், உண்ண உணவும் வாங்கித் தந்துவிட்டுச் சென்றான்.

அவன் சென்றபின்பு அதுவரைக்கும் தன்னுடன் ஒட்டிக் கொண்டிருந்த பலம் சடாரென்று விலகிச் சென்றது போல உணர்வு... பலமெல்லாம் வடிந்துபோய் துவள்வதுபோல இருந்தது. உதய்சங்கர் அவளைவிட்டுப் புறப்படுமுன் பணம் தேவையா? என்று கேட்பது நினைவுக்கு வந்தது. மனம் நெகிழ்ந்து போனது.

அவளுக்கும் அவனுக்கும் என்ன உறவு... எத்தனை நாள் பழக்கம்... உதவ நாடி வருகின்றானே...

ரத்த சம்பந்தமே வரலாமா வேண்டாமா... உதவலாமா கூடாதா என்று தயங்கித் தள்ளி இருக்கும்போது சொந்தமும் பந்தமும் இல்லாத இவன் தனக்குத் துணையாய் இருந்து உதவி செய்து பணத்தையும் தந்து சகாயம் செய்ய வந்தானே... உண்மையில் உயர்ந்த உள்ளம்தான்.

அவனைப் பற்றி எண்ணியவாறே சுவற்றில் தலை சாய்த்துக் கொண்டு கண்களை மூடிக் கொண்டாள்.

ஆஸ்பத்திரியின் வராந்தாவில் மனித நடமாட்டம் குறைந்து இருந்தது. யாரும் இன்றி ஒண்டியாய் இருக்க மனம் பயத்தில் அடித்துக் கொண்டாலும், எந்த நேரத்திலும் டாக்டரோ, நர்ஸோ தன்னை அழைத்துப் பேசலாம் என்ற எதிர்பார்ப்பில் அங்கேயே அமர்ந்திருந்தாள்.

கண்களைச் சுழற்றி வந்த தூக்கத்தை விரட்ட நினைத்து முடியாமல் அப்படியே தலை சாய்ந்து உறங்கினாள்.

**கா**லை எட்டு மணியளவில் சிந்துஜாவின் தாய் நினைவு திரும்பாமலேயே போய் சேர்ந்து விட்டாள்.

தனக்காக தன் மகள் இரவு பகலாய் அந்த இடத்தை விட்டு நகராமல் தவமிருக்கிறாள் என்று உணராமல் அந்த ஆத்மா உடலை விட்டுப் பிரிந்து பறந்து சென்று விட்டது.



இறுதியாய் உயிரற்ற தாயின் உடலைப் பார்த்தபோது மனம் உடைந்துபோய் கதறினாள்.

"எங்களால் ஆன எல்லா முயற்சியையும் செய்து விட்டோம்... சாரிம்மா..." டாக்டர் அவளது தோளை ஆறுதலாய் தட்டிக் கொடுத்துவிட்டுச் சென்றாள்.

இனி இந்த உலகில் தனக்கு என்று யாரும் இல்லையே... எனக்கு என்று இருந்த ஒரு துணையையும் பறித்துக் கொண்டதே தெய்வம்... விம்மும் அவளது தோளை வலிய கரம் தொட்டவுடன் திரும்பினாள்.

கண்ணீர் திரையின் ஊடே உதய் தெரிந்தான்.

"உதய்... உதய்... என்னைத் தனியாக விட்டு விட்டு என் அம்மா போய் விட்டாரே... என்ன செய்வேன்..?"

அரற்றிய அவளை இழுத்துத் தன் மீது சாய்த்துக் கொண்டான்.

அவளது தோளைத் தடவிக் கொடுத்து "மனதை சமாதானப்படுத்திக் கொள்ள வேண்டும் சிந்து. போன உயிர் திரும்பி வரப் போவதில்லை. பெற்ற தாயைப் பிரிவது என்பது துன்பம்தான். நீ அழுது கொண்டு இருந்தால் உன் அம்மாவின் ஆத்மா சாந்தியடையுமா... சொல்..." அவளது கண்ணீரைத் துடைத்து விட்டான்.

"இனி நான் அனாதை... நினைக்கிறபோது அய்யோ... உதய்.. தாளவில்லையே..."

"ச்சு... நான் இருக்கிறபோது நீ எப்படி அனாதையாவாய்... இனி ஆகவேண்டியதை கவனிக்க வேண்டும்... எத்தனை நேரம் உன் அம்மாவின் உடலை இங்கு வைத்திருக்க முடியும்... எடுத்துச் செல்ல ஏற்பாடு செய்ய வேண்டும் இல்லையா... கண்களைத் துடைத்துக் கொண்டு வா சிந்து..."

அவனது சொற்களில் தெரிந்த உண்மை அவள் மனதையும் தொட, கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

இப்போது பணம் கட்ட வேண்டும். எத்தனை ரூபாய்...? மனதினுள் பயந்தபடி நடந்தாள். ஆனால், அவளை எதுவும் பேச விடாது அவனே பணம் கட்டி... கணக்கை முடித்துவிட்டு ஆஸ்பத்திரி வண்டியிலேயே உடலை கொண்டுவர ஏற்பாடு செய்தான். கேட்டதற்கும் மேல் பணம் தர முன் வந்ததால் ஏதும் சிரமம் இல்லாமல் நடந்தன.

உயிருள்ள தாயுடன் மருத்துவமனைக்குள் சென்றவள்... உயிரற்ற உடலுடன் வெளியே வந்தாள். தாயின் உடலைப் போலவே மனமும் கனத்துப் போயிருந்தது.

5



நாட்கள் ஓடின.

இப்போதெல்லாம் உதய்தான் அவளுக்கு எல்லாமே... அந்த நிலைக்கு வந்திருந்தாள், சிந்துஜா.

இருவரும் சந்திக்காத நாள் இல்லை. உண்மையில் அவன் தன்னை காதலிக்கிறான் என்பதை, நிச்சயப்படுத்திக் கொண்ட பின்புதான் தன் மனதை அவனுக்குத் தந்தாள்.

அவன் தனக்கு செய்த உதவிக்காக எது வேண்டுமானாலும் செய்ய தயார்தான்.

தாயை இழந்து தவித்துக் கொண்டிருந்தவளை, தோள் அணைத்து ஆறுதல் தந்தவனும் அவன்தான்.

உயிரற்ற உடலைப் பார்க்க வந்த உறவினர்களைக் கவனித்து அனுப்பியதும் அவனே.



பணத்தை தண்ணீராய் செலவழித்து கவுரவமாய் இறுதிச் சடங்கு நடக்க உதவியவனும் உதய்தான். இதை இவளால் மறந்துவிட முடியுமா?

அவன் மீது உண்டான நன்றியும் விசுவாசமும் அன்பாய் மாறி, பின் காதலாய் உருவெடுத்தது.

என்னிடம் மட்டும் ஏன் இந்த அக்கறை என்ற கேள்வி எழுந்து அடங்கிப் போய் எத்தனையோ நாள் ஆகிவிட்டன.

தெய்வமாய் பார்த்து தனக்காக அனுப்பி வைக்கப்பட்ட துணை என்று எண்ணி மகிழ்ச்சியடைந்தாள்.

ஒரு நல்ல நாளில் அவளிடம் மணம் புரிந்துகொள்ள சம்மதம் கேட்டான். அதற்கே காத்திருந்தவள் போல உடன் சம்மதித்து விட்டாள். அவனது விருப்பப்படி வேலைக்கு ராஜினாமாவும் கொடுத்தாகி விட்டது.

இனிமையானதொரு காலைப் பொழுதில் குமாரி சிந்துஜா திருமதி சிந்துஜா உதய்சங்கர் ஆனாள்.

பதிவு திருமணம்... எளிதாய் முடிந்தது.

நாளெல்லாம் வசந்தமாய்... உலகமே சொர்க்கமாய் மாறியது.

இருவரும் உல்லாசமாய் சிறகடித்து இன்ப வானில் பறந்தனர்.

தேனிலவு என்று நேபாளத்துக்குச் சென்றனர். புதிய சூழ்நிலை... புதிய துணை... புதிய வாழ்வு... அந்த புதுமையில் மெய்மறந்து இருந்தாள்.

உதய்சங்கர் தன் அன்பை பிரவாகமாய் அவள் மீது பொழிந்தான். தன் காதலைச் செயல்களில் காட்டினான்.

பொன் அணிகள் என்றும், விலை உயர்ந்த உடைகளையும் வாங்கி தந்து அசத்தினான்.

ஏழ்மையின் நிழலில் வாயில் சேலையையும் சாதாரண சுரிதாரையும் மட்டுமே கண்டவளுக்கு உயர்ந்த ரகத் துணி மணிகளும், வைரமும் பொன்னும் பிரமிப்பைத் தந்தது.

அந்த சமயத்தில் தன்னைவிட அதிர்ஷ்டசாலி வேறு யாரும் இருக்க முடியாது என்று கர்வம் உண்டானது உண்மை. அது அடிபட்டுப் போகும் என்று அப்போது அவள் நினைக்கவில்லை.

தேனிலவை முடித்துக் கொண்டு நேரே தன் வீட்டிற்கு அழைத்துச் சென்றான், உதய்.

அங்குதான் எதிர்ப்பை சந்திக்க வேண்டி வந்தது.

உதய்சங்கரின் வீட்டில் தாயாரின் ஆதிக்கம்தான்... சிறு வயதிலே தந்தையை இழந்த உதய்சங்கருக்குத் தாய்க்குத் தாயாக, தந்தையுமாய் இருந்து வளர்த்தவள்.

ரமணியம்மாள் பிள்ளையை அடக்கி வளர்த்து ஆளாக்கியவள்.

குறிப்பிட்ட வயது வரை தாய்க்கு அடங்கிய பிள்ளை தான் உதய்.

ஆனால், கல்லூரியில் கால் வைத்ததும் அவனிடம் மாற்றம் ஏற்பட்டது.

தான் ஆண்பிள்ளை. இன்னுமா பயந்து அடங்கி ஒடுங்கிப் போவது.

மற்ற வீட்டில் தன்னைப் போல பிள்ளைகள் அம்மாவுக்கு சலாம் போட்டுக்கொண்டு இருக்கிறார்களா என்ன? தனக்கும் தன் வீட்டிலுள்ள வேலையாட்களுக்கும் என்ன வித்தியாசம்...

அவனுள் ஏதோ சென்று முரண்டு பிடிக்கத் தொடங்கியது. இனி ஏட்டிக்குப் போட்டித்தான் என்று முடிவு செய்து கொண்டான்.

முதல் படியாக உடை விசயம்...

தன் தாயார் எது கூடாது என்கிறாளோ அதையே உடுத்தணும்.

ரமணியம்மாளுக்கு லுங்கியைக் கண்டாலே பிடிக்காது. லுங்கியை மடித்துக் கட்டிக்கொண்டு திரியும் ஆண்களை ஏதோ காட்டு மிராண்டிகளைப் போலப் பார்ப்பாள். லுங்கி என்றாலே ரவுடித்தனம் என்ற நினைப்புதான்.

உதய் லுங்கி உடுத்த ஆரம்பித்தான்.

"உதய் என்ன இது... இதெல்லாம் எனக்குப் பிடிக்காது என்று தெரிந்துமா உடுத்துகிறாய்... லட்சணமாய் வேஷ்டியோ... பைஜாமாவோ உடுத்து..." கண்டிப்பான குரலில் தாயார் சொல்வதை காதில் கேட்காதவனாய் சென்றான்.

சரியாய் காதில் விழவில்லை என்று மறுபடியும் திரும்பி சொன்னபோது...

முதல் முறையாய் முகத்தில் சினம் காட்டி எதிர்த்தான்.

"நான் என்ன இன்னும் சின்னப்பிள்ளையா...? அது செய்.. இது செய்யாதே என்று சொல்ல... இதோ பாருங்கள். இனிமேல் என் விருப்பு வெறுப்புகளில் தலையிட வேண்டாம்... சொல்லி விட்டேன்" என்று ஒரே போடாய் போட்டான்.

தன் முன் வாய் திறவாத மகன் தன்னை எதிர்த்துப் பேசினானா? அதிர்ந்து போனாள் தாய்.

இது கனவா...? இல்லை நிஜமா...?

தன் மகன் தன்னை எதிர்ப்பதா..?

யாரிடம் இருந்து இந்த எதிர்ப்பு குணம் வந்தது? அது மட்டுமல்லாமல்... இன்னும் அடுத்து அடுத்து... அவனது செயல்களில் மாற்றம் தெரிந்தது.

இயற்கையில் ரமணியம்மாளுக்கு கொஞ்சம் கோபம் அதிகம்தான். அது பாரம்பரிய குணம்.

அவளுக்கு வாய்த்த கணவனும் வாயில்லாப் பூச்சியாய் அமைந்து விடவே, கோபமும் பிடிவாதமும் வேர் பிடித்து ஊறின. நினைத்ததை சாதித்துவிட வேண்டும் என்று நினைப்பவள்.

ரமணியம்மாள் கணவரிடம் எரிந்து விழுந்துதான் அனைவரும் பார்த்திருக்கிறார்களே தவிர, ஒருமுறையாவது அவர் சினந்து யாரும் பார்த்ததில்லை.

உதய்க்கு தந்தை என்று நினைத்தால் பரம சாது போல் தோற்றம்தான் மனக்கண்ணில் எழும்.

வேலைக்காரர்கள் அவரை 'காந்தி' என்றுதான் பெயரிட்டார்கள்.

ரமணியம்மாளை 'இந்திரா காந்தி' என்று தங்களுள் பேசிக் கொண்டனர்.

வீட்டில் ஒரு காந்திக்குத்தான் இடம் உண்டு என்று பெரியவரே மறைந்து போனார்.

கணவன் மீது காட்டிய அதிகாரத்தையும் கோபத்தையும் யார் மீதாவது காட்ட வேண்டும். மகன் கிடைத்தான்.

அந்த மகன் கணவன் போல பொறுமைசாலியாய்... வாயில்லாப் பூச்சியாகத்தான் இருந்தான். ஆனால்,



திடீரென்று அவனுள் ஓடிய இரத்தம் எதிர் திசையில் ஓட ஆரம்பித்ததோ என்னவோ அவனுக்கு தாயின் முரட்டு குணமும், கோபமும் வந்து சேர்ந்து விட்டது.

''மருத்துவம் படி உதய்... வேண்டிய பணம் இருக்கிறது. கண்டிப்பாய் கிடைக்கும்'' என்றாள், தாய்.

தாய் சொல்லுக்குக் கட்டுப்படுவதா... மருத்துவப் படிப்பை ஒதுக்கிவிட்டு பொறியியல் சேர்ந்து கொண்டான்.

மேற்படிப்புக்கு மேல் நாட்டுக்குப் போயேன் என்று தாய் சொல்ல... இந்தியாவை விட்டு நகர மாட்டேன் என்று பிடிவாதமாய் இருந்து விட்டான்.

அவன் ஏட்டிக்குப் போட்டி என நடப்பது கண்ட ரமணியம்மாள் புத்திசாலியாய் செயல்பட்டாள்.

தன் மனதிற்கு இசைந்ததை வெளிப்படையாய் காட்டாமல் அதற்கு எதிராய் சொல்லி அதைச் செய் என்றபோது அவளது விருப்பமும் ஈடேறியது. விழித்துக் கொண்ட புத்திசாலி தாய் ஒரு விஷயத்தில்தான் தன் மகனைக் கோட்டை விட்டாள்.

அவனுடைய திருமண விசயம்தான் அது.

தன் அண்ணனின் மகள் ஜெயந்தியை தன் மருமகளாய்த் தேர்ந்தெடுத்தாள்.

இந்த விஷயத்தில் மட்டும் தன் மகன் நிச்சயம் தன் விருப்பப்படிதான் நடப்பான் என்ற நம்பிக்கைதான்.

என்னதான் மற்ற விஷயங்களில் அவன் முரண்டு பிடித்தாலும் திருமண விஷயத்தில் நிச்சயம் தன் மனதிற்கு ஏற்றபடி இசைவான் என்று நினைத்தாள். ஜெயந்திதான் அவளுக்கு வரப்போகும் மனைவி என்று அவள் சொன்ன

மாத்திரத்தில் ஜெயந்தியை மணக்கக் கூடாது என்ற பித்து அவனது எண்ணத்தில் விழுந்து விட்டது.

அந்த நேரத்தில்தான் சிந்துஜா கண்ணில் பட்டாள். அவளை மடக்க வேண்டும் என்று சவாலாய் ஆரம்பித் தவன், மெல்ல மெல்ல அவள் வசப்பட்டான். அவனையும் அறியாமல் அவள் மீது காதல் ஏற்பட்டது.

தன்னுடைய செல்வ செழிப்பிற்கும், சிந்துவின் நிலைக்கும் ரொம்ப இடைவெளி... தன் தாயார் சிந்துவை ஏற்றுக் கொள்ள மாட்டார் என்றும் தெரியும்.

அதற்காக சிந்துஜாவைக் கைவிட விருப்பமில்லை. என் வாழ்க்கை... என் மனைவி... இதில் தலையிட யாருக்கும் உரிமையில்லை என்ற எண்ணம் எழுந்தது.

நிச்சயம் தாயார் தடை போடுவார்... திருமணம் ஆகாமல் இடையூறு செய்வார் என்றும் அவனுக்குத் தெரியும்.

திருமணம் முடிந்து தேனிலவுக்குப் போய் வந்து விட்டால் அம்மாவால் என்ன செய்ய முடியும்?

அதன்படியே தேனிலவுக்குப் போய் வந்தவுடன் தன் மனைவியை அழைத்துக் கொண்டு வீட்டிற்குச் சென்றான்.

ஒரு குருச்சேத்திரப் போர் நடக்கப் போகிறது... அது நிச்சயம்... அதை எதிர்க்கவும் தயாராக இருக்க வேண்டும் என்று நினைத்துச் சென்றான். ஆனால், அங்கே வரவேற்பு பலமாக இருந்தது கண்டு அவனுக்கு திகைப்பும் வியப்பும் ஏற்பட்டது. ஆரத்திச் சுற்றி வரவேற்றாள், ரமணியம்மாள்.

''வலது காலை எடுத்து வைத்து வாம்மா'' மருமகளைக் குழைவாய்... இனிமையாய் அழைத்தாள்.

தாயைச் சந்தேகமாய் பார்த்தான், உதய்.



ஏதோ உட்கருத்துடன்தான் தாயார் நடக்கிறார் என்று நினைத்தான்.

புயலுக்குப் பின் அமைதி வரும் என்றால், இங்கு ஏதோ சூறாவளி அடிக்கும் முன் அமைதியோ...?

சரி... என்ன நடந்துவிடப் போகிறது... அப்படியே ரகளை செய்து விசயத்தை பெரிதுபடுத்தினால் சிந்துவுடன் வெளியேறி விடுவது என்று முடிவு செய்து கொண்டான்.

தாயின் குணத்தை நன்றாய் அறிந்திருந்த உதய்... தாயின் அமைதியும் நிதானமும் நல்லதற்கில்லை என்று மட்டும் உணர்ந்தான்.

மாமியாரின் உண்மை குணத்தை அறிந்து கொள்ளாத மருமகள், மாமியார் நல்லவராய் தெரிகிறார்... உதய்யை பெற்றவள், அல்லவா என்ற எண்ணத்தில் சந்தோஷம் அடைந்தாள். மாமியாரை வணங்க வேண்டாமா? விரைந்து சென்று அத்தையின் காலில் விழுந்து வணங்கினாள்.

உதய் வேலைக்காரனிடம் ஏதோ உத்தரவு போட்டுக் கொண்டிருந்தான். அதனால் அவளுடன் சேர்ந்து வணங்க வில்லை.

கால்களைத் தொட்டு கண்களில் ஒற்றிக்கொண்ட சிந்து ஜாவின் செவிகள் அத்தையின் வாழ்த்துக்காகக் காத்திருந்தன.

''இந்த வீட்டுக்கு மருமகளா நீ... உன்னை எப்படி விரட்டி அடிக்கிறேன் பாரடி...''

நாராசமாய் காதில் விழுந்தன வார்த்தைகள். கண்கள் அதிர்ச்சியில் மலங்க விழிக்க அத்தையை வெறித்துப் பார்த்தாள், சிந்துஜா.



6

தன் துணிகளையெல்லாம் பீரோவில் அடுக்கி வைத்துக் கொண்டிருந்தாள், சிந்துஜா.

உதய்சங்கரின் அறை அது... பெரிய அறை... இளம் ரோஸ் வண்ணத்தில் சுவர் பளிச்சிட்டது. திரைச்சீலைகளில் பெரிய பெரிய ரோஜாக்கள் சிரித்தன.

அறையை ஒட்டிய பாத்ரூம்... இளம் நீலநிறத்தில் பளிங்கு கற்கள் பளபளத்தன.

கை இயந்திரமாய் தன் உடைகளை அடுக்கிக் கொண்டிருக்க மனம் மாமியாரின் வார்த்தைகளை அசை போட்டு மறுகியது.

உண்மையில் தான் கேட்டது நிஜமா... அவர் ஏதோ சொல்லி... தான் வேறாய் கற்பனை செய்து கொண்டோமா... உள்ளத்தில் கொஞ்சம் தடுமாற்றம்தான்.

இல்லை... நன்றாகக் காதில் விழுந்த அழுத்தமான வார்த்தைகள். இன்னும் செவியினுள் ரீங்காரமிடும் வார்த்தைகள்.

"இந்த வீட்டு மருமகளா நீ... உன்னை எப்படி விரட்டி அடிக்கிறேன் பாரடி..."

அந்த வார்த்தைகளில் அடங்கியிருந்த குரோதம் அவள் மேனியை நடுங்கச் செய்தது.

மகன் முன் அன்பே உருவெடுத்தாற்போல் வரவேற்ற மாமியார் தனிமையில் விரட்டி விடுவதாய் சொல்வது ஏன்..?



உதய் சொல்லியிருந்ததும் நினைவில் இருந்தது. "என் தாய் உன்னை மருமகளாய் ஏற்றுக்கொள்வது சந்தேகம் தான்... மருமகள் என்று அம்மா முடிவு செய்து வைத்திருந்தது மாமன் மகள் ஜெயந்தியைத்தான். இருகரம் நீட்டி உன்னை வரவேற்பாள் என்று மட்டும் எதிர்பார்க்காதே... கூடியவரை ஒதுங்கிவிடு..."

இவ்வளவுதான் அவன் சொன்னது.

'உதய்யிடம் சொல்லிவிடலாமா?'

'சேச்சே... வந்த உடனே தாயைப் பற்றி வத்தி வைக்கிறாள் என்று அவளைப் பற்றி மட்டமாய் எடைபோடுவான்.'

'பார்க்கலாம்... ஒருவேளை தன் அன்பால்... சேவையால்... பொறுமையால் அவரது மனதைத் திருப்ப முயற்சி செய்யலாம்...'

அதன்பின் அவளது குழப்பங்கள்... சந்தேகம்... கவலை... அனைத்தையும் கணவனின் அணைப்பில் மறந்து போனாள்.

மறுநாள் தானே வலியச் சென்று மாமியாரிடம் பேசினாள்.

ஆனால், மாமியாரோ முகத்தை வலித்துக் கொண்டு சென்று விட்டாள்.

அது மட்டுமல்ல - குத்தலாய்... நக்கலாய் அவளது ஏழ்மையை... அனாதைத்தனத்தைக் குத்திக்காட்டி அவள் மனதை புண்படுத்தினாள்.

போதாது என்று ஜெயந்தியின் தந்தை வேறு... அடிக்கடி வந்து தூபம் போட்டு விட்டுப் போனார்.

"என்ன பொண்ணு உனக்கு மருமகளாய் வாய்த்திருக்கிறாள்... எல்லாம் உன் தலையெழுத்து... நாலு பேர்

கேட்டால் தலை நிமிர்ந்து இன்ன குடும்பம்... இன்ன சம்பந்தம்னு சொல்ல முடியுமா? ஏதோ ஓர் அனாதைக் கழுதையை தாலி கட்டி இழுத்துக் கொண்டு வந்திருக் கிறானே. கர்மம்... கர்மம்... இவளுக்கென்ன... கிடைச்சது புளியம்கொம்புன்னு இளிச்சுகிட்டு வந்து விட்டாள்'' வாய் கூசாது அவர் பேசுவது பொறுக்காமல் காதை பொத்திக் கொண்டாள் சிந்துஜா. கண்கள் கலங்கின.

'பெரிய இடத்து மனிதர்கள்... கோபம் இருந்தாலும் குணமும் இருந்து பெரிய மனதுடன் நடந்து கொள்வார்கள் என்று அவள் எண்ணியது தவறுதான்.'

'உதய்' என்றதும் எல்லாமே மறந்து போனவள் இந்த விசயத்தையும் மறந்தே போனாள்.

அனாதை, ஏழையான தான், செல்வத்தில் சீமானாய் வாழும் உதய்யை மணந்தால் ரணகளமாகுமே என்று நினைக்காமல் போனாள்.

மாமியாரின் பதில் வார்த்தைகள் பொத்திய காதையும் துளைத்துக் கொண்டு சென்றன. ''எல்லாம் என் தலை யெழுத்து தான் அண்ணா... என்ன மாயம் பண்ணினாளோ... என் பேச்சையே காதில் போட்டுக் கொள்ளாமல் போய் விட்டான். ஜெயந்தியைப் போல நல்ல குலப் பெண் வருவதற்கு எனக்கு கொடுப்பினை இல்லை... அவ்வளவு தான்...''

''ஜெயந்தி மட்டுமா வந்திருப்பாள். அவளோட அம்பது பவுன் நகை... அறை நிறைய பாத்திரங்கள்... பீரோ... கட்டில்... ஏர்கண்டிஷன்.. கார்.. எல்லாமே கூட வந்திருக் குமே... இப்போ ஒன்னும் இல்லாத பிச்சைக்காரியாய் வந்திருக்கும் மருமகளை வைத்துக் கொண்டு அழு...''



ஏற்கனவே கள் குடித்த குரங்கு... அதற்கு தேளும் கொட்டினால் என்னவாகும்? அப்படித்தான் இருந்தது ரமணியம்மாளின் நிலை.

''அய்யோ... சொல்லாதே. என் வயிறு பற்றி எரிகிறது. இதற்கு ஒரு வழி இல்லையா அண்ணா? என் மனம் இவளை மருமகள்னு நினைக்கவும் மறுக்கிறதே... வந்த அன்றைக்கே விளக்குமாற்றால் இரண்டு சாத்து சாத்தி திருப்பி அனுப்பி இருக்கலாம். ஆபாசமாகிவிடுமே... உதய் மனம் நொந்து விடுவானே என்று பேசாமல் இருந்து விட்டேன். அண்ணா... இந்த மாயப் பிசாசை விரட்ட ஒரு வழி சொல்லேன்...''

மருமகள் காதில் விழும் என்ற கவலை இன்றி உரக்கப் பேசினாள்.

அதற்குப் பிறகு அவர்கள் 'கிசுகிசு'வென்று பேசியது சிந்துஜாவின் காதில் விழவில்லை.

ஆனால், அவளது அடிவயிற்றில் ஏதோ கலக்கம்... என்னவோ திட்டம்...

'உதய்யிடம் சொல்ல முடியாது... அவனது துணையும் இல்லாமல் ஒண்டியாய் எப்படிச் சமாளிப்பது?'

வந்த இரு நாளில் அவளுக்கு வாழ்க்கையே சலித்துப் போனது. உதய்யின் சித்தி கிரிஜாவை அப்போதுதான் சந்தித்தாள்.

கிரிஜா ரமணியின் தங்கை.

இருவருக்கும் வயதில் மட்டும் அல்ல, தோற்றத்தில்... குணத்தில் மிக வித்தியாசம்...

ரமணியம்மாளுக்கும் கிரிஜாவிற்கும் ஆறு வயது இடைவெளி.

கிரிஜாவின் அமைதியான சுபாவத்திற்கும், ரமணியின் ஆர்ப்பாட்டத்திற்கும் பொருந்தாத தொலைவு.

ரமணி தோற்றத்தில் உயரமானவள். உறுதியான தேகம்... முகத்தில் கர்வம்... பேச்சில் உதாசீனம்... கிரிஜா அப்படி இல்லை. பார்க்க சின்ன உருவம். மென்மையான தேகவாகு. முகத்தில் எப்போதும் புன்னகையும் சாந்தியும் அனை வரையும் அவள் பக்கம் ஈர்க்கும். அவளது பேச்சுக்கூட மென்மையாய் - இதமாய் இருக்கும்.

ரமணிக்கு எப்போதும் ஒரு விசயத்தில் கர்வம்தான்...

நல்ல கணவன் கிடைத்து சொத்து சுகத்துடன் ஒரே ஒரு ஆண் பிள்ளையையும் பெற்றுக் கொண்டு சுக போகத்தில் இருக்கிறோமே என்பதுதான்.

கிரிஜாவின் தலைவிதி... கணவன் உல்லாச பேர்வழி. அவனது நடத்தையைப் பற்றி விசாரிக்காமல் கிரிஜாவை மணம் செய்து தந்த பின்புதான் தெரிந்தது.

வீதிக்கொரு தாசியின் சகவாசம்... குதிரைப் பந்தயத்தில் மோகம்... குடிபோதையில் மிதப்பு... ஒழிந்தபோது சீட் டாட்டம்... ஒரு ஆண்மகனுக்கு இவ்வளவு இருந்தால் போதும் என்று எண்ணினான் போலும்.

சீக்கிரமே எல்லா போகத்தையும் அனுபவித்துவிட்டு, நோயைக் கடனாய் பெற்றுக் கொண்டு உலகை விட்டே சென்று விட்டான்.

சின்ன வயதிலேயே விதவை மட்டுமல்ல... இளம் சன்னியாசி என இருந்த கிரிஜாவிற்கு அக்காவின் மீது பாசம் இருந்ததோ இல்லையோ, அக்காவின் மகன் மீது இருந்தது. உண்மையில் உதய்யின் முகத்திற்காகத்தான் அந்த வீட்டில் வாழ்ந்தாள் எனலாம்.



பல விசயங்களில் அக்காவின் போக்கு அவளுக்கு பிடிக்கா விட்டாலும், தன் மீது உயிரையே வைத்திருக்கும் உதய்க்காக அங்கு இருந்தாள். உதய் மதிக்கும் ஒரே ஜீவன் சித்தி கிரிஜாதான்.

உதய்க்குத் தெரியும்... தான் தேர்ந்தெடுத்த மனைவியைப் பார்த்து தன் தாய் போற்றா விட்டாலும், தன் சித்தி நிச்சயம் பாராட்டுவாள் என்று.

''உதய் கண்ணா... வாழ்நாளில் ஒரே ஒருமுறை எதுவென்றாலும் திருப்பி தந்து விடலாம். வேண்டாம் என்று ஒதுக்கி விடலாம். ஆனால், மனைவியை ஒதுக்கவோ திருப்பி அனுப்பவோ முடியாது... நன்றாய் கண்களைத் திறந்து வைத்துக் கொண்டு உன் மனைவியைத் தேர்ந்து எடு. கண்களை மூடிக் கொண்டு பாழும் கிணற்றில் விழாதே.''

சித்தி குறிப்பிடுவது எதை என்று அவன் நன்றாகத் தெரிந்து கொண்டான்.

சித்தி தன் அண்ணனையோ, அண்ணனின் மகளையோ அவ்வளவாய் விரும்புவதில்லை. அவர்கள் பணச் செருக்கு உள்ளவர்கள். பெண்ணை வளர்த்த விதமும் சரியில்லை... வாய்க் கொழுப்பும் அதிகம்தான்.

"சித்தி... நான் எனக்கு - என் மனதிற்குப் பிடித்தவளைத் தான் தேர்ந்தெடுப்பேன். அதற்கு பணமோ அந்தஸ்தோ குறுக்கே வராது. போதுமா?" என்று வாக்கு கொடுத்தான்.

சிந்துஜாவை தன் சித்திக்கு பிடிக்கும் என்று உறுதியாய் நம்பினான்.

தான் முதல் முதலில் மனைவியுடன் வீட்டுக்குள் வரும் போது சித்தி வீட்டில் இல்லாததுதான் வருத்தம்.

கிரிஜா அந்த நேரத்தில் அங்கு இல்லாததற்குக் காரணம் இரண்டு.

ஒன்று - மருமகள் வரும் நேரம் தன் அக்காள் குதித்து ஆர்ப்பாட்டம் பண்ணி அசிங்கப்படுத்துவாள். அதைப் பார்த்து மவுனமாக இருக்க சகிக்காது. அதனால் அதைத் தவிர்க்க வேண்டும்.

இரண்டாவது - உதய்சங்கருக்கு திருமணம் ஆகி விட்டது என்று அறிந்து ஜெயந்தியின் தாய் சுருண்டு படுத்து விட்டாள். பார்த்துவிட்டு வர வேண்டும். பார்க்கா விட்டால் அதுவே பழியாகிவிடும்.

இரண்டு நாளில் திரும்பிய கிரிஜா சிந்துஜாவை சந்தித்தபோது மனதில் மெச்சிக் கொண்டாள்.

உதய்யிடம் பாராட்டினாள். "நல்ல தேர்வு கண்ணா... பெண் என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும். நல்ல காரியம்தான் செய்து இருக்கிறாய்."

அதைக் கேட்டு உதய்யின் முகம் மலர்ந்து போனது.

இந்த தங்க மனம் அவன் தாய்க்கு இல்லாமல் போனதே.

இருவரும் ஒரே வயிற்றில் பிறந்தவர்கள்தானா? ஒரே செடியில் பூத்த இரு மலர்கள்தான்... எத்தனை வேறுபாடு... ஒன்று தேனைத் தந்து வாசமூட்டுகிறது. இன்னொன்று கசப்பைத் தெளித்து முகத்தைச் சுளிக்கச் செய்கிறது.

கிரிஜா, சிந்துஜாவை தன்னுடன் அமர்த்திக் கொண்டு அவளைப் பற்றி விசாரித்தாள்.

அவளது கதையைக் கேட்டபோது கிரிஜாவின் மனம் இருண்டு போனது.



பூவுக்குள் இத்தனை பூகம்பமா... தளிருக்கு இத்தகைய புயலா... பாவம்...

அதுதான் கடவுளாகப் பார்த்து துணைக்கு உதய்யை அனுப்பி வைத்தாரோ என்னவோ...

இந்தப் பெண்ணுக்கு அவன் மட்டுமா... இனித் தானும்தான் துணை... ஆதரவு... அப்போதே முடிவு செய்து கொண்டாள்.

சிந்துஜாவிற்கும் அத்தையின் தேள் கொடுக்கு வார்த்தைகளின் வேதனையிலிருந்து தப்பிக்க... அந்த வேதனைக்கு மருந்து பூச ஒரு அன்பு ஜீவன் கிடைத்ததே என்ற சந்தோஷம்.

அத்தை ஏதாவது முள்ளாய் குத்தினால்.. பாம்பாய் சீறினால்... மனதைக் கீறி ரணப்படுத்தினால் புகலிடம் கிரிஜாதான்.

அழ வேண்டும் என்றாலும் அவள் தோள்கள் தயாராய்க் காத்திருக்கும்.

தன் தாயின் மறு உருவாய் கிரிஜாவை நினைத்து அவளுடன் ஒன்றினாள் சிந்து.

கிரிஜாவிடம் மனம் திறந்து மாமியார் தன்னை விரட்டியடிக்கப் போவதாய் பேசியதை சொன்னபோது அவள் சிரித்து விட்டாள்.

"அது யாராலும் முடியாதும்மா. உதய் உனக்குப் பெரும் துணையாக இருக்கிறானே... அவனை மீறி ஏதும் நடந்து விடுமா... நடக்கவும் விட்டு விடுவானா? அதெல்லாம் எதுவும் நடந்து விடாது. தைரியமாய் இரு. சும்மா வாய்ப்பந்தல்தான். அவர்களால் வாய் கிழியப் பேசத்தான் முடியும். நடைமுறையில் எதுவும் செய்யத் துணிவிருக்காது. நீயே பார்."

கிரிஜாவின் வார்த்தைகள் அவளுள் துணிவையும் சக்தியையும் தந்தது.

ஆனால், அவளே அறியாமல் சதி வேலை நடந்தபோது - அந்த சதி வலையில் உதய்யும் சிக்கி அவளையே சந்தேகிக்கும் நேரம் வந்தபோது...

கிரிஜா சித்தியாலும் ஏதும் செய்ய முடியாமல் போனது.



7

தூரத்து உறவினன் என்று கூறிக் கொண்டு வந்த ராஜவேலுவை விழுந்து விழுந்து உபசரித்தாள் ரமணியம்மாள்.

ராஜவேலு யார் என்று கிரிஜாவிற்கே தெரியவில்லை. தெரிந்திருக்க நியாயமும் இல்லைதான்.

தன் அக்காவும், அண்ணனும் சேர்ந்து ஏற்பாடு செய்திருக்கும் நாடகப் பாத்திரம் என்று அவளுக்கு எங்கே தெரியும்?

ஒண்ட வந்த பிடாரியான சிந்துஜாவை ஓட ஓட விரட்ட வேண்டும். அதற்காக அண்ணன் - தங்கை இருவரும் திட்டம் தீட்டி ஒருவனைப் பிடித்தார்கள்.

அவன் யார் என்ற கேள்வியைச் சமாளிக்க அவனை தூரத்து உறவினனாக்கினார்கள்.

தூரம் என்றால் வெகுதூரம்...

''யாருக்கா அது?'' சந்தேகமாய் கேட்ட தங்கைக்கு பதில் சொன்னாள் ரமணி.

''அதுதான் வெங்கடாசலம் இல்லை...''



''எந்த வெங்கடாசலம்?'' விழித்தாள் கிரிஜா.

அவள் விழித்த விழி ரமணிக்கு திருப்தி தந்தது. அதுதானே வேண்டும்.

''உனக்குத் தெரிந்திருக்காது... நம் அம்மாவுக்கு சித்தப்பா உறவு... அவரோட மருமகனுக்கு இவன் தம்பி. அதுவும் ஒன்று விட்டது...''

கிரிஜாவால் விசாரிக்க முடியாத அளவு நீண்டு போன உறவு...

''ஓ... புதிய உறவா...? திடீரென எங்கிருந்து முளைத்தான்?''

''அவனே வந்து சொன்னான். நாங்கள் எங்கே பார்த்தோம்... விசாரித்துக் கொண்டு வந்தான். நீயும் அப்போது அங்கு இல்லை'' வாயில் பொய் இயல்பாய் வந்தது.

யாராக இருந்தால் நமக்கென்ன என்று கிரிஜா இருந்து விட்டாள்.

அழையா விருந்தாளியாக தினமும் வந்து போக ஆரம்பித்தான் ராஜவேலு.

அவனை உபசரிக்க தன் மருமகளை அழைப்பாள் ரமணி. ''இதோ பார்... நம் பக்க உறவினன். கவனித்துக் கொள்ள வேண்டியது உன் பொறுப்பு'' என்று கட்டளையிட்டாள்.

''அவனுக்கு குளிர்பானம் கொண்டு வந்து கொடு.''

''நல்ல வெத்தலையாய் பார்த்து மடித்துக் கொடு.''

''டிபன் ஆகியிருக்கா... போய் தட்டில் போட்டு ராஜவேலுக்கு தா...''

அத்தையின் ஏவல்களுக்குக் கட்டுப்பட்டும், அதே சமயம் ராஜவேலுவின் ஆபாசமான இளிப்பையும் வெறிக்கும் பார்வையையும் சகித்துக் கொள்ள முடியாமலும் தவித்துப் போனாள்.

கிரிஜாவிடம் சரண் புகுந்தபோது... ''அசடு... மீறி அவன் என்ன செய்ய முடியும்? கொஞ்சம் சபல புத்தி போலிருக்கு. அக்காவுக்கும் புத்தி இப்படிப் போக வேண்டாம். மூன்றாம் மனிதர் முன், வீட்டு மருமகளை இப்படியா அலைய விட வேண்டும்... அக்காவிடம் சொல்லிப் பார்க்கிறேன்'' என்று தைரியம் கொடுத்தாள்.

தன் அக்காவிடம் பேசியபோது அவள் எரிந்து விழுந்தாள். கொண்டு வந்தால் என்ன தேய்ந்து விடுவாளோ? என்ன பெரிய மகாராணியாய் இருந்தவளாக்கும்... நாலு காசுக்கு வக்கில்லாமல் நானூறு பேர் முன்னால் பல்லை இளித்து வியாபாரம் செய்தவளுக்கு இவன் ஒருவன் முன் வருவது அசிங்கமாக இருக்கிறதோ... பெரிய பத்தினி வேடம்தான் போ... இதோ பார் கிரிஜா... இது எனக்கும் என் மருமகளுக்கும் இருக்கும் சமாச்சாரம். நீ வக்காலத்துக்கு வராதே... மாம்...''

முகத்தில் அடித்தாற் போல் பேசிய பின்பு இனி என்ன சொல்ல முடியும்?

தனிமையில் சிந்துஜாவுக்கு மட்டும் ஆறுதலும் தைரியமும் சொன்னாள்.

''தைரியமாய் இரும்மா. கடவுள் மோசம் பண்ண மாட்டார். இவர்களது அட்டகாசம் எத்தனை நாட்கள் பார்க்கலாம்'' என்று தேற்றினாள்.



ஆனால், அவர்களது அட்டகாசம் அளவுக்கு மீறிய போது கிரிஜாவாலும் ஏதும் செய்ய முடியவில்லை. திடீரென்று ஒருநாள் பூங்கொத்து வீட்டிற்கு வரும். அதுவும் உதய்சங்கர் முன்னாலேயே.

''என் அன்பு கண்மணி சிந்துஜா, நேற்று எனக்கு நீ பரிமாறிய புதுவகை இனிப்பு பிரமாதம். எனக்காகவே செய்தாய் போலிருக்கிறது. என் அன்பைக் காட்ட இதோ இந்த பூங்கொத்து - ராஜவேலு'' என்ற சீட்டு வேறு.

அதைக் கண்டு முகம் சுளித்தக் கணவனைக் கண்டு கையை பிசைந்து கொண்டாள் சிந்து.

சோபாவில் கள்ளச் சிரிப்புடன் அத்தை அமர்ந்திருப்பதையும் கண்டாள்.

உதய் அலட்சியமாய் அந்த சீட்டை வீசி எறிந்து விட்டு அவள் பக்கம் திரும்பி ''சிந்து... உன்னைப் பற்றி எனக்குத் தெரியும். இனி கண்டவனுக்கெல்லாம் பரிமாறப் போகாதே'' என்று உறுதியாய் கூறிவிட்டு எழுந்து சென்றான்.

அதற்குப் பின்புதான் இழுத்து வைத்திருந்த மூச்சை நிம்மதியுடன் வெளியிட்டாள்.

இப்போது மாமியாரின் முகத்தில் சிரிப்பு மறைந்து போனது. ஏமாற்றம்தான் தெரிந்தது.

நினைத்தது ஒன்று. நடந்தது ஒன்று... தன் மகன் சந்தேகம் கொள்வான்.. மனைவியை விரட்டி விடுவான்... அல்லது குறைந்த பட்சம் கத்தித் தீர்ப்பான் என்ற எதிர்பார்ப்பும் வீணாயிற்று.

ரமணி ஒருபுறம் பொருமிக் கொண்டிருக்க... சிந்துஜா ஒருபுறம் மனதினுள் சந்தோஷப்பட்டுக் கொண்டிருந்தாள்.

நல்லவேளையாய் தன் கணவன் ஆண்களுக்குரிய சந்தேகக் கண்களுடன் பார்க்காமல் பெருந்தன்மையாய் - நடந்ததை குப்பையென்று ஒதுக்கியது அவளுக்கு நிம் மதியைத் தந்தது.

இந்த நிம்மதி நிரந்தரமா? மறுபடியும் ஏதாவது அசம்பாவிதமாக நடந்தால்...

எறும்பூர கல்லும் தேயுமே... சந்தேக எறும்பு தொடர்ந்து ஊர்ந்தால்... கல் மனம் தேய்ந்து போகுமே... அந்த பயமும் ஏற்பட்டது.

முதல் முயற்சி தோல்வியடைந்ததால் ஓய்ந்து போய் விடவில்லை ரமணியம்மாள். அடுத்ததற்கு திட்டமிட்டாள்.

ஒரு வாரம் கழித்து தன் மருமகளை அக்கறையுடன் அழைத்தாள். என்னவோ... எதற்கோ என்ற பதைப்புடன் வந்து நின்றாள் சிந்துஜா.

''இதோ பாரம்மா... என்னதான் இருந்தாலும் நீ என் மருமகள். எல்லா உரிமையும் உனக்கு இருக்கிறது. இந்தா இந்த நகைகளைப் பிடி... போட்டுக் கொள்'' என்று தந்தாள்.

இரண்டு வடம் சங்கிலி... ஒரு ஜோடி முத்து வளை யல்கள்... ஒரு ஜதை புஷ்பராகக் கம்மல்... ஒரு மோதிரம்.

அனைத்தும் தனக்கு...? தனக்கா...! அதுவும் மாமி யாரிடம் இருந்து...!

இன்றைக்கு எந்த நரி முகத்தில் விழித்தேன்... இல்லை... சூரியன் மேற்கு திக்கில் உதித்தானா... நம்பவே முடிய வில்லையே...

சிந்துவிற்கு ஆச்சரியமென்றால் ஆச்சரியம். என் கண் முன் அணிந்துகொள் என்று அன்புடன் கேட்டுக்கொண்ட



மாமியாரின் விருப்பத்திற்கு இணங்கி நகைகளைப் போட்டுக் கொண்டாள்.. மோதிரத்தில் 'ஆர்' என்று இருப்பதைக் கண்டு மாமியாரைப் பார்த்தாள்.

''என்னுடையதுதான்... புதுசா வாங்கினது... வயதான சுருக்கம் விழுந்த என் விரலுக்குப் போடுவதைவிட பிஞ்சு வெண்டை போல இருக்கும் உன் விரலுக்கு போட்டால் அழகாய் இருக்குமே என்று உனக்குக் கொடுத்துவிட்டேன். போட்டுக்கம்மா. என் அன்பளிப்பாய் இருக்கட்டும்.''

தன்னையே கிள்ளிப் பார்த்துக் கொண்டாள் சிந்து. தூங்குகிறோமா... கனவு காண்கிறோமா... இல்லையே வலிக்கிறதே...

''உன் விரலுக்கு அழகாய் இருக்கிறது பார்'' மெச்சும் குரலில் மாமியார் சொன்னதை புன்சிரிப்புடன் ஏற்றுக் கொண்டு சென்றாலும் உள்ளுக்குள் லேசாய் உதைப்புதான்.

எந்தப் புற்றில் என்ன பாம்பு ஒளிந்திருக்குமோ... எப்போது 'புஸ்' என்று வெளிவருமோ...

அவள் பயந்தது போலவே பாம்பும் வெளிவந்தது... விஷத்தையும் கக்கியது.

அன்றைக்கு வெள்ளிக்கிழமை.

அதிசயமாய் மருமகளை அழைத்துக் கொண்டு கோயிலுக்குக் கிளம்பினாள் ரமணி.

அம்மனுக்கு சேலை சார்த்த வேண்டும்.. புதுமணம் புரிந்து கொண்ட சிந்துஜா தன் கையால் கொடுப்பது இன்னும் நல்லது என்று சொன்னதால் சிந்துவும் புறப்பட்டுச் சென்றாள்.

ஏதோ கடவுளின் கருணையால் மாமியார் மனம் கனிந்து வருகிறார்... இனி தன் வாழ்க்கையில் எந்தவிதக் கஷ்டமும் இல்லை என்று மனம் குதூகலிக்க கோயிலுக்குச் சென்றாள்.

மனைவி தாயுடன் கோயிலுக்குச் சென்றிருந்த விஷயம் அறிந்து கொண்ட உதய் கூடத்தில் அமர்ந்து கொண்டு தொலைக்காட்சியைப் பார்த்துக் கொண்டு இருந்தான்.

அந்த நேரத்தில் மாமன் பரசுராம் வந்துவிட அவருடன் பேசிக் கொண்டிருந்தான். பெய்த மழை... ஏறிய விலைவாசி... மந்திரிகளின் பித்தலாட்டம்... தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்... இவற்றையெல்லாம் ஒரு அலசு அலசிவிட்டு அடுத்த பேச்சுத் தலைப்பைப் பற்றி யோசித்துக் கொண்டிருந்தபோதுதான் ஒரு சிறுவன் வந்தான்.

''ராஜவேலு என்கிறவர் இந்த கடிதத்தைக் கொடுத்து விட்டு வரச் சொன்னார்'' என்று ஒரு கடிதத்தை நீட்டினான்.

''கடிதமா... யாருக்குப்பா?'' வியப்பான குரலில் மாமா கேட்டார்.

''இங்கே சிந்துஜான்னு அம்மா இருக்காங்களாமே... அவங்களுக்குத்தான்... பிடியுங்க... எனக்கு நேரமாச்சு...''

மாமாவின் நீட்டிய கையில் அந்தக் கடிதத்தைத் திணித்துவிட்டு ஓடியே போனான்.

மாமாவின் புருவ மத்தியில் பெரிய முடிச்சு... ''என்னப்பா உதய் தவறுதலாய் பெயரைச் சொல்லிக் கொடுத்திருக்கிறானா... ராஜவேலு உன் மனைவிக்கு எதுக்குக் கடிதம் எழுதணும்... இந்தா பிடி... யாருக்கு என்று பார்'' கடிதத்தை அவன் கையில் வைத்தார்.



உதய்சங்கருக்கும் இது வியப்புதான்... ராஜவேலு எதற்கு தன் மனைவிக்குக் கடிதம்...? மண்டையில் குடைந்த கேள்விக்கு விடை காண கடிதத்தைப் பிரித்தான்.

கடிதம் சிந்துஜாவிற்குதான் என்று தெரிந்தது.

**''காதலி சிந்துஜாவிற்கு... என் காதல் பரிசாக நான் கொடுத்த மோதிரத்தை அணிந்து கொண்டிருப்பாய் என்று நினைக்கிறேன். நேற்று நீயும் நானும் சந்தித்துப் பேசியதை யாராவது பார்த்து விட்டார்களா? இந்தக் கடிதத்தைக் கொண்டு வரும் பையன் என் நம்பிக்கைக்கு உரியவன். அவனை நம்பி உன் பதிலைக் கொடுக்கலாம்.**

**- காதலன் ராஜவேலு**

படிக்கப் படிக்க முகம் சிவந்து போயிற்று உதய்க்கு.

சந்தேகம் என்னும் பேய் சட்டென்று பிடித்துக் கொள்ளும். அந்தப் பேய் ஆட்கொண்டு விட்டால் மூளையை வேலை செய்ய விடாமல் அமுக்கிவிட்டு அட்டகாசமாய் ஆட்டம் போடும்.

அந்தக் கடிதத்தைக் கண்டதும் உதய்க்கும் அந்த நிலைமை தான்.

நெருப்பு இல்லாமல் புகை வருமா...?

என்னிடம் காணாத எந்த சிறப்பை அவனிடம் கண்டு மயங்கினாள்...

ஒருவேளை அவளை உத்தமி என்றுதான், நாம் மதிமயங்கிப் போய் நம்பி விட்டோமோ...

இருக்காது... அவள் அப்படிப்பட்டவள் இல்லை...

வந்தவுடன் விசாரித்தால் ஆயிற்று... உண்மை தெரியும்...

''என்னப்பா உதய்... ஏதோ இடி விழுந்த மாதிரி இருக்கிறாயே... கடிதத்தில் அப்படி என்ன செய்தி... தலை போகிற மாதிரி'' மாமாவின் குரலில் அவன் விழித்து அவரைப் பார்த்தான்.

''மாமா... அந்த ராஜவேலு எப்படிப்பட்டவன்... இங்கே ஏன் அவன் அடிக்கடி வருகிறான்?'' என்று விசாரித்தான்.

''அவன் நல்லவன்தான்ப்பா... ஆனா பெண் பித்து... அழகான பெண்களைப் பார்த்தால் போதும். தேன் குடித்த நரிதான்... அவனுக்கு அதில் அதிர்ஷ்ட மச்சம் இருக்கிறது உதய்... எந்தப் பெண்ணும் அவனது தளுக்குப் பேச்சில் மயங்கி விடுவாள். அது மட்டுமல்ல, அவனிடம் நிறைய பணமும் இருக்கிறது'' என்றவர் கொஞ்சம் குரலைத் தாழ்த்தி ''சொன்னால் தப்பாய் நினைக்கமாட்டாயே... உன் மனைவியைப் பார்க்கத்தான் அடிக்கடி வருகிறான். பாவம், அந்தப் பெண் இவனது பேச்சில் சொக்கிப் போகிறாள். அவளைச் சொல்லிக் குற்றமில்லை... அவன் ராசி அப்படி...'' சந்தேகத் தணலை இன்னும் ஊதி ஊதி எரிய விட்டார் அவர்.

உதய் குழம்பிப் போயிருந்தபோதுதான் மாமியாரும் மருமகளும் கோயிலில் இருந்து திரும்பினர்.

கணவனைக் கண்டு முகம் மலர்ந்து போனாள் சிந்து. ''சீக்கிரம் வந்து விட்டீர்களா?'' உபசரிப்பாய் கேட்டபோது அவனிடம் இருந்து 'உம்' என்றுதான் பதில் வந்தது.

இந்த நேரத்தில் தன் மாமியாரும் அவளது அண்ணனும் கண் ஜாடையில் பேசிக் கொண்டதை இருவரும் கவனிக்கத் தவறி விட்டனர்.

'என்னவாயிற்று?' தங்கை சாடையில் கேட்க கட்டை விரலை உயர்த்திக் காட்டி வெற்றி என்று சைகையால் கூறினார்.



ரமணியின் முகத்தில் ஆயிரம் வால்ட் பல்பின் வெளிச்சம்.

''சிந்து, உன் விரலில் என்ன புதிதாய் மோதிரம்... யார் கொடுத்தது?'' உதய் கேட்டபோது பதில் சொல்ல வாயெடுத்த மருமகளை பேசவிடாமல் ''சிந்துஜா... இந்த தேங்காய் மூடிகளைக் கொண்டு போய் பூஜை அறையில் வைத்து விட்டு வா... எல்லோரும் பசியுடன் காத்திருக்கிறார்கள்...'' என்று அனுப்பி வைத்தாள்.

கணவனிடம் பிறகு சொல்லலாம் என்று அவளும் விரைந்து சென்றாள்.

அவளது தலை மறைந்ததும், ''உதய்... அது என்ன மோதிரம்னு விசாரித்தாய்... நீ வாங்கித் தரவில்லையா...? என்னிடம் நீ தந்த பரிசு என்றாளே... அதுவும் 'ஆர்' என்று இருக்கிறது. ஒன்று உன் முதல் எழுத்து இருக்க வேண்டும்... இல்லை அவளுடைய முதல் எழுத்தாய் இருக்க வேண்டும்... இரண்டும் இல்லாமல் 'ஆர்' எதற்கு?''

ஏதும் பேசாமல் எழுந்து சென்ற மகனைப் பார்த்துவிட்டு அண்ணன் பக்கம் திரும்பி ஒரு வெற்றிச் சிரிப்பு சிரித்தாள் ரமணி.

''சபாஷ் ரமணி... நல்ல போடு. இனி பையன் இந்த அடியிலிருந்து எழுந்திருக்க மாட்டான்...''

''அண்ணா... ஒருவேளை இதுவும் 'புஷ்'வாணம் ஆகிவிட்டால்... அவள் அழுது அவன் மனதைக் கலைத்து விடுவாளோ... அவனும் பனிக்கட்டி கரைவது போல உருகி விட்டால் என்ன செய்வது?''

''அப்படியெல்லாம் எதுவும் நடக்காது. நானும் எவ்வளவு ஊதணுமோ அவ்வளவு ஊதியிருக்கிறேன். உன்

பிள்ளை ஆடிப் போயிருக்கிறான்... அடுத்த திட்டத்தின் முடிவு அவள் இந்த வீட்டை விட்டு ஓடுவதாய்தான் இருக்கும்..." மதர்ப்பாய் சொன்னார் பரசுராமன்.

"அது என்ன திட்டம்?" ஆவலுடன் கேட்டாள் ரமணி.

அங்கு மகாபாரத சகுனியும், இராமாயண கூனியும் சேர்ந்து திட்டம் போடுவது போல, தன்னை ஓட விரட்ட சதி நடப்பதை அறியாமல் சிந்துஜா ஏதோ ஒரு பாடலை சந்தோஷமாய் முணுமுணுத்துக் கொண்டு வேலையை செய்து கொண்டிருந்தாள்.



8

சிந்துஜாவிற்கு இரண்டு நாளாய் எதுவுமே பிடிக்கவில்லை.

இது என்ன வாழ்க்கை...

இதுநாள் வரை அத்தையின் அன்பு இல்லை என்று ஏங்கினது மாறி, அத்தை அன்பு காட்ட ஆரம்பித்து விட்டார்கள் என்று சந்தோஷப் பட்டால்... தன் கணவர் 'குர்' என்று இருக்கிறானே... தன்னிடம் ஏன் இந்த பாராமுகம் என்று நொந்து கொண்டாள்.

அன்றைக்கு அறைக்குள் போனதும் அவளது விரல் களைப் பிடித்துப் பார்த்துவிட்டு "யார் கொடுத்த மோதிரம்?" என்று கேட்டான்.

"ஏன்... அத்தைதான் அழகாய் இருக்கிறதா?" ஆசையுடன் அவன் முன் நீட்டினாள்.

'ஆர்' என்ற எழுத்து அவனை வெறித்து நின்றது.

தன் அம்மாவாவது... தன் மருமகளுக்குக் கொடுப்ப தாவது... இவள் சொல்வது பொய்... மூடி மறைக்கிறாள்..



அவனது நெஞ்சில் ஏதோ வலி... சிந்து தனக்கு மோசம் செய்வாளா...?

பார்க்கும் ஆடவர்களிடம் பல்லிளிக்கும் ஜாதியும் இல்லை அவள்.

தன்னிடமே எட்டி நின்றாளே...

மாமா சொல்வது போல ராஜவேலுவிற்கு அதிர்ஷ்ட மச்சமோ... தலை விண்ணென்று வலித்தது. திரும்பிப் படுத்துக் கொண்டான்.

கணவனின் மனப் போராட்டத்தை அறியாதவளாய் அவள் அவனருகில் படுத்துக் கொண்டாள். பாவம்... களைப்பு என்று நினைத்து உறங்கியும் போனாள்.

ஆனால், அதன்பின் அவன் மவுனம் காக்கவே அவளுக்கு வேதனை பிடுங்கித் தின்றது.

போகட்டும் எதற்குக் கோபம்... காரணத்தை வாய்விட்டுச் சொல்லக் கூடாதா...? தன் கன்னத்தில் அறைந்தாலும் பரவாயில்லை... பொறுத்துக் கொள்ளலாம். பேசாமல் கொல்லுகிறானே... மனம் துவண்டு போனாள்.

கணவன் மனதை சந்தேகப் புழு அரித்துக் கொண் டிருப்பதை அவள் உணரவில்லை.

கிரிஜாவிடம் சொல்லி அழுதாள். "என்ன ஆயிற்று இவருக்கு... உங்களிடம் ஏதாவது சொன்னாரா?" என்று கேட்டாள்.

"இல்லையே சிந்து... அவன் அவ்வளவு லேசில் எதுவும் வெளியிட மாட்டானே. வருத்தப்படாதேம்மா, இரண்டு நாளில் எல்லாம் சரியாகிவிடும்."

வருத்தப்படாதே என்று அவளுக்கு சித்தி கூறினாலும் சித்தியும் வேதனைப்படுகிறாள் என்று தெரிந்தது.

இரண்டு நாட்களுக்கு மேல் ஐந்து நாட்களும் ஓடி விட்டன. கணவன் முகத்தில் சிரிப்பை தேடி காணாமல் துடித்தாள்.

அருகில் வந்து அணைக்கவோ... கொஞ்சவோ இல்லை... அவளிடம் இருந்து ஒதுங்கிப் போனான். 'அவரும் மனம் மாறி விட்டாரோ...' தனிமையில் அழுதாள்.

அன்று வயிற்றைக் குமட்டி வாந்தி எடுத்தபோது கிரிஜா அவளை பரிகாசம் செய்தாள்..

முகம் சிவந்து, கிரிஜாவிடம் சொன்னாள். அந்த சந்தோஷமான செய்தியை தன் கணவனிடம் சொல்ல வேண்டும்... அதைக் கேட்டவுடன் அவர் முகத்தில் சிரிப்புத் தோன்றும்...

வயிற்றில் உதித்த ஜீவன் பாலமாக இருந்து பிணக்கைத் தீர்த்து சேர்த்து வைக்க மாட்டாளா... நிச்சயம் அது நடக்கும்... அந்த இன்ப செய்தியை அறிந்தவுடன் அவ ருடைய காரணமில்லாக் கோபம் மாயமாகிவிடும். மறு படியும் தன் மீது காதலைப் பொழிவார்...

மனம் இலேசாகி அவனுக்காகத் தவமிருக்க ஆரம் பித்தாள்.

இரவு தனக்காக காத்திருக்க வேண்டாம் என்றும் தான் வரத்தாமதமாகும் என்று தகவல் அனுப்பியிருந்தான் உதய்.

அவனுக்காகக் காத்திருந்தவளுக்கு வெகு ஏமாற்றம். வேலைகள் சீக்கிரம் முடிந்துபோய் படுத்துக் கொண்டாள் சிந்து.



இரண்டு மூன்று முறை வாந்தி எடுத்திருந்ததால் சோர்ந்து போயிருந்த அவள் படுத்தவுடன் தூங்கிவிட்டாள்.

அடித்துப் போட்டாற்போல் தூங்கினவளுக்கு அதற்கு பின் நடந்தது என்ன என்பதே தெரியவில்லை.

பதினோரு மணிக்கு வீடு திரும்பினான் உதய். அவனுக்கு வீட்டிற்கு வரவும் பிடிக்கவில்லை. குழப்பத்திற்கும் வேதனைக்கும் மருந்து என மதுபானத்தைக் குடித்திருந் தான்.

மாடி ஏறி போனபோது தன் அறையிலிருந்து யாரோ வெளிச் செல்வதைக் கண்டு ஓடிப் பிடிக்க நினைத்தான்.

யார் என்று இருட்டில் சரியாகப் பார்க்க முடியாமல் போனது...

போராட்டத்துடன் அவன் பால்கனி சுவர் பக்கம் வரை வந்து விட்டான்.

சட்டையைப் பிடித்திருந்த உதய்யிடம் இருந்து நழுவ பித்தானை கழற்றியிருந்த சட்டையைக் கழற்றிவிட்டு மேலிருந்து லாவகமாய் குதித்தான்.

அவன் ஓடுவதையே பார்த்துக் கொண்டிருந்த அவனுள் எரிமலை வெடித்தது.

எந்த கணவன் தன் மனைவியின் அறையிலிருந்து அந்நியன் ஓடுவது பார்ப்பது சகிப்பான்...?

மாடி விளக்கு எரிந்தது.

ரமணியம்மாள் ''என்னப்பா சத்தம்... தூக்கம் கெட்டு ஓடி வந்தேன்'' என்று மகனிடம் விசாரித்தாள்.

கையில் யாரோ ஒருவனின் சட்டையை வைத்துக் கொண்டிருந்த மகனைப் பார்த்து ''உதய்... உதய்...'' என்று

உரக்க அழைத்தாள். "என்னப்பா... விக்கித்துப் போய் நிற்கிறாய்... என்ன ஆச்சு...? கையில் என்ன சட்டை? அட... இது ராஜவேலுவோடது... உன் கையில் எப்படி வந்தது?" ஆச்சரியமாய் கேட்பது போல் நடித்தாள்.

தாயின் வார்த்தைகள் காய்ச்சிய ஈயமாய் காதைத் தகிக்கச் செய்தன.

அப்படியென்றால்... அறையிலிருந்து ஓடியவன் அவன்தானா...?

தான் வரும் அரவம் கேட்டுத்தான் ஓடிப் போயிருக்கிறானோ...

எங்கே அந்த சண்டாளி... தன் வாழ்க்கையைப் பாழாக்கிய படுபாவி... அவளை...

"உதய்... ஏதாவது பேசுப்பா... மரம் போல நிற்கிறாயே..."

பரிவோடு தாய் சொன்னதும் அவ்வளவுதான் கலைந்து போனான்.

"அம்மா.. நான் மோசம் போய்விட்டேன். உன் வார்த்தையை கேட்காமல், கண்டவளை நம்பி ஏமாந்து விட்டேன்" அவன் வாய் புலம்பியது.

தன் எண்ணமும் நிறைவேறிய திருப்தியில் ரமணி மகனை வருடிக் கொடுத்தாள்.

வெளியே நடந்த ஆரவாரத்தினால் தூக்கம் கலைந்து எழுந்து வந்தாள் சிந்துஜா.

என்ன... தாயும் மகனும் இங்கு நிற்கிறார்களே... அதுவும் மத்திய இரவில்...

"நன்றாகத் தூங்கிவிட்டேன்... இப்போதுதான் வந்தீர்களா?" என்று கேட்ட மனைவியை வெறித்துப் பார்த்தான்.



'ஏன்... உங்கள் சரச சல்லாபத்திற்கு இடையூறாக வந்து விட்டேனா?' உள்ளுக்குள் பொருமினான்.

'பாவி,.. குழந்தை போல முகத்தை வைத்துக் கொண்டு மனதினுள் இவ்வளவு நஞ்சா... நயவஞ்சகிதான்...'

"போப்பா... போய் படுத்துக் கொள்... இப்பவே பதினொன்றரை ஆகிவிட்டது... உன் மனம் கலங்கிப் போயிருக்கிறது... நாளை பேசிக் கொள்ளலாம்" நினைத்ததைச் சாதித்துவிட்ட வெற்றிக் களிப்பில் ரமணி நிதானமாய் மாடிப்படிகளில் இறங்கினாள்.

உதய்... பாவம்... அவன் மூளை சடாரென்று வேலை நிறுத்தம் செய்துவிட... இதயம் அதிகமாய் வேலை செய்ய... தளர்ந்து போய் படுக்கையில் விழுந்தான்.

அத்தனை கழுகுப் பார்வைகளையும், காவலையும் தாண்டி அவன் எப்படி மேலே அடியெடுத்து வைக்க முடியும் என்று யோசிக்கவும் அவனுக்கு சக்தி இல்லை. அந்த அளவுக்கு மழுங்கிப் போயிருந்தான். அவன் உள்ளத்தில் குரோதம் கொப்பளித்தது. அவளையே தேவதை என்று நினைத்து, தாயாரையும் எதிர்த்து விரோதம் செய்துகொண்டு திருமணமும் பண்ணிக் கொண்டதற்கு முகத்தில் கரி பூசிக் கொண்டதுதான் மிச்சம்...

இனி என்ன செய்வது...?

அவளை அடித்துத் துரத்திவிடலாமா...?

துரத்தி விட்டால் ஊர் உலகம் முன் விசயம் நாறிப் போகும்... மானம் விமானம் ஏறிவிடும். அதற்காக இங்கேயும் வைத்துக் கொள்ளவும் முடியாது.

கண் முன்னால் இந்தக் கண்றாவியையெல்லாம் பார்த்துக் கொண்டிருக்க சகிக்காது.

எண்ணங்கள் முரண்டு பண்ண... தூக்கம் வராமல் தவித்தான்.

அவனது மன போராட்டத்தை அறிந்து கொள்ளாத சிந்துஜா மறுபடியும் தூங்கிப் போனாள்.

மறுநாள் சிந்துஜாவின் வாழ்நாளில் மறக்க முடியாத நாள்.

மறக்க நினைத்தாலும் முடியாத நாளும் அந்நாள்....

ஆசையோடு கணவனிடம் தான் தாயாகிய செய்தியை எடுத்துரைத்தாள்.

அவன் அதைக் கேட்டு தன்னை அணைப்பான்... மகிழ்ச்சியில் துள்ளிக் குதிப்பான் என்றெல்லாம் கற்பனை செய்து வைத்திருந்தாள்.

ஆனால், நடந்தது வேறு.

அவன் அதைக் கேட்டு குதிக்கவும் இல்லை... அவளை மகிழ்ச்சியுடன் அணைக்கவும் இல்லை. வேண்டாம்... ஒரு புன்னகை... ஊகூம்... அதுவும் கிடைக்கவில்லை.

ஏன் அவனுக்கு குழந்தை ஆசை இல்லையோ... அவள் மனதில் நெருடல்.

கொஞ்ச நாட்களாய் அவன் விலகிச் செல்வதையும் உணர்ந்திருந்தாள்.

அன்று தன்னைக் காதலித்துக் கைப்பிடித்த 'உதய்' வேறு... இன்று இருக்கும் உதய் வேறு...

அவளைப் பார்க்கிறபோதே பரவசமடையும் முகம் இப்போது சுளிப்பைக் காட்டுகிறது. காதலினால் பளபளக்கும் கண்கள் கனல் கங்குகளாய் மாறியிருக்கின்றன.



அவளை அணைக்கத் துடிக்கும் கரங்களும், ஏற்கத் தவித்த மார்பும் ஏன் இறுகிக் கிடக்கின்றன...?

ஏன்...?

எங்கேயோ வெறித்து நின்ற அவனைத் தன் பக்கமாய்த் திருப்பினாள்.

''உங்களைத்தான்... நான்... நீங்கள் அப்பாவாகப் போகிறீர்கள் என்றேன்...''

சிவந்துபோன கண்கள் அவளை வெறித்துப் பார்த்தன.

கண்களில் எந்தவித சலனமும் இல்லை... முகபாவத்திலும் மாறுதல் இல்லை... இறுக்கம்தான் தெரிந்தது.

அவளுக்குள் பீதி ஏற்பட்டது.

'பேயறைந்தாற்போல' என்பார்களே... இதுதானா...?

அதன்பிறகு அவன் வாயிலிருந்து வந்த வார்த்தைகளைக் கேட்டு அவள்தான் பேயால் அறையப்பட்டவள் போல ஆனாள்.

"அது சரி... உன் வயிற்றில் வளரும் குழந்தைக்கு தகப்பன் நான்தான் என்பது என்ன நிச்சயம்...? யாருடைய குழந்தையை சுமந்து கொண்டு இருக்கிறாயோ... யாருக்குத் தெரியும்?'' ராஜவேலுவின் பெயரை உச்சரிக்கவும் மனம் கசந்தது.

பெரிய இடி ஒன்று தலைமேல் விழுந்தது போல அசைவற்று சிலையாய் நின்றாள் சிந்து.

உடல் முழுவதும் நெருப்பு பட்டது போலத் தகித்தது... அந்த தகிப்பில் மனமும் வெந்து போனது.

தன் கணவன் வாயிலிருந்து இந்த அசிங்கமான வார்த்தைகள்... கேட்கவே குமட்டுகிறதே...

விரட்டி வந்து காதலித்துக் கைப்பிடித்தவன் இப்போது தன் கற்பை சந்தேகித்து ஒதுங்குகிறானே... ஏன்...?

ஒருவேளை 'திருமணம்' என்ற பெயரில் மட்டுமே அவளை அடைய முடியும் என்று மணம் புரிந்து கொண்டு விட்டு... இப்போது காலம் கடந்து மனம் வருந்துகிறானோ...?

அனாதையைக் கட்டிக் கொண்டிருக்க வேண்டாமே என்று நினைத்து அவதிப்படுகிறான் போலும்.

இருக்கட்டும்... அதற்காக தன் சீலத்தின் மீதே சந் தேகமா... ஒழுக்கத்திற்குக் களங்கம் கற்பிக்க வேண்டுமா...?

''சிந்து... போ வெளியே' என்றால் போகிறேன். ஏன் என் வயிற்றில் வளரும் குழந்தையை சந்தேகிக்க வேண்டும்...' மனம் ஊமையாய் அழுதது.

இல்லை... நேரடியாய் கேட்டு விட வேண்டும். 'எதை வைத்து என்னை சந்தேகிக்கிறீர்கள்? என்னுடன் பழகிய உங்களுக்கு என் மீதே சந்தேகம் என்றால் ஆச்சரியம்தான்... சொல்லுங்கள்... ஏன்? ஏன் அப்படி பேசினீர்கள்... விளையாட்டுக்கும் ஒரு கணவன் தன் மனைவியிடம் சொல்வதில்லையே...' அடைத்த தொண்டையில் ஒலி கிசுகிசுப்பாய் வர கேட்டாள்.

கண்களில் கண்ணீர் வழிய பரிதாபமாய் அவள் கேட்பது அவனுக்கு என்னவோ போல்தான் இருந்தது.

ஆனால், அவன் கண்ணால் பார்த்ததும் பொய்யாகுமா..? குடித்திருந்தாலும் நிதானம் இழக்கவில்லையே... கண்கள் மங்கிவிடவில்லையே.

நெகிழ்ந்த மனம் மறுபடியும் கல்லாகிவிட அவன் சொன்னான்.

''நான் படித்தவன். கண்ணியம் தவறக்கூடாது என்று நினைக்கிறவன். இதுவே படிக்காதவனாய்... நாகரீகம் இல்லாதவனாக இருந்தால் மனைவியைப் புரட்டி அடித்திருப்பான்... கவுரவம், அந்தஸ்து, நாகரீகம் இவையெல்லாம் என் கைகளைக் கட்டிப் போட்டிருக்கின்றன. என் வாய் ஒன்றுதான் என் மனக்கொதிப்பை வெளியிட முடியும். அதுவும் அசிங்கமாய் பேசமுன்...''



''ம்ம்... சொல்லுங்கள்... பேசமுன்...?''

''நீ என் வீட்டை விட்டுப் போய்விடு...''

தன் குற்றம் என்ன என்பதை அறியாதவளாய் வாசலைச் சுட்டிக் காட்டும் கணவனைப் பார்த்து விக்கித்து நின்றாள்.

''என்ன... என்ன சொல்கிறீர்கள் உதய்... புரிந்துதான் பேசுகிறீர்களா?'' வார்த்தைகள் திக்கித் திணறி வெளிவந்தன.

அவன் பேசாமல் நின்றான்.

''குற்றவாளிக் கூண்டில் நிற்கும் கைதியைக்கூட விசாரித்து விட்டுத்தான் தீர்ப்பளிப்பார்கள். என்ன குற்றம் என்பதை விளக்காமல் - உண்மையைக் கேட்டுத் தெரிந்து கொள்ளாமல் இந்த ஒருதலைத் தீர்ப்பு நியாயமா உதய்? நான் என்ன குற்றம் செய்தேன்? சொல்லுங்கள். என் தவறைத் திருத்திக் கொள்கிறேன்... உங்கள் வீட்டிற்கு தலை குனிவு வரும்படி ஏதும் செய்திருந்தால் அதற்கு மன்னிப்பும் கேட்டுக் கொள்கிறேன். என்னை வீட்டை விட்டு மட்டும் அனுப்பி விடாதீர்கள்... ப்ளீஸ்... உதய்'' தொண்டை காய கெஞ்சினாள்.

சட்டென்று திரும்பினான். ''நீ செய்தது மன்னிக்கக்கூடிய குற்றம் என்று நினைக்கிறாயா... பாவி... இன்னொருத்தனுடன் படுத்தவளை எவன் மன்னிப்பான்... சொல்... எத்தனை நாட்களாய் ராஜவேலு உனக்குக் கள்ளக் காதலன்?''

கண்கள் நிலைகுத்தியிருக்க... 'ஆ'வென்று வாய் திறந்த படி பனிச்சிலை போல உறைந்து போய் நின்றாள் சிந்து.

''ஆகா... என்ன நடிப்பு... என்ன பாசாங்கு.. என் கண்களால் நம் அறையிலிருந்து அவன் ஓடியதைப் பார்த்த பின்பும் உன்னை நம்ப வேண்டும் என்கிறாயா? எந்த மூளைக் கெட்டவனும் நம்ப மாட்டான்... இனி என் கண்ணில் படாமல் போய்த் தொலை... அந்த பாவச் சுமையை பெற்று அதன் தகப்பன் கையில் வைத்து சந்தோஷப்படு... போ... போ...'' அதற்குமேல் அவளிடம் பேசவும் பிடிக்காமல் போய் விட்டான்.

வில்லில் இருந்து புறப்பட்ட நாணைப்போல ஓடிப்போய் கிரிஜாவின் மடியில் விழுந்து கதறினாள்.

''அய்யோ... என் வாழ்வு போய்விட்டதே... செய்யாத தவறுக்கு பெரிய தண்டனை... கேட்டுவிட்டு இன்னும் என் உயிர் இருக்கிறதே...'' என்று புலம்பினாள்.

அவளை சமாதானப்படுத்தி விசயத்தை அறிந்தாள் கிரிஜா.

சரி... நான் ஊகித்தது சரியாகத்தான் இருக்கிறது... நான் பார்த்திராத கேட்டிராத உறவாய் திடீர் என்று முளைத்தும் - ரமணி விழுந்து விழுந்து உபசரித்ததும் நல்லதுக்கு அல்ல... ஏதோ சதி என்று தெரிந்தது.

அதற்கு ஏற்றாற் போலத்தான் எல்லாம் நடந்திருக்கிறது.

சும்மா சொல்லக்கூடாது... அண்ணன் - தங்கை இருவரும் சேர்ந்து அழகாய் நாடகத்தை நடத்தி இருக்கிறார்கள்.. சதுரங்க காய்களை பார்த்து பார்த்து நகர்த்துவது போல... யோசித்து யோசித்து திட்டம் போட்டிருக்கிறார்கள்.



இல்லாவிட்டால் புத்திசாலியான உதய்யும் எளிதாய் அவர்கள் விரித்த வலையில் விழுந்திருப்பானா... பற்றிக் கொண்டு வந்தது கிரிஜாவிற்கு. இதில் உதய்யின் தப்பு ஏதும் இல்லை. அவன் மனதை சேறாகக் கலக்கி.. அதில் விஷ வித்தினை நட்டு விட்டார்கள்...

இப்போதைக்கு சிந்துஜா வெளியேறுவதுதான் நல்லது என்று நினைத்தாள், கிரிஜா.

அதே சமயம் வயிற்றுப்பிள்ளை வேறு... பாவம் எங்கு தங்குவாள் என்ற பரிதாபமும் வந்தது. ஆனாலும் இங்கு இருந்தால் அவளது நிம்மதியும் குலைந்துவிடும்.

தாயுடன் இவனும் சேர்ந்து வார்த்தைகளால் பிடுங்குவான்.

உதய் நல்லவன்தான். ஆனால், கோபம் வந்தால் மனிதத்தன்மையும் மறைந்துவிடுகிறதே.

கணவன் வரும் முன்னர் வீட்டை விட்டுச் சென்று விட வேண்டும் என்று தன் துணிகளையும் இதர உடைகளையும் எடுத்து வைத்துக் கொண்டாள். கணவன் வாங்கித் தந்தது எதையும் தொடவில்லை.

புறப்படுமுன் கிரிஜாவிடம் விடைபெறச் சென்றாள். தாயைப் போல அன்பு காட்டிய அவளைப் பிரிவது வேதனைதான்.

ரமணியின் அறைக்குச் சென்று, ''வருகிறேன் அத்தை...'' என்றாள்.

''இனி அத்தையும் இல்லை... சொத்தையும் இல்லை... வருகிறேன் என்று சொல்லாமல் போய்த் தொலை. வந்த அன்றே சொன்னேன். உன்னை விரட்டுகிறேன் என்று... விரட்டி விட்டேன். இனி இந்த திசையில் தலை வைத்தும்

படுக்காதே..." கொக்கரிக்கும் குரலில் சொல்லி முடித்தாள், ரமணி.

'குபுக்' என்று எழுந்த அழுகையை அடக்கிக் கொண்டு அங்கிருந்து விரைந்தாள், சிந்துஜா...



# 9

'அம்மா... பால்...'

பால்காரனின் குரல் கேட்டு விழித்தாள், சிந்துஜா.

ஏழு மணி.

வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தாள். குழந்தை எழுந்து விடுவான். பால் காய்ச்சி ஆற்றி வைக்க வேண்டும்.

நிறைய வேலைகளும் அவளுக்காகக் காத்துக் கொண்டிருந்தன.

வாரத் துணிகளைக் காயப் போட்டு... வீட்டை ஒழுங்கு பண்ணி... குழந்தையின்... அப்போதுதான் உறைத்தது.

பத்து மணிக்கு கணவன் வந்து விடுவான். தயாராக இருக்க வேண்டும் என்ற ஆணை. அவசரமாய் குளியலறைக்குள் சென்றாள்.

ஒரு வழியாய் தன் மகளைத் தயார்ப்படுத்தி... தானும் தயாரான போது மணி பத்து.

எல்லாமே தயார்... ஒரு வாரத்திற்கு தேவையான தன் உடைகள்... குழந்தையின் உடைகள்... ஒரு வாரம்... அவ்வளவுதான். நெஞ்சில் அடைப்பது போல உணர்வு... எப்படியாவது அவனிடம் கெஞ்சிக் கேட்டு குழந்தையை அழைத்து வந்துவிட வேண்டும்.



மணி பத்தரை ஆகியும் அவன் வரவில்லை. ஒருவேளை மனம் மாறி ஊர் திரும்பி விட்டானா....? இருக்காது... அவன் மனம் மாறுவதும், குதிரைக்கு கொம்பு முளைப்பதும் ஒன்றுதான், நடக்காது!

ஏதாவது வேலை திடீரென்று வந்திருக்கும். பதினோரு மணியும் ஆகியது. குழந்தைக்கு பசி வந்துவிடுமே என்று அவசரமாய் சமையலை ஆரம்பித்தாள்.

குக்கரை இறக்கும்போது கதவைத் தட்டும் சத்தம் கேட்டுக் கதவைத் திறக்க விரைந்தாள். வேண்டாம் என்றாலும் மனம் படபடத்தது.

கதவைத் திறந்தாள்... உதய்? எட்டிப் பார்த்தாள். இல்லை... ஆனால் காவல்துறையைச் சேர்ந்த கான்ஸ்டபிள் நின்றிருந்தார்.

செய்தியைச் சொன்னார். உதய் விபத்தில் அடிபட்டு பூர்ணிமா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு இருக்கிறார்.

"நீங்கள் அவருடைய மனைவிதானே... இந்த விலாசம் கிடைத்தது. சொல்ல வந்தேன்..."

முழங்காலுக்குக் கீழே சக்தி வடிந்து இரண்டு கால்களும் நைந்து போன துணியாய் துவண்டு மடிந்தன.

கண்கள் அவளைக் கேட்காமலே நீரை சுமந்தன. அவன் வெறுத்துப் பேசினாலும் அவளால் அவனை வெறுக்க முடியவில்லை.

அடி மனதில் காதல் மண்ணுள் பொதிந்த ஊற்றாய் படிந்து இருக்கிறது.

ஆட்டோவை அமர்த்திக் கொண்டு விரைந்தாள். மனம் அடித்துக் கொண்டது.

அவருக்கு ஏதும் ஆகக்கூடாது... எனக்கு செய்த துரோகத்திற்கு அவரைப் பழி வாங்காதே தெய்வமே... தெய்வத்தை வேண்டினாள். ஆட்டோ நொண்டி நத்தையாய் ஊர்ந்து செல்வது போல இருந்தது.

குழந்தை ஏதும் புரியாமல் ஆட்டோ சவாரியை ரசித்துக் கொண்டு இருந்தான். மருத்துவமனை வந்ததும் குழந்தையுடன் இறங்கி பணத்தைக் கொடுத்துவிட்டு சில்லரையும் பொருட்படுத்தாமல் நர்ஸிங் ஹோமினுள் ஓடி நடந்தாள்.

அங்கும் இங்குமாய் விசாரித்து தனியறையொன்றுள் நுழைந்தாள்.

இடதுகால் கட்டுடன் தொங்கலில்... வலது கையில் ஒரு கட்டு.. நெற்றியில் பிளாஸ்திரியுடன்...

நல்லவேளை உயிருக்கு ஆபத்தில்லையாம்... அந்த நிம்மதியில் அதுவரையில் அவளை இறுக்கிப் பிடித்திருந்த இறுக்கம் தளர்ந்தது.

அவனைப் பார்க்கும்போது பாவமாக இருந்தது. அவனுக்காக மனம் இரங்கியது. அவன் மீது இருந்த கோபம்... எரிச்சல்... ஆத்திரம் எல்லாமே வடிந்து போனது... இதைத்தான் தாலி பந்தம் என்கிறார்களா? என்ன தீங்கு செய்தாலும் மன்னிக்கத் தோன்றுகிறது.

ஒரு சின்ன மஞ்சள் கயிறுக்கு இத்தனை சக்தியா?

குழந்தை சரண் துறுதுறுவென்று திரிந்து கொண்டிருந்தான். அவனை சமாளிப்பதும் கஷ்டமாகத்தான் இருந்தது.

மருந்தின் வேலையால் அவன் நன்றாகத் தூங்கிக் கொண்டு இருந்தான்.

டாக்டர் அவளிடம் வந்து பேசினார்.



"நோயாளிக்கு என்ன உறவு... மனைவியா... பயப்படத் தேவையில்லையம்மா... சாதாரண எலும்பு முறிவுதான்... கெட்டி உடம்பு என்பதால் சேதம் அதிகம் இல்லை'' என்று தைரியம் சொன்னார்.

"உணவு ஏதாவது..."

"தேவையிருக்காது... நாங்கள் சொல்லும்போது கொடுத்தால் போதும். குழந்தையை அழைத்து வரவேண்டாம்..." என்று கூறிவிட்டுச் சென்றார்.

எப்போது கண் விழிப்பார்... கேட்க மறந்து விட்டோமே.

"அம்மா... பா..." பசிக்கு கேட்டான் குழந்தை. பசி வந்தால் பாலுக்கு 'பா'. சாதத்திற்கும் 'பா' தான்.

குழந்தையின் பசியை மறந்து போனோமே என்று பதைத்து வெளியே வந்தாள்.

சிறிது தூரம் நடந்த பின்பு கண்ணில் பட்ட சிறு ஓட்டலில் இரண்டு இட்லியைக் கட்டிக் கொண்டு வந்து ஊட்டினாள்.

பசி அடங்கியதும் குழந்தை அவளது தோளில் உறங்கிப் போனான்.

மறுபடியும் கணவன் அருகில் அமர்ந்து கொண்டு அவன் கண் விழிக்கக் காத்திருந்தாள்.

நர்ஸ் மூலம் அவள் அறிந்து கொண்டது இதுதான்.

மிதி வண்டியில் வந்த ஒருவன் குறுக்கே செல்ல அதனால் வந்த வினை.

நல்ல வேளையாய் கார் வளைவில் இறங்கி மரத்தின் மீது இடித்து நின்றதால் சிறு விபத்தாய் முடிந்தது.

யாரையாவது தள்ளியோ... வேறு வாகனத்தில் மோதியிருந்தாலோ பெரிய போலீஸ் கேசாகி இருந்திருக்கும்.

மாருதி கார் என்பதால் அடியும் பலம்தான். எப்படியோ... தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போனதுபோல உயிருக்கு ஆபத்தில்லாமல் போனதே என்ற நிம்மதி யடைந்தாள்.

இரவு எட்டரை மணிக்குத்தான் அவனுக்கு உணர்வு திரும்பியது.

கண் விழித்தவனின் கண்களில் சிந்துஜாவும் குழந்தையும் பட்டனர்.

"என்ன வேண்டும்... உங்களுக்கு?" முகத்தருகில் குனிந்து கேட்டாள்.

"குடிக்க ஏதாவது... தாகம்..."

டாக்டரிடம் கேட்டுக் கொண்டு கொஞ்சமாய் தண்ணீர் கொடுத்தாள்.

மறுபடியும் உறக்கத்தில் ஆழ்ந்தான் அவன்.

டாக்டர் வந்து மறுபடியும் பரிசோதித்துவிட்டு, "நீங்கள் குழந்தையுடன் இங்கு தங்க வேண்டியது இல்லை... நர்ஸ் வந்து பார்த்துக் கொள்வாள். இரவு நன்றாய் ஓய்வெடுத்துக் கொண்டு, குழந்தையை யாரிடமாவது விட்டு விட்டு வாருங்கள் மிஸஸ். உதய்சங்கர்..." என்று சொன்னார்.

தயங்கிய அவளைப் பார்த்து புன்னகைத்து, "கவலையே வேண்டாம். உங்கள் கணவரை நன்றாகக் கவனித்துக் கொள்வோம்... சரியா?" என்றவுடன் அவளும் சிரித்து விட்டுப் புறப்பட்டாள்.

மறுநாள் சரணை, குழந்தை கவனிப்பு இல்லத்தில் விட்டுவிட்டு வந்தாள்.



தன் நிலையைக் கூறி, தான் வரும்வரை குழந்தையைப் பார்த்துக் கொள்ள முடியுமா? என்று கேட்டுக் கொண்ட வுடன் அந்தப் பெண்ணும் இசைந்தாள்.

பழக்கப்பட்ட இடம் என்பதால் குழந்தையும் அழாமல் விளையாட ஆரம்பித்தான். மருத்துவமனைக்கு வந்தபோது உதய் விழிப்புடன் இருந்தான்.

டாக்டர் சொன்னபடி குழைவாய் சாதம் செய்து கொண்டு வந்திருந்தாள். பசியுடன் இருந்த அவனுக்கு அவளே ஊட்டி விட்டு துண்டால் துடைத்து விட்டாள்.

அவளது பணிவிடைகளை மவுனமாய் ஏற்றுக் கொண்டான் உதய். அவனது கண்கள் அவளைத் தொடர்ந்து சென்றன. அதை அவளும் உணர்ந்தாள். ஆனால் உணராதவள் போல இருந்தாள்.

எழுந்து உட்கார முடியாத நிலையில் முகம் சுளிக்காமல் அனைத்தையும் பொறுமையாய் செய்த தன் மனைவியைக் கூர்ந்து பார்த்தான்.

அவளது தாயார் மருத்துவமனையில் இருந்தபோது மெலிந்து காணப்பட்டது போல இப்போதும் தெரிந்தாள்.

திருமணத்திற்குப் பின் அவள் மேனி சதைப் பிடித்து மினுமினுத்து நின்றது எங்கே போனது...?

கண்களை மூடிக் கொண்டான்.

குழந்தைக்கு ஊட்டுவது போல கணவனுக்கு ஊட்டும் போதுதான் குழந்தையின் நினைவு வந்தது.

என்ன செய்கிறானோ... யார் ஊட்டுகிறார்களோ... தானே அவனுக்கு சகலமும் என்று இருப்பதால் மற்றவர்களிடம் ஒட்டுவதும் குறைவுதான்.

குழந்தைக்கு புரியும் பருவத்திலிருந்து தாய் முகம் மட்டும்தானே தெரியும்! தந்தையும் உடன் இருந்திருந்தால் இருவரிடம் பங்கு போட்டு ஒட்டிக் கொண்டிருப்பான். இல்லையே... தந்தையின் நிழலும் படாமல் வளர்ந்து விட்டான். இனிமேல்...?

கண்ணை மூடி உறங்கும் கணவனைப் பார்த்தாள். இவனா அன்றைக்கு அப்படிப் பேசியது. தன்னை வெளியே விரட்டிய பின்பு ஒரு முறையாவது எப்படி இருக்கிறாள் என்று வந்து பார்த்திருப்பானா? இன்றைக்கு அதே வேண்டாத மனைவிதானே அருகில் இருந்து கவனிக்க வேண்டி வந்தது.

வீட்டை விட்டு வெளியேறிய பின்பு அவள் பட்ட துன்பங்கள்... துயரங்கள்... சொல்லி மாளாது. வாயும் வயிறுமாய் தன் ஒன்றுபட்ட சகோதரியின் வீட்டுக்குப் போனதும். வேலி மறுத்த பயிர் என்று அறிந்து அவளது கணவன் இவளிடம் இளித்துப் பேசி தன் சபலத்தைக் காட்டியதும்... அந்த சகோதரி என் வாழ்க்கையைக் குட்டிச் சுவராக்காதே என்று வெளியே அனுப்பி விட்டதையும் மறக்க முடியுமா?

அடுத்து அடுத்து தெரிந்த உறவினர்... தோழி என்று போய் உதவிக் கேட்டதும், அவர்கள் ஒருநாள் இரு நாள் என்று உறவை முறித்துக் கொண்டதையும் நினைவிலிருந்து அகற்ற முடியுமா?

கடைசி புகலிடமாய் தோழி ரமாவிடம் சென்று கெஞ்சி யாரோ ஒரு புண்ணியவான் மூலமாய் தனியார் நிறுவனத்தில்



வேலை பெற்று எப்படியோ சிரமப்பட்டு நாட்களைத் தள்ளியதை மனதிலிருந்து அழித்துவிட முடியுமா?

அதே தோழி அருகிலிருந்து உதவ குழந்தையைப் பெற்றெடுத்தபோது... சிசுவின் தந்தை அருகில் இல்லாதது எண்ணி ஏங்கிய ஏக்கம்... பிறந்த குழந்தையை நர்ஸ் கையில் வைத்தபோது அதை மார்புடன் அணைத்துக் கொண்டு அழுத அழுகை...

அனைத்தையும் எளிதாய் மறந்துவிட முடியுமா?

எப்படியோ இரண்டரை வருடங்களைக் கஷ்டப்பட்டு தள்ளியாகி விட்டது.

குழந்தை கொஞ்சம் பெரியவனானால் அதுபோதும். சிரமம் குறையும்.

அவன் வளர்ந்து தனக்கு நிழல் தரும் வரை கொஞ்சம் கஷ்டப்படத்தான் வேண்டும்.

'சுருக்'கென்று மனதினுள் வலி... தன்னிடம் இருந்து குழந்தையைக் கணவன் பறித்துக் கொண்டு விட்டால்... ஆனால் அவனால் இப்போதைக்கு இயலாதுதான். ஒரு வேளை தாயையும் சேயையும் பிரிக்க எண்ணியதற்குக் கடவுள் தந்த தண்டனையோ இந்த விபத்து...?

மறு நிமிடமே தன்னையே கடிந்து கொண்டாள்.

ச்சே... கனவிலும் அப்படி நினைக்கக் கூடாது. உதய் நல்லவன்தான். தாயின் சாகச வலையில் விழுந்தான். அவன் நிலையில் யாரும் இருந்தால் அப்படித்தான் நம்பி விடுவார்கள்.

ம்... இதுதான் பெண் மனம்... ஆண் மகா தவறு செய்தாலும் மன்னித்துவிட நினைக்கிறதே. அதனால்தான் ஆண்கள் தான் செய்யும் தவறுகளை அவ்வளவாய் பெரிதுபடுத்தாமல் அசட்டையாய் இருந்து விடுகிறார்களோ...

மன்னிப்பு கிடைத்து விடும் என்ற நம்பிக்கையால்தான். ஆனால் என்ன பிரயோசனம். அவனை அவள் மன்னித்தாலும் அவன் அவளை மன்னிக்க மாட்டான் என்பது நிச்சயம்.

மன்னிக்கும் மனம் இருந்திருந்தால் குழந்தையுடன் இரு என்று சொல்லியிருப்பான்.

வேண்டாம்... அவன் எதற்கு மன்னிக்க வேண்டும். செய்யாத தவறுக்கு தண்டனை தந்தவன் அவன். அதற்கு மன்னிப்பு அவசியமில்லை.

அப்போதுதான் நினைவுக்கு வந்தது... அவன் ஜெயந்தியை மணக்கப் போகிறான் என்று சித்தி எழுதியிருந்தாளே அதனால்தான் குழந்தையை மட்டும் வேண்டும் என்கிறான் போலும்...

ஜெயந்தி அவன் மனைவியாய்... அவளுள் பொறாமைக் குடி கொண்டது.

அய்யோ... அவன் சந்தேகத்தைத் தீர்க்க முடியவில்லையே... எதற்காக தன்னை நடத்தைக் கெட்டவள் என்று நினைத்தான் என்று அறியாமல் திகைத்து சிந்து. கிரிஜாவின் கடிதம் மூலம் நடந்த சதியை அறிந்து கொண்டாள்.



அதற்கு பின்தான் தான் எத்தகைய சதி வலையில் அகப்பட்டோம் என்று தெரிந்தது.

தான் சுத்தமானவள் என்று நிரூபிக்க அவளது உடலின் ஒவ்வொரு அணுவும் துடித்துக் கொண்டிருந்தது...

ஆனால், எப்படி?

கிரிஜாவே வாயை மூடிக் கொண்டிருக்கும்போது தன்னால் எப்படி முடியும்?

"குழந்தாய் லட்சுமணா... சிதை மூட்டு..." என்று கூறி அக்கினிப் பிரவேசம் செய்த சீதையின் சக்தி தனக்கு இல்லையே.

பெருமூச்சு பெரிய மூச்சாய் வெளிவந்தது. உடல் வலி தெரியாதிருக்க அவனுக்கு தூங்கச் செய்யும் மருந்தை ஏற்றியிருந்ததால் அவன் அதிகமாகவே உறங்கினான்.

ஓய்வு ஒழிச்சல் இன்றி அலைந்ததால் சிந்துவின் மேனியின் எடைக்குறைந்து... கண்களுக்குக் கீழே கருவளையம் தெரிய... கழுத்து எலும்பு எட்டிப் பார்க்க... கன்னம் ஒட்டிக் கொள்ள... உடம்பு மெலிந்தது.

மருத்துவமனையிலிருந்து உதய் வெளிவரும்போது அவள் அரை உடம்பாகிப் போனாள்.

உதய்யும் அதைக் கவனித்தான்.

"சே... போ" என்று தள்ளிய பின்னும் எப்படி மனம் வருகிறது... வந்து சேவை செய்ய...

தாலி கட்டிய கடமையாலா...?

என்னுடைய கடமையை நான் தவற விட்டேனே. இவளை கவனிக்காமல் புறக்கணித்து விட்டேனே. வயிற்றில் வளர்ந்த குழந்தைக்கு நல்ல ஊட்டம் இல்லை... அவளுக்கு சரியான கவனிப்பு இல்லை. இப்போதும் என் மகன் வேண்டும்... நீ வராதே என்றுதானே பேச்சு...

தன்னையே நொந்து கொண்டான்.

மறுகிக் கொண்டிருக்கும்போது அவள் வந்தாள்.

''டாக்டர் 'டிஸ்சார்ஜ்' செய்யலாம் என்கிறார். என்ன செய்வது?''

''போகலாமே... உன் வீட்டுக்கு...''

''உண்மையாகவா...'' நிமிர்ந்து அவளைப் பார்த்தாள்.

அவன் தலையசைத்தான்.

உள்ளத்தில் துள்ளலுடன் கணக்கைத் தீர்க்கச் சென்றாள்.

10



மெல்ல எழுந்து நடக்க ஆரம்பித்து விட்டான் உதய்.

காலில் ரணம் ஆறிவிட்டிருந்தது. டாக்டரின் அறிவுரைப்படி பயிற்சி செய்தான் அவன்.

அவன் உடல் ஆரோக்கியம்தான் குறி என்று பால், பழம், முட்டை என்று ஊட்டமிக்க உணவை பார்த்து பார்த்துக் கொடுத்தாள் சிந்து. சரணும் இப்போதெல்லாம் தந்தையுடன்தான். சிந்துஜா சமையலறையிலோ, துணி துவைத்துக் கொண்டிருக்கும்போது சரண் அவனை



தொந்திரவு செய்யாதிருக்க உதய் அவனுக்கு விளையாட்டு காட்டி... உறங்க வைத்துப் பார்த்துக் கொண்டான்.

வந்தவுடன் தன் தாய்க்கு நடந்ததைப் பற்றித் தெரியப் படுத்தினான்.

தாயார் பதறிக் கொண்டு வரவில்லை. கோபம்தான். வேண்டாம் என்று துரத்தியவள் வீட்டில் தங்கியிருக் கிறானே... வெட்கம் மானம் எல்லாம் விட்டுவிட்டு...

வேறிடம் என்றால் வந்திருப்பாள்.

யாரும் வரவில்லையே என்ற ஏக்கமும் அவனுக்கு இல்லை.

பிரிந்திருந்ததற்கு ஈடு செய்வதுபோல மகனுடன் சேர்ந்து இருப்பதில் சந்தோஷம் அடைந்தான்.

கணவன் - மனைவி இருவரிடையே பழைய சகஜ நிலை திரும்பாவிட்டாலும், சுமுகமான உறவு நிலவியது.

தன்னை ஏமாற்றினாளே என்ற எண்ணம் இன்னும் அவன் உள்ளத்தில் நெருஞ்சி முள்ளாய் குத்திக் கொண் டிருக்கும்போது அவளிடம் எப்படி முன்போல் இருக்க முடியும்?

இப்போது கோபம் தணிந்து... எரிச்சல் அடங்கி... ஆத்திரம் வடிந்து கடைசியில் மிஞ்சி நின்றது வெறும் ஏக்கம்தான்...

தன்னை அவள் ஏமாற்றலாமா என்ற ஏக்கம்தான்...

மறுபடியும் வாய் திறந்து அதைப்பற்றி அவளிடம் கேட்க வில்லை.

நடந்து போன கசப்பான சம்பவத்தைப் பற்றிப் பேசவும் மனமில்லை.

அதை கெட்ட கனவு என்று அவன் மறக்க முயன்றான். அது கடும் நஞ்சாய் நெஞ்சில் தங்கி விட்டது.

தான் நினைத்து வந்ததே வேறு... இங்கு நடப்பதே வேறு.

ஜெயந்தியை மணக்க வேண்டி மனைவியிடம் ஒப்புதல் கேட்க வந்தவன்... குழந்தையைக் கண்டதும், குழந்தையை ஏற்றுக் கொள்ள மனம் வந்து... அதுவும் விபத்தில் முடிந்து... வேண்டாம் என்று ஒதுக்கிய மனைவியிடமே ஒதுங்கும்படி விதி செய்துவிட்டது.

தனக்காக ஓடாய் உழைத்து தேயும் இவளைப் பார்க்கும் போது மனம் அடித்துக் கொள்கிறது. ஆனால் மானத்தைக் கழற்றிப் போட்டவளுடன் வாழ்க்கையா என்றும் மனம் முரண்டு பிடிக்கிறது...

மனம் ஒரு குரங்குதான்... ஒரு நிலையில் இல்லாத குரங்கு.

தன் தாய் சொல்வது போல ஜெயந்தியை அப்போதுதான் அவன் உணர்ந்தான். ஜெயந்தியை அவன் மறந்தே போய் விட்டிருக்கிறான்.

அதுவரைக்கும் அவளைப் பற்றிய நினைவே இல்லை. அவள் நினைவு அன்றைக்கு வந்ததாலோ என்னவோ அவளே வந்து நேரில் குதித்தாள்.

அவனுக்கு வியப்பு.

''எப்படி வந்தாய்... விலாசம்...?''



''சிம்பிள்... ஆஸ்பத்திரிக்குச் சென்றேன். விலாசம் தெரிந்தது. வந்தேன். ''அது சரி... எப்படி இருக்கிறீர்கள் உதய்... விபத்து ஆனவுடன் எனக்குத் தெரிவித்திருந்தால் நான் வந்து அருகில் இருந்திருப்பேன் இல்லையா... பாவம் எத்தனை வேதனைப்பட்டிருப்பீர்கள்'' என்று அக்கறையுடன் சொன்னாள் ஜெயந்தி.

''அடியொன்றும் ரொம்ப பலமாயில்லை. ஆமாம், அம்மா என்ன சொன்னார்கள்?''

கையில் குழந்தையுடன் எட்டிப் பார்த்தாள் சிந்து. ஓ..! இவள்தானா ஜெயந்தி...? உதய்க்கு மனைவி என்று நிச்சயிக்கப்பட்டவள்.

மறுமொழியில் ஜெயந்தி சொன்னாள் - ''சீக்கிரம் ஊர் திரும்ப வேண்டுமாம். கிரிஜா அத்தையும் உடம்பை ஜாக்கிரதையாய் பார்த்துக் கொள்ளும்படிச் சொன்னார்கள். அப்பா உங்களுக்கு விபத்து என்று அறிந்ததும் தவித்துப் போனார்கள்.''

சிந்து காபியுடன் அங்கு வந்தாள்.

''இவள்தான் என் மனைவி சிந்துஜா...'' அவனையும் அறியாமல் மனைவி என்று சொல்லி விட்டான்.

''முன்னாள் மனைவி என்று சொல்லுங்கள்'' 'வெடுக்' கென்று எடுத்துச் சொன்னாள் ஜெயந்தி.

''இன்னும் சட்டப்பூர்வமாய் முறிவு ஏற்படவில்லையே... அதுவரை இன்னும் என் மனைவிதான்.''

வெறுப்பில் சொல்கிறானோ என்று உள்ளுக்குள் குமைந்தாள் சிந்து.

அப்போதுதான் சரண் தந்தையின் பக்கமாய் தாவ...

ஜெயந்தி குழந்தையை கவனித்தாள்.

''உதய்... இது... இவன்...'' சந்தேகத்துடன் வினவினாள்.

''ஆமாம். என் மகன்... சரண்... எனக்கே இப்போதுதான் தெரிந்தது. சரண் கண்ணா! ஆன்ட்டிக்கு வணக்கம் சொல்லு'' மகனை ஊக்குவித்தான்.

ஜெயந்தியின் கண்கள் குழந்தையை வெறித்துக் கொண்டிருந்தன.

அவளது கண்களில் அதிர்ச்சி... வியப்பு... திகைப்பு... ஆக அனைத்துமே.

இதென்ன புது வம்பு...

உதய்க்கு ஒரு மகனா... இது என்ன புது தலைவலி என்ற அதிர்ச்சி...

உதய் எளிதாய் சரணை ஏற்றுக் கொண்டு விட்டானே என்ற வியப்பு...

அவனை மணக்க கசக்குமா என்று இருந்தவளுக்கு கூடவே ஒரு வாலையும் சமாளிக்க வேண்டுமே என்று திகைப்பு...

ஒருவேளை குழந்தைக்காக மனைவியை... அந்த சந்தேகத்தை தீர்த்துக் கொள்ள கேட்டாள்.

''இப்போது என்ன செய்யப் போகிறீர்கள்... சரண் விசயமாய்தான்...''



''என் மகனை இனி விட்டுவிட முடியுமா? என்னுடன் தான் இருப்பது... இனிமேல் என்னுடன் இருந்து விடுவான் என்கின்ற தைரியம்தான்... விவாகரத்து வாங்கி விடுவது... குழந்தையுடன் வாழ்க்கையை ஆரம்பிப்பது... அவ்வளவு தான்.''

அவர்கள் குடித்து வைத்த கோப்பையை எடுத்துப் போக வந்த சிந்துஜாவின் செவிகளில் இரண்டு நட்டுவாக்கிளி குத்தி குடைந்து கொட்டுவது போல இருந்தது.

ஜெயந்தியின் நிலையோ வேறு...

இதென்ன... கிணறு வெட்டப் போயி பூதம் வந்தது போல புதுக் கதை...

விவாகரத்து வாங்க வந்த தன் எதிர்காலத் துணைவனின் தோளில் குழந்தையும் தொத்திக் கொண்டு விட்டதே... இந்த சுமை தனக்கு தேவையா...?

கூடாது... அவன் குழந்தையை இங்கேயே விட்டுவிட வேண்டும்.

இல்லையென்றால் இருக்கவே இருக்கிறது... விடுதி... அதில் சேர்த்துவிடு என்று சொல்லிவிட வேண்டும். அதுதான் சரி.

தன் குழந்தை என்று தெரிந்த பின் உதய் பிரிய விரும்ப மாட்டான் என்பது மட்டும் உறுதி. தன் வாரிசு.. தன் குலக்கொழுந்து என்று வாதாடுவான்.

இப்போது பேசிப் பயனில்லை. கழுத்தில் மூன்று முடிச்சு விழட்டும். பிறகு இருக்கிறது என் தர்பார். இதை ஏதாவது விடுதியில் சேர்த்து விடலாம்.

அதற்கு பிறகு நிம்மதியாய் பெருமூச்சு விட்டாள்.

''சாப்பாடு தயார் உதய்... ஜெயந்தி குளித்துவிட்டு வந்து விடுகிறாயா...'' ஏதும் தெரியாதவள் போல அழைத்தாள் சிந்து.

''ஸ்ஸ்... வீடு ரொம்ப சின்னது இல்லையா உதய்... காற்றே இல்லை... எப்படி இங்கு இருக்கிறீர்கள்...? நான் வந்துவிட்டேனே... பேசாமல் ஒட்டலில் தங்கி விடலாமா?'' என்று கேட்டாள் ஜெயந்தி.

அவன் சிரித்தான். ''நமக்கு இன்னும் திருமணம் ஆகவே யில்லை. ஒட்டலில் தங்குவது தப்பு... எனக்கு இது பழகி விட்டது... உனக்கு முடியவில்லையென்றால் கிளம்பி விடு..''

''அய்யோ... உங்களை விட்டா... எனக்கு எப்படி மனம் வரும்? சரி... எப்போ ஊருக்குக் கிளம்புவதாய் இருக் கிறீர்கள் உதய்?''

''பார்க்க வேண்டும். டாக்டரிடம் ஒருமுறை காட்டிவிட்டு புறப்படலாம் என்று சொன்னால் புறப்பட வேண்டும்... கார்தான் இல்லையே. டாக்சியிலோ... விமானத்திலோ தான் பயணம். குழந்தை வேறு இருக்கிறான்...''

அந்தப் பேச்சை மாற்ற ''எப்படி விபத்து நடந்தது உதய்... நீங்கள் காரை ஓட்டுவதில் திறமைசாலியாயிற்றே... உங்களுக்கு விபத்து என்றால் அது ஆச்சரியம்தான்'' என்று சொன்னாள்.

அவன் நடந்ததைக் கூறினான்.



இன்னும் ஊர் விஷயம் எல்லாம் பேசி முடித்து விட்டு ஒரு வழியாய் இருவரும் சாப்பிட்டபோது மணி இரண்டரை.

டாக்டர் கால்கட்டை அவிழ்த்து பார்த்துவிட்டுத் திருப்தி யடைந்தார்.

கைக்கட்டு மாத்திரம் இன்னும் பத்து நாள் என்றார். காலுக்கு அதிக பாரம் தர வேண்டாம். மற்றபடி எந்தவித பயமும் இல்லை என்றார்.

தான் வந்ததிலிருந்து சிந்துஜாவை உதய்யிடம் நெருங்க விடவில்லை ஜெயந்தி.

அவளே அவனுக்கு உடம்பு துடைத்துவிட்டு பல் துலக்க உதவி செய்து... சாதத்தை பிசைந்து தந்து... அனைத்தும் அவள்தான்.

அவள்தான் அங்கு இல்லையே என்று சிந்துஜா அருகில் வந்தால் உடனே தோன்றி ''இங்கே கொடு... நானே தருகிறேன்'' என்று பறித்துக் கொள்வாள்.

இரவும் பகலும் அவன் அருகில் இருந்து உருகுவாள்.

உதய்யிடம் தனக்குத்தான் உரிமை என்பதை உணர்த்தி, சிந்துஜாவை அவனருகில் நெருங்கவும் விடவில்லை.

''உதய்... சாப்பிடுங்களேன்'' என்று கொஞ்சுவாள்.

இதையெல்லாம் பார்க்கப் பார்க்க சிந்துவிற்கு பற்றிக் கொண்டு வந்தது.

தாலி கட்டிக் கொண்டவள்... தனக்கு இல்லாத உரிமை இவளுக்கா என்று கோபத்துடன் நினைத்தாள்..

ஆனால், அதை நேரடியாய் காட்டவும் முடியவில்லை. கணவன் வாய் மூடிக் கொண்டிருக்கிறான்... பற்களைக் கடித்தாள்.

சாப்பாட்டு வேளையில் சிந்துஜா, தன் கணவனுக்குப் பிடித்த உணவை பரிமாற வந்தால் அதை பிடுங்கித் தானே பரிமாறினாள்.

''நன்றாய் சாப்பிட வேண்டும் உதய். பாருங்கள். உடம்பு இளைத்து விட்டிருந்தது. ஊருக்குப் போனவுடன் பாருங்கள். என் கவனிப்புதான். மறுபடியும் உங்களை பழைய 'உதய்'யாக பண்ணி விடுகிறேன். புன்னகையுடன் நிமிர்ந்தவன் கண்கள் சிந்துவின் மேல் படிந்துதன.

அவளுடைய முகபாவத்திலிருந்து அவள் அந்த பேச்சை ரசிக்கவில்லை என்று தெரிந்தது. அதைக் கண்டு அவனுக்கு நமுட்டு சிரிப்பும் வர... இன்னும் கிளற விரும்பினான்.

''ஆமாம் ஜெய்... நீ கவனிக்கிற மாதிரி வருமா'' என்று கிண்டிக் கொடுத்தான்.

ஜெயந்திக்கு பெருமையாக இருந்தது.

''கரெக்ட்.. நான் உங்கள் அருகிலே இருந்திருந்தால் இத்தனை நேரம் 'சக்'கென்று ஓடியாடி வேலை செய்ய ஆரம்பித்திருப்பீர்களே... காதலோடு கவனிப்பு வேறு... கடமைக்கு கவனிக்கிறது வேறுதான். உங்கள் மேல்... ஆ...''

சூடான ரசம் அவள் தலையிலிருந்து வழிந்தபோது தான் தன்மேல் ரசம் கொட்டியிருக்கிறது என்று உணர்ந்தாள்.



''அய்யய்யோ... சாரி... கைத்தவறி...'' பரிதாபமாய் முகம் வைத்துக் கொண்டு சொன்ன சிந்துஜாவை முறைத்துப் பார்த்தாள் அவள்.

முகத்தில் வழிந்த ரசத்தை வழித்துவிட்டு ''செய்வதையும் செய்து விட்டு சாரியாம்... சாரி.. பார்த்தீர்களா உதய்...'' என்றாள் கோபமாய்.

''பார்த்துக்கொண்டே தான் இருக்கிறேன்'' உதட்டைச் சுழித்துக் கொண்டு சொன்னான் அவன்.

உதட்டோரம் எட்டிப் பார்த்த சிரிப்பை அடக்கிக் கொள்ள ரொம்பவும் சிரமப்பட்டான். அவனுக்கு நன்றாகத் தெரியும். சிந்துஜாவின் கை தவறவில்லை.

அதுவும் உண்மைதான். அவளது இளிப்பையும் அவன் மீது இழைவதை காண சகிக்காமல்தான் ரசத்தை அவள் மீது கொட்டினாள் சிந்து. அதை கணவன் கவனித்து விட்டான் என்று அவளுக்குத் தெரியாது.

மறுபடியும் நன்றாய் சோப்புப் போட்டுக் குளித்து வந்த ஜெயந்தி ஆத்திரத்துடன் புலம்பிக் கொண்டு இருக்க...

சிந்து சமையலறையில் 'நன்றாக வேண்டும்' என்று திருப்தியுடன் முணுமுணுத்தாள்.

கைக்கட்டையும் அவிழ்த்தாகி விட்டது. இனி அவன் புறப்பட வேண்டியதான். அந்த நாளும் வந்தது. குழந்தை...?

''நான் சொல்வதைக் கேளுங்கள் உதய்... உங்கள் கையிருக்கும் நிலையில் குழந்தையை சுமக்க முடியாது.

இங்கேயே இருக்கட்டும். பிறகு பார்த்துக் கொள்ளலாம்'' என்று ஜெயந்தி சொல்ல... தலையசைத்து விட்டு அவளுடன் புறப்பட்டான் உதய்.

அவர்கள் ஒட்டிக்கொண்டு செல்வதைப் பார்த்துக் கொண்டு சிலை போல் நின்றாள் சிந்து.



## 11

மறுபடியும் வாழ்க்கை இயந்திரமாய் சுழல ஆரம்பித்தது.

வழக்கம் போல் குழந்தையை விட்டு விட்டு விட்டு வேலைக்குச் சென்று வந்து, குழந்தையை அழைத்துக் கொண்டு வீடு வந்து... இரவு சமைத்து தானும் உண்டு குழந்தைக்கும் ஊட்டி... எப்போதும் போல்தான்... வெளி வாழ்க்கையில் எந்த மாற்றமுமில்லை.

வீட்டினுள்ளும்... சிந்துவின் உள்ளத்திலும்தான் மாற்றம். வெறுமை... வெற்றிடம்... உதய் இருக்கும்வரை இறக்கைக் கட்டிக்கொண்டு பறந்த நாட்கள் இப்போது ஆமையாய் ஊர்ந்து செல்வது போலத் தோன்றின.

அவன் சென்ற பிறகு வீடு 'வெறிச்'சென்று காலியாய் தெரிந்தது.

ஏதோ ஒன்று தன்னைவிட்டு நழுவிச் சென்றது போல உணர்ந்தாள். இல்லை... தான் ஏதோ ஒன்றை இழந்து நிற்பது போலத் தோன்றியது.

தனிமை வாழ்க்கைக்கு பழக்கப்படுத்திக் கொண்ட பின்பு அவன் மறுபடியும் வந்து தன் உள்ளத்திலும் வாழ்க்கை யிலும் சலனம் ஏற்படுத்த வேண்டுமா...



அவன் ஏன் வரவேண்டும்...?

அவனைப் பார்த்து, அடங்கியிருந்த மனம் மறுபடியும் ஏங்க ஆரம்பித்து விட்டது. அமைதியும் போய்விட்டது.

அவன் தன்னருகில் எப்போதும் இருக்க வேண்டும் என்று உள்ளம் விழைந்தது. அவன் இங்கு தங்கியிருக்கும் நாட்களில் தன் இறுக்கமும் தளர்ந்து நெகிழ்ந்திருந்ததையும் கண்டாள்.

ஒருவேளை ஜெயந்தி வராமல் இருந்திருந்தால் அவன் மனம் மாறியிருப்பானோ...

சூர்ப்பனகை பஞ்சவடியில் வந்து குதித்தது போல திடீரென்று தோன்றி எல்லாம் கெடுத்து விட்டாள்.

போனவள் ஒரு புண்ணியத்தைக் கட்டிக் கொண்டாள்.

குழந்தையை தன்னிடம் இருந்து பிரிக்காததுதான். அவளுக்கு எதற்கு சரண்? அவன் அவளுக்கு சுமைதான். அவளுக்கு வேண்டியது உதய் மட்டும்தான்.

அங்கு போன பின்பு அவன் மூளையைக் குழப்பி சலவை செய்து குழந்தை எதற்கு என்று சொல்லி அவனே மறுப்பு தெரிவிக்கும்படி செய்தாலும் ஆச்சரியமில்லை...

அதுவும் சிந்துஜாவுக்கு நன்மைதான். குழந்தை தன் னுடனே இருந்து விடுவான். அப்படி நடக்குமா... பெருமூச்சு விட்டுக் கொண்டாள்.

அவர்களுக்கு எப்போது திருமணம்...? போன உடனா...?

அழைப்பிதழ் வருமா...?

ஏன் வரும்..? வேண்டாம் என்று தள்ளிய பின்பு உறவு முளைக்குமா?

கண்கள் கசிந்தன. மனதினுள் ஏதோ பிசைந்தது.

தன் கணவன் இன்னொருத்தியை மணக்கிறான் என்று எண்ணவும், அவளால் பொறுக்கவும் முடியவில்லை... அதே சமயம் அன்பில்லாத அரை வாழ்க்கையும் அவளுக்குப் பிடித்தம் இல்லை.

சட்டென்று நினைவுக்கு வந்தது. தான் இன்னும் விவாகரத்துக்கு இசையவில்லை. இன்னொரு திருமணத் திற்கு ஒப்புதலும் தரவில்லை. எப்படி இந்த திருமணம் நடக்கும்...?

அவர்களுக்குப் பணபலம் இருக்கிறது... அதனால் எதையும் சாதிக்கலாம் என்ற பயமும் எழுந்தது.

ஏழை என்றால் மோழையும் பாயும். நான் ஏழை... அவர்களுக்கு நான் இளப்பம்தான்.

நல்ல வக்கீலை சந்தித்துப் பேசினாள்.

உதய் விவாகரத்து செய்ய விரும்பினால் அதற்கு தன் சம்மதம் உண்டு என்றும், அவன் இன்னொரு திருமணம் செய்து கொள்ளவும் தனக்கு மறுப்பு இல்லை என்றும் கையெழுத்திட்டு அனுப்பினாள்.

அத்துடன் தன் மண வாழ்க்கைக்கு ஒரு முற்றுப் புள்ளியும் போட்டாயிற்று என்று எண்ணும்போது இதயத்தினுள் வலியும் ஏற்பட்டது.

அதற்கு பின் உதய்யிடம் இருந்து எந்தவிதத் தகவலும் வரவில்லை.



தினமும் அவனிடம் இருந்து ஏதாவது செய்தி வரும்... இல்லை விவாகரத்து விஷயமாய் அவனது வக்கீலிடம் இருந்து வரலாம்...

தபாலை எதிர்பார்த்தாள். ஊகூம்... வரவில்லை. நாட்கள் நொண்டியாடின. ஒரு மாதமும் மறைந்து போனது.

சரண் திடீரென்று தந்தையிடம் ஒட்டியது போல அப்படியே மறந்து போனான்.

குழந்தை மனம்... எளிதில் மறந்து விடும். ஆரம்பத்தில் 'அப்பா' என்று தேடிப் பார்த்தவன் மெல்ல சகஜ நிலைக்கு வந்தான்.

சிந்துஜாவும் அவனுக்கு அப்பா நினைவு வராமல் இருக்க முயற்சி செய்தாள்.

அங்கு என்னதான் நடக்கிறது என்பதை அறிந்து கொள்ளும் ஆவல் சிந்துஜாவுக்கு. கிரிஜாவிடம் இருந்தும் கடிதம் இல்லை.

ஒருவேளை உதய் ஓய்ந்து விட்டான் போலிருக்கிறது.

புது மனைவி வரும்போது பழைய நினைவு எதற்கு என்று இருந்து விட்டானோ என்று நினைத்தாள்.

சரி... தான் அனுப்பிய விவாகரத்து கடிதம் போய் சேர்ந்திருக்குமா... அதற்காவது பதில் வரணுமே...

ஆமாம். வந்து விட்டால் அது சந்தோஷமா? இனி தன் வாழ்க்கையில் எந்தவித சந்தோஷமும் கிடையாது...

இனி ஒரே குறி... குழந்தையை வளர்த்து ஆளாக்குவது ஒன்றுதான்... ஆமாம் அது மட்டும்தான்.

நீண்ட எதிர்பார்ப்புக்குப் பின்பு ஒரு கடிதம் வந்தது.

ஆவலுடன் பிரித்தாள்... கிரிஜாதான்.

''அன்புக்குரிய சிந்து... ஆசிகள். குழந்தையை அழைத்து வர உதய் புறப்பட்டு அங்கு வருகிறான். வழக்கமாய் நான் சொல்வது போல் நீ ஓடி ஒளிய வேண்டாம். நின்று நிதானமாய் அவனிடம் பேசி ஒரு முடிவுக்கு வர வேண்டும். இந்த முறை நிச்சயமாய் இதற்கு தீர்வு இருக்கும் என்று நம்புகிறேன்.

- அன்பு கிரிஜா.''

படித்தவுடன் வயிற்றைக் கலக்கியது.

மறுபடியும் குழந்தை... குழந்தையை மட்டுமா...

அவனை மட்டும் அழைத்துப் போனால் என் உயிர் தங்குமா?

அவனைப் பிரிந்து வாழ்ந்து விடுவேன் என்று நினைத் தானா...

சரணை அணைத்துக் கொண்டு அழுதாள். எப்போது, என்று வருகிறான் என்று கிரிஜா எழுதவில்லை.

சரணை அழைத்துக்கொண்டு எங்கேயாவது கண் காணாத தேசத்திற்கு ஓடிவிட வேண்டும் என்ற வேகம் அவளுள் எழுந்தது.

ஏதாவது ஒரு இடம்... அடர்ந்த காடாக இருந்தாலும் சரி... தண்ணீரில்லா பாலைவனமாய் இருந்தாலும் பரவா யில்லை...

அவனிடம் இருந்து தூர... வெகுதூர... கண்ணில் படாமல்,



அவளும் குழந்தையும் மட்டும்... அது சாத்தியமா? அந்த நினைவில் குழந்தையை இறுக அணைத்துக் கொண் டாள்...

மனதின் கனம் கண்களின் வழியாய் குறைய நினைத்து முயன்ற பின் தோற்றது.

இன்றோ... நாளையோ... தவித்துக் கொண்டிருந்தபோது அவனிடம் இருந்து தந்தி வந்தது. ''வருகிறேன்... எல்லாம் பேசி முடிவு செய்ய வேண்டும்.''

ஆயிற்று...

சரணை இழக்க வேண்டிய நேரமும் வந்துவிட்டது.

தன்னையும் அழைத்துக் கொண்டு செல்லும்படி கெஞ்சி னாலும் நடக்கப் போவதில்லை.

அவனுக்குத் திருமணம் நிச்சயித்தபோது தன்னை அழைத்துச் செல்ல இயலுமா?

ஒருவேளை... அதற்காகத்தான் வருகிறானோ... திருமண அழைப்பிதழைக் கொடுத்துவிட்டு குழந்தையுடன்...

ஒற்றைக்கு இரட்டை வலி... வேதனை... எதற்கு என்று வருந்த முடியும்... தன் வாழ்வு பறி போகிறது என்றா...? தன் குழந்தையை உயிருடன் பறிகொடுக்கிறோம் என்றா...?

எதற்கு...?

குழந்தையை என்னிடம் விட்டுவிடுங்களேன் என்று கெஞ்சினால்...

அவனைப் பிரிந்து உயிர் வாழ மாட்டேன் என்றால்... 'செத்து தொலை என்பான். நடத்தைக் கெட்டவள் இறந்து போனால் யாருக்கும் நஷ்டமில்லை' என்று குத்துவான்.

அதைக் காதில் வாங்கிக் கொண்டு இன்னும் துடிக்க வேண்டுமா?

துடிக்கும் நெஞ்சைக் கையில் பிடித்துக் கொண்டு அவனுக்காக காத்திருந்தாள்.

அவனும் வந்தான்.

அவனைப் பார்த்ததும் வயிற்றினுள் ஒரு நெருப்பு உருண்டை வலம் வந்தது.

பழைய உதய்சங்கராய் தெளிவுடன் - வலுவுடன் எதிர் நின்ற கணவனைப் பார்த்து உள்ளமும் உடலும் நடுங்கின.

''அதென்ன... என்னை முதன் முதலாய் பார்ப்பது போல வெறிக்கிறாய்.... என் தலையில் ஏதாவது புதியதாய் கொம்பு முளைத்திருக்கிறதா என்ன...?'' கிண்டலாய் கேட்டான், அவன்.

''உதய்... உங்களுக்கு வேண்டியது என்னோட சம்மதம்... அதையும் அனுப்பி வைத்து விட்டேன். என்னை என் குழந்தையோடு விட்டு விடக்கூடாதா? அதற்காகத்தானே என்னை ஓட ஓட விரட்டினீர்கள். உங்களுக்கு ஜெயந்தி இருக்கிறாள். எனக்கு என்று வேறு எந்த துணையும் இல்லை... என் குழந்தை மட்டும்தான்... ப்ளீஸ்... உங்களை கையேந்தி கேட்கிறேன். பிச்சை என்றே வைத்துக் கொள்ளுங்கள். என் குழந்தை எனக்கு வேண்டும்...'' ச்சே.. குரல் வேறு அழுகையில் முடிகிறது.

''எது... இந்த காகிதம்தானே...''

அவள் முன் கடிகாரப் பெண்டுலமாய் ஆட்டினான்.

அவனைப் பார்த்து விழித்தாள். ''ஏதாவது தவறா... வேண்டும் என்றால் திருத்தி தருகிறேன்'' என்றாள்.



''இதில் எல்லாமே சரிதான். ஆனால்...'' என்றவன் அதைக் கிழித்து சுக்குநூறாக்கினான்.

அவள் திகைத்து நின்றாள்.

எதற்காக தன்னை அலைகழித்தாளோ அதை அவளே தந்தபோது அதைக் கிழித்து விட்டானே.

இவன் மனதில் என்னதான் இருக்கிறது. இது ஏதாவது புது நாடகமா? புதுத் திட்டமா? எதுவானாலும் சரி... தன் குழந்தையைத் தரப் போவதில்லை.

''உதய்... நீங்கள் என்ன சொன்னாலும் சரி... சரணை விட முடியாது. அவனைப் பிரிந்து ஒரு கணமும் என்னால் உயிருடன் இருக்க முடியாது...'' அதைச் சொல்லும் போது கண்ணீர் கன்னத்தில் வழிய ஆரம்பித்தது.

''என்னாலும் முடியாது. நானும் முடிவுக்கு வந்து விட்டேன். ஆமாம் உன்னையும் என்னுடன் அழைத்துச் செல்லுவது என்றுதான்.''

''உதய்... இப்போது என்ன விளையாட்டு... குழந்தை விஷயமாய் பேசுகிறோம்.''

''நானும் அதையேத்தான் பேசுகிறேன். நீ குழந்தையை விட்டுப் பிரிந்து இருக்க முடியாது என்றாய். என்னால் உன்னை விட்டுப் பிரிந்து இருக்க முடியாது என்று சொல்கிறேன்... புரியவில்லையா சிந்து?'' ஏதோ புரியாத புதுமொழியில் அவன் பேசுவது போல அவள் மலங்க விழித்தாள், சிந்து.

12



குழம்பிக் குழம்பி தன் மூளையே மரத்து விட்டது போலத் தோன்றியது

சிந்துவிற்கு. தலையைச் சுற்றுவது போல இருந்தது. அவன் சொல்வதை அவளால் சரியாய் புரிந்து கொள்ள முடிய வில்லை.

விவாகரத்து என்றான்... தன் குழந்தை என்றான்... இப்போது உன்னுடன்தான் வாழ்க்கை என்கிறான்... அவனுக்கு ஏதாவது சித்தப்பிரமையா... இல்லை... பல யோசனைகளால் மூளையைக் கசக்கிப் பிழிந்ததன் பலன் தனக்கே சித்தப்பிரமையா...

"என்ன சொல்கிறீர்கள்...?" தொண்டையில் சிக்கித் தவித்த வார்த்தைகள் தடுமாறி வெளிவந்தன.

"இப்படி உட்கார்... சரண் தூங்கி விட்டானா...?"

தலையசைத்தாள்.

அவன் தன் பேண்ட் பையிலிருந்த கடிதத்தை எடுத்து தந்தான்.

கிரிஜா அவளுக்கு எழுதிய பழைய கடிதம்.

"உதய் வருகிறான்... எங்கேயாவது சென்றுவிடு" என்று எச்சரிக்கை கொடுத்த கடிதம் வியப்புடன் கேட்டாள். "எப்படி இது உங்கள் கையில்..."

"என் கண்ணில் பட்டது. சரணின் துணிகள் இருந்த கூடையில் விழுந்திருந்தது. சித்தியின் கையெழுத்தைப் பார்த்து என் ஆர்வம் கூடியது. படித்தேன். படித்த பின்பு எனக்கிருந்த சந்தேகம் தீர்ந்தது. யாரோ ஒருவர் அங்கிருந்து உனக்கு முன்பாகவே செய்தி அனுப்புகிறார்கள்... அதனால்தான் நான் வரும்போது நீ இங்கிருப்பதில்லை என்று தெரிந்து கொண்டேன்."



"அதனால்...?"

"அங்கு சென்றதும் சித்தியை உலுக்கிக் கேட்டேன். சித்தியும் ஒப்புக் கொண்டாள். அது மட்டுமல்ல; நடந்தது அனைத்தையும் அப்போதுதான் சொன்னாள். உன்னை விரட்ட என் தாயும், மாமனும் சேர்ந்து ஆடிய ஆட்டம் என்பதும் சித்தியின் மூலமாகத் தெரிந்தது. இன்னொரு விசயம்... அந்த ராஜவேலு உறவினர் இல்லை... என் மாமா விலை கொடுத்து வாங்கிய வாடகை உறவினர்... பணக்காரன் என்பது எல்லாமே பொய்தான்..."

"பின்னே... அந்த மலர்க்கொத்து... மோதிரம் எல்லாமே நாடகம்தானா...? அத்தையே அழைத்து ஆசையாய் கொடுத்தாரே என்று எண்ணியது தப்பு... அப்போ... அதற்கு பின் இத்தனை சதியா...?" அவளது குரலில் வியப்பும் திகைப்பும் தெரிந்தது.

"எல்லாம் மாமாவின் ஏற்பாடு... அது சரியாய் நடக்கிறதா என்பதை தெரிந்துகொள்ள அங்கேயே வந்து இருந்தாரே. இப்போது தெளிவாய் படுகிறது. அப்போது புரிந்து கொள்ளவில்லை. மலர்க்கொத்து வரும்போதும், கடிதம் வரும்போதும் அவர் அங்கு இருந்தார்."

"கடிதமா... அது என்ன...?"

"வேண்டாம்... அந்த விசயம்... நினைத்தால் குமட்டு கிறது. ச்சே... ஒரு பெண்ணோட வாழ்வை சீரழிக்க இருந்த என் தாயாரும் ஒரு பெண் தானா என்று நினைக்கவே கூசுகிறது."

மென்மையான பெண்மையின் மத்தியில் பேய்த்தனம் இருக்க சாத்தியமா... என்னால் நம்ப முடியவில்லையே

சிந்து... இருவர் முகத்தில் விழிக்கவும் கூடாது என்ற ஆத்திரம்... ஆனால் அது முடியாது... பெற்ற தாய் ஆகி விட்டாளே...''

அவன் மனம் குன்றி போயிருக்கிறான் என்று அவனது பேச்சில் தெரிந்தது.

அவனது கரத்தைப் பிடித்து மென்மையாய் அழுத்தினாள்.

''என்னை மன்னிப்பாயா, சிந்து...?''

சிரித்தாள் அவள். ''எப்போதோ மன்னித்து விட்டேன் உதய். அதுதானே பெண்மையின் பலவீனம்... ஆண்களின் பலம்...''

''சரியான நெற்றியடி... வேண்டும்தான் எனக்கு...''

மறுபடியும் சிரித்தாள். ''மேலே சொல்லுங்கள்... கிரிஜா வேறு என்ன சொன்னார்கள்...?''

''சித்திக்கு எப்பவோ சந்தேகமும் முளைத்ததாம். நான் எதற்காக உன்னைக் கோபித்தேன்... ஏன் எரிந்து விழுந்தேன் என்று புரியாமல் சித்தியிடம் சென்று நீ அழுததையும் சொன்னாள்'' சொல்வதை நிறுத்திவிட்டு அவளது கன்னத்தை வருடினான். பின் தொடர்ந்தான்.

''அதைக் கேட்டபோது எவ்வளவு வேதனைப்பட்டேன் தெரியுமா சிந்து... நான் பாவி. உன்னை எப்படியெல்லாம் அழ வைத்துவிட்டேன்.''

''நீங்கள் தெரிந்து செய்யவில்லையே... அவர்கள் செய்த சதியென்று உங்களுக்கு எப்படித் தெரியும்?''

''நீ சொல்வதும் உண்மைதான். எப்படி தத்ரூபமாக நடித்தார்கள். 'ஆர்' என்ற மோதிரம் 'ராஜவேலு' என்று



எண்ணி தடுமாறினேன்... என் மூளையில் அது 'ரமணி' யென்றும் குறிக்கும் என்று தோன்றாமல் போனது... அப்படி இருந்தது அம்மாவோட பேச்சு...''

''என்னாலும் நம்ப முடியவில்லை. அத்தை என்னை ஏற்றுக் கொண்டுவிட்டார் என்ற குஷியில் இதில் ஏதாவது தந்திரம் இருக்கும் என்று நினைக்காமல் இருந்து விட்டேன்.''

''நீ வீட்டை விட்டு சென்ற அன்றைக்கு நான் வீட்டுக்கே வரவில்லை சிந்து... நீ இல்லாத வீடு மயானம் போல தெரிந்தது. சித்தி எதேச்சையாய், மாமா என் அம்மாவிடம் ஜம்பமாய் பேசினதை கேட்டிருக்கிறாள். ''பார்த்தாயா ரமணி, என் சாமர்த்தியத்தை? எப்படி என் 'பிளான்?' எப்படி என்னுடைய 'செட்டப்..' பணத்தை தண்ணீராகல்லவா செலவழிச்சிருக்கேன்... யாரோ ஒருத்தனை உறவுன்னு சொல்லி நடிக்க வைச்சு ஓட ஓட விரட்டியடிச்சாச்சு அந்த கழிசடையை...'' என்றாராம்.

அதற்கு ''எல்லாம் உன் திட்டம்தானே... அதுவும் உதய்க்கு நம் மேல் துளியும் சந்தேகம் வராமல் செய்ததுதான் சாமர்த்தியம்... அன்றைக்கு இரவு உதய் வரும் நேரம் பார்த்து ராஜவேலு போய் சிந்து அறையில் ஒளிந்து கொண்டான் பார்... அப்போது எனக்கும் குலை நடுக்கம் தான். எல்லாம் நல்லபடியா நடக்குமா என்று. நல்ல வேளை நம்மேல் கடுகளவு சந்தேகமும் வராதபடி நடந்து முடிந்து விட்டது'' என்று என் தாய் பதில் சொன்னாளாம். சொல்லும்போது அவமானத்தில் உதய்யின் முகம் சிவந்தது.

பாவம்... எந்தத் தாயாரும் மகன் கூனிக் குறுகும்படியான செயலைச் செய்ததில்லை. தாய் என்றாலே யாருக்கும் முகத்தில் பெருமிதம்தான் தெரியும். ஆனால், உதய்க்கு... மனதினுள் அவனுக்காக பச்சாதாபப்பட்டாள்.

''பிறகு?'' என்று அவனைக் கேட்டாள்.

''அப்போதுதான் சித்திக்கும் தெரிந்தது... திட்டம் போட்டு ராஜவேலுவை உன் படுக்கைக்கு அனுப்பியிருக் கிறார்கள் என்று. நீயும் களைத்துப் போய் ஏதும் உணராமல் தூங்கியிருக்கிறாய். ராஜவேலுவின் உண்மை பெயர் வேலுதான். 'ஆர்' என்று வர ராஜவேலுவானான்.''

''இது எதுவும் அறியாமல் குழம்பிக் கொண்டு இருந் தேன்... ஆமாம், சித்தியும் இந்த விசயத்தை உங்களிடம் உடனே ஏன் சொல்லவில்லையாம்?'' என்று கேட்டாள் சிந்து.

''அதுவும் கேட்டுவிட்டேன். அன்றைய மனநிலையில் நான் எதையும் காதில் போட்டுக் கொள்ள மறுத்திருப்பேன் என்றார். அந்த அளவு என் மூளை மழுங்கிப் போயிருந்த தாம்...''

''அது மட்டுமில்லேப்பா... நான்தான் சிந்துவிற்கு உடந்தையாய் இருந்து உன் தாய் மீது கதை கட்டுகிறேன் என்று என் மேல் பாய்ந்திருப்பாய் என்றும் கூறினார். அத்தனையும் உண்மை.''

''அதற்கு பின்பாவது விளக்க முயன்றிருக்கலாம்... ஜெயந்திக்கும் உங்களுக்கும் திருமணம் வரை வந்து விட்டதே... விவாகரத்து விசயமாய் என்னைப் பார்க்க



நீங்கள் வந்ததும் சித்திக்கும் தெரியுமே...'' தன் சந்தேகத்தை அவனிடம் கேட்டான்.

''நான் சித்தியிடம்தானே எல்லாம் சொல்வது... அம்மா விடம் மனம் விட்டுப் பேசுவதில்லையே... இப்போது கேட்டால் எனக்குத் தெரியும் உதய் கண்ணா... நீ ஜெயந்தியை மணக்க மாட்டாய்... இன்னும் உன் மனதில் இருப்பது சிந்துதான். இன்னும் சிந்துவேதான். உன் சிந்து மேல் இருக்கும் காதல் செத்தால் தானே ஜெயந்தியை உன் மனம் ஏற்றுக் கொள்வது... அதற்குதான் நான் தட்டி உன்னை எழுப்புவதைவிட நீயாய் கண் விழித்துப் பார்க்க வேண்டும் என்று விட்டுப் பிடித்தேன் என்றாள் சித்தி'' என்றவன் சிரித்தான்.

''ஏன் சிரிக்கிறீங்க?'' புரியாமல் கேட்டாள்.

''என்னை நன்றாய் புரிந்து வைத்திருப்பது என் சித்தி தான். நீயும் என்னைப் புரிந்து கொண்டிருக்க மாட் டாய்...''

''நீங்களும்தான்... நான் அந்த அளவு இழிவான செயல் செய்வேனா என்று நினைக்காமல் உடனே நம்பி விட்டீர்களே...'' அவனையே திருப்பிக் கேட்டாள்.

''தப்புதான் சிந்து... அதற்கு மன்னிக்க வேண்டுகிறேன். இனி என் வாழ்க்கையில் நீயும் சரணும்தான்'' உறுதியுடன் சொன்னான் அவன்.

''ஜெயந்தி...?''

''குறும்பா... ஏதோ அவள் மேல் பாசம் இருப்பது போலத்தான். பாவம்... அன்றைக்கு நீ கொட்டினாயே

சூடான ரசம்... அந்த அதிர்ச்சியில் இனி நம் பக்கம் எட்டியும் பார்க்க மாட்டாள்...''

அவன் பார்த்து விட்டான் என்று தெரிந்ததும் அவளுக்கு வெட்கம் வந்து விட்டது.

''சாரி... உதய்...'' என்றாள் அவனிடம்.

''எதற்கு...? அந்த நிகழ்ச்சியில்தானே சந்தோஷம் அடைந்தேன். என்னை இன்னும் நேசிக்கிறாய் என்று தெரிந்து... நான் போன பின்பு சரணும் தேடினானா?''

''ஆமாம்... இந்த இரண்டு வருடங்களில் நீங்கள் காட்டாத அன்பை இனி ஈடு செய்ய வேண்டுமாக்கும்...''

''இதோ, ஆரம்பம்'' அவளை இழுத்து அணைத்துக் கொண்டான்.

''அய்யே... நான் சொன்னது குழந்தைக்கு...''

''முதலில் உனக்கு... பிறகு அவனுக்கு... பாரேன் இரு வரும் என் அன்பில் திக்குமுக்காடப் போகிறீர்கள்'' என்று கூறி தன் அணைப்பை இறுக்க...

உண்மையில் கரங்களின் இறுக்கத்தில் மகிழ்ச்சியுடன் தவித்துப் போனாள் சிந்து.